கல்கி

KALKI 10.9.89 ரூ. 2.50







கலைஞர் ஆட்சி கலைக்கப்படுமா?



அழகுமிகு கோ-ஆப்டெக்ஸ். அதை அணிந்திருப்பது யாரென்று பாருங்கள்!

அலை அலையாய் வண்ணங்கள். அழகழகாய் பார்டர்கள். பொலிவுடன் கூடிய உங்கள் புதிய தோற்றத்தில் நீங்கள் பெருமிதம் கொண்டு மகிழ்வீர்கள் — தமிழ்நாடு கைத்தறித் துணிகளில்...

பருத்தி, பாலியெஸ்டர், பட்டுப்புடவைகள் / சர்ட்டிங் / சூட்டிங் / திரைச்சீலைத் துணிகள் / படுக்கை விரிப்புகள் / துவாலைகள் / வேட்டிகள் / லுங்கிகள்.




கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனைக் கைத்தறி வகைகள்

DIPR 1089/MS/89/HTA

"அடிவிட்டார், ராஜீவ் அடிவிட்டார்!"



• சிங்: தேசிய முன்னணிதான் உண்மையான தேசியக் கட்சி.

அண்மையில் சென்னை வந்திருந்த வி. பி. சிங் 'கல்கி'க்கு அளித்த சிறப்புப் பேட்டி:

கல்கி: ராஜீவ் காந்தியைப் பதவியிலிருந்து இறக்க வேண்டும் என்பதுதானே தற்போதைய எதிர்க்கட்சிகள் இணைப்பின் ஒரே நோக்கம்?

வி. பி. சிங்: தேசிய முன்னணி அந்த ஒரே நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது இல்லை. தேசிய முன்னணிக்கெனத் திட்டங்களும், கொள்கைகளும் உண்டு. நாடு இன்றைய தினம் இருக்கிற மோசமான நிலைமையிலிருந்து, அதனை மீட்க வேண்டும் என்கிற பாசிடிவ் நோக்கம் கொண்டது தேசிய முன்னணி.

கல்கி: தேசிய முன்னணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளுக்கிடையே, பல்வேறு விஷயங்களிலும் ஒத்துப் போகாத நிலைமை இருக்கிறதே?

வி. பி. சிங்: கொள்கை அளவில், தேசிய முன்னணியில் இடம் பெறும் பல்வேறு கட்சிகளும் ஒன்றுபட்டு, எழுபத்தோரு அம்சத் திட்டம் ஒன்றை வரையறுத்துக் கொண்டிருக்கிறோம். அது விஷயத்தில் எந்தக் குழப்பமும் இல்லை. மற்ற விஷயங்களைப் பெரிதுபடுத்த வேண்டியதில்லை. வெகு எளிதில், பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

கல்கி: காங்கிரஸ் கட்சிக்கு மாற்று என்று கருதி எதிர்க்கட்சிகளை மறுபடியும் ஆட்சியில் அமர்த்தினால், ஜனதா மந்திரிசபை போல, இதுவும் சிதறிப் போகாது என்று எப்படி உறுதியாய்ச் சொல்ல முடியும்?

வி. பி. சிங்: அன்றைய நிலவரத்துக்கும், தற்போதைய சூழ்நிலைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. அப்போது எமர்ஜென்ஸி காரணமாக இந்திரா காந்தி எதிர்ப்பு அலை கடுமையாய் இருந்தது. எதிர்க்கட்சிகள் ஓர் அவசரத்துடன் குறுகிய கால கட்டத்தில் இணைந்தன. ஆனால், இப்போது, தேர்தலுக்குப் பல மாதங்களுக்கு முன்பாகவே, எதிர்க்கட்சிகளிடையே, 'அண்டர்ஸ்டாண்டிங்' வந்துவிட்டது. மேலும், ஜனதா மந்திரிசபை போல, தேசிய முன்னணியின்



• சென்னைப் பொதுக் கூட்டத்தில் தேசிய முன்னணித் தலைவர்கள்.

சிதறல்கள்:

○○ வி.பி. சிங்கைப் பார்க்க வந்த ஜனதாதளப் புள்ளிகள், ஒருவரைப் பற்றியொருவர் கோள் மூட்டினதுடன் அவர் முன்னிலையிலேயே கார சாரமான வாக்கு வாதங்களிலும் ஈடுபட்டது, அவருக்கே என்னவோ போல இருந்தது.

○○ தொண்டர்களுடன் போட்டோவுக்கு நின்ற வி.பி. சிங்கை, போட்டோகிராபர், நடுநாயகமாய் நிற்கச் சொன்னதும், "Oh! you want me at the centre!" என்று உள் அர்த்தத்துடன் கூறிச் சிரித்தார்.

○○ "பாவம் ராஜீவ்," "ராஜீவ் ஓடிப் போய்விட்டார்," போன்ற தமிழ் வார்த்தைகளைத் தம் பேச்சில், தக்க இடங்களில் சேர்த்துக் கைதட்டல் பெற்றார் வி.பி. சிங்.

○○ "பந்த்தில் பயப்படாமல் கலந்து கொள்ளுங்கள். இந்த அரசாங்கம், உங்களை அதற்காகப் பழிவாங்கினால் அடுத்துவரும் எங்கள் அரசாங்கம், அதை நீக்கிவிடும். எனவே கவலைப் படாதீர்கள்" என்றார் வி.பி. சிங்.

○○ என்.டி.ஆர். பேச ஆரம்பித்ததும், மக்கள் மத்தியில் பயங்கர 'ரெஸ்பான்ஸ்.' கலைஞருக்கு அடுத்தபடி அதிகம். தெலுங்கில் பேச ஆரம்பித்துப் பின், தெலுங்கு வாடை வீசிய தமிழில் பாரதியார் கவிதைகளையெல்லாம் மேற்கோள் காட்டிப் பேசினார் என்.டி.ஆர்.

தொகுப்பு: ஜூலி

மந்திரிசபை ஆகிவிடக் கூடாது என்பதில் நாங்கள் அனைவருமே மிகவும் கவனமாய் இருக்கிறோம். எதிர்க்கட்சிகளுக்கு 'மெச்சூரிட்டி' வந்திருக்கிறது. இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். தேசிய முன்னணி தான் உண்மையில் தேசியக் கட்சி. ஏனெனில் நாட்டின் பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த கட்சிகளின் தலைவர்கள் இதிலே இருக்கிறார்கள். கருணாநிதி, ஹெக்டே, ராமராவ், ஜோதிபாசு, தேவிலால், மகந்தா என்று பலரையும் கொண்டது தேசியக் கட்சியா, ராஜீவை மட்டுமே, நம்பியிருக்கும் காங்கிரஸ் தேசியக் கட்சியா?

கல்கி: உங்களால் நிலையான ஆட்சியைத் தர முடியும் என்று மக்களை எப்படி நம்ப வைப்பீர்கள்?

வி. பி. சிங்: அதில் கஷ்டமேயில்லை! எதிர்க்கட்சிகள் ஆளும்மாநிலங்களில்தானே இன்று ஆட்சி நிலையாய் இருக்கிறது! காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில்தான் ஆட்சி நிலையற்றதாக உள்ளது. முதலமைச்சர் மாற்றம், மந்திரிசபை மாற்றம் என்பதெல்லாம் அங்கு வாடிக்கையான விஷயங்களாகி விட்டன. சட்டம்—ஒழுங்கு நிலைமை ஆந்திராவில் சரியில்லை என்கிறார் ராஜீவ் காந்தி. காங்கிரஸ் ஆளும் மாநிலங்கள் ஏதையும் விட, ஆந்திராவில் சட்டம் ஒழுங்கு மிக நன்றாகவே பாதுகாக்கப்படுகிறது. ஜனாதிபதியின் நேரடி ஆட்சியில் உள்ள பஞ்சாபில் சட்டம் ஒழுங்கு எப்படி இருக்கிறது? வன்முறையில் பலியாகிற அப்பாவிகள் எத்தனை பேர்? இவை எல்லாம் மக்களுக்குத் தெரியாதா என்ன?

கல்கி: தமிழ்நாடு ஜனதா தளத்தில் ஏகப்பட்ட குழப்பங்கள் நிலவுகின்றனவே?

வி. பி. சிங்: ஏழு நபர் குழு ஒன்று அமைத்திருக்கிறோம். ஆரிப் முகமது கான்தான் அதன் கன்வீனர். அவர்கள் இந்தப் பிரச்னைக்கு விரைவிலேயே ஒரு தீர்வு காண்பார்கள்.

கல்கி: நீங்கள் காங்கிரஸில் இருந்த வரை சும்மா இருந்துவிட்டு, வெளியேற்றப்பட்ட பின் ராஜீவ் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்குகிறீர்கள் என்கிற பேச்சுக்கு உங்கள் பதில் என்ன?

வி. பி. சிங்: நான் நிதியமைச்சராய் இருந்த போது, இந்த ஊழல்கள் பற்றி அறிய எனக்கு வாய்ப்பில்லை. பாதுகாப்பு அமைச்சராய் ஆன போதுதான் நீர்மூழ்கிக் கப்பல் ஊழல் வெளியாயிற்று. அதைப் பற்றி ஆராய உத்தரவிட்டதும், நான் காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டேன். பச்சன்மீதும், ரிலையன்ஸ் மீதும் நடவடிக்கை எடுக்க முற்பட்டது அவருக்குப் பிடிக்கவில்லை. வெளியேற்றி விட்டார்.

கல்கி: உங்களை டெலிவிஷன் விவாதத்துக்கு அழைத்த ராஜீவ், பிறகு பின் வாங்கக் காரணமென்ன?

வி. பி. சிங்: ராஜீவ் காந்தி எந்த விஷயத்தில்தான் பின்வாங்கவில்லை...? பாராளுமன்றத்தில், போஃபர்ஸ் பற்றிய விவாதத்திற்கு அழைத்தபோது நழுவி ஓடிவிட்டார்! தக்கர் கமிஷன் அறிக்கையை விவாதிக்க வேண்டுமென்று கேட்ட போது நழுவி ஓடினார்! அதே போலத்தான், இப்போது, டீ.வி. யில் விவாதத்திற்கு அவரே அழைத்தும் கூட நான் ஒப்புக் கொண்டபின் நழுவி ஓடிவிட்டார்! (சிங், சிரிக்கும்போது வாயினுள்ளே தங்கப்பல் தெரிகிறது) இவை மட்டுமல்ல. இப்போது, 'இந்திராஜி, இந்திராஜி' என்கிறாரே, அந்த இந்திராஜிக்கு இக்கட்டு வந்த சமயத்திலும் இவர் இத்தாலிக்குப் புறப்படுவதில்தான் தீவிரமாய் இருந்தார்!

கல்கி: சுப்பிரமணியம் சுவாமியின் நடவடிக்கைகள் குறித்து...?

வி. பி. சிங்: அவரைப் பற்றி நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை. அவரைப் பற்றி மக்களுக்குத் தெரியும்; அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்!

பேட்டி: **எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **சுபா**



* T.72 ரக டாங்கு...

முப்பது மாதத் தாமதம்; இரண்டரைக் கோடி நஷ்டம்!

ஆவடி டாங்க் தொழிற்சாலையில் T-72 ரக டாங்க்குகள் தயாரிக்கிறார்கள். இதற்கான தொழில்நுட்ப நிபுணர்கள் வெளி நாட்டிலிருந்து வந்திருக்கின்றனர். இந்தத் தொழில் நுட்ப அறிஞர்களுடன் மொழி பெயர்ப்பாளர்களும் வந்திருந்தனர். இவர்கள் இங்கே வந்து தங்கவும், நமது நிபுணர்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் ஆலோசனைகள் அளிக்கவும் இந்திய அரசு இரண்டு ஒப்பந்தங்கள் செய்து கொண்டது. முதலில் 1980 லும், பிறகு 1982 லும் இந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

இதன்படி, செப்டம்பர் 83 லிருந்து அயல் நாட்டுத் தொழில் நுட்ப நிபுணர்களும் மொழிபெயர்ப்பாளர்களும் இங்கே வரத் தொடங்கினர். அறுபது நிபுணர்கள் சென்னை நகரில் ஓட்டலில் தங்குவது என்றால்ஏராளமாகச் செலவாகும். எனவே, அவர்கள் தங்குவதற்கு ஏற்ற வசதியான குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுத்துவிடுவது என்று தீர்மானம் செய்தது அரசு. ஆனால், கட்ட அனுமதி கொடுத்ததோ, செப்டம்பர் 85 ல்தான். அனுமதி கொடுத்த அறுபத்தைந்து வாரங்களுக்குள் (பதினைந்து மாதங்களுக்குள்) குடியிருப்புகள் தயாராகிவிட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பன்னிரண்டு டைப்–4 குடியிருப்புகளும், விஸ்தாரமான ஹாஸ்டல் ஒன்றும் கட்ட, காண்ட்ராக்ட் விடத் தீர்மானம் செய்யப்பட்டு, 1986 மே மாதத்துக்குள் முடிக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது.

மே மாதம் இல்லாவிட்டாலும், ஆகஸ்ட் மாதமாவது டைப்–4 குடியிருப்புகள் தயாராகிவிட்டன. பிப்ரவரி 87 ல் ஹாஸ்டல் தயாராகி விட்டது. ஆனால் தொழில்துறை நிபுணர்களும், மொழிபெயர்ப்பாளர்களும் மே 87 ல்தான் குடியேறினர்!


அதுவரை எங்கே இருந்தார்கள் அவர்கள்?

அங்கேதான் பிரச்னையின் மையமே இருக்கிறது.

தொழில்துறை நிபுணர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் — அத்தனை பேரும் ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்கியிருந்தார்களாம்!

வெளிநாட்டுத் தொழில்நுட்பத்துடன் புதுவகை ஆயுதத் தயாரிப்புக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டதோ ஜூலை 82 ல். செப்டம்பர் 83 ல் தொழில் நுட்ப நிபுணர்களும், மொழி பெயர்ப்பாளர்களும் வரத் தொடங்கி விட்டனர். டிசம்பர் 83 ல்தான் நிர்வாகம் விழித்துக் கொண்டு, இவர்களுக்கு இருப்பிடம் கொடுத்தாக வேண்டுமே என்ற உண்மையை உணர்ந்தது!

சரி, தாமதமாக உணர்ந்ததுதான் போகட்



அவர்: "என்ன சார் இது...? 'வெற்றி வேல்' 'வீர வேல்'னு கிளினிக்ல இருந்து சத்தம் வருது?"

இவர்: "வேறொன்னுமில்லை... ஆபரேஷன் செய்யக் கிளம்பற டாக்டரை ஊழியர்கள் இப்படி ஜெயகோஷம் போட்டு உற்சாகப்படுத்தி அனுப்பறது இங்கே வழக்கம்!"

— கமுதி எஸ். சேதுராமன்.

டும். குடியிருப்புகள் கட்ட, பாதுகாப்பு அமைச்சகம் அனுமதி வழங்கியது எப்போது தெரியுமோ? செப்டம்பர் 85 ல்தான்! அதாவது இருபத்தியொரு மாதங்கள் கழித்து.

மே 86 ல் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டும் கூட, அவை பல விதங்களில் திருப்திகரமாக இல்லை என்றார்கள்; வசதிகள் போதாது என்றார்கள். எல்லாக் குறைபாடுகளையும் சரி செய்து முடித்த போது கிட்டத்தட்ட ஒன்பது மாதங்கள் ஓடிவிட்டன.

ஆக மொத்தம் முப்பது மாதங்கள் தாமதம்.

வெளிநாட்டுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, இந்தத் தொழில் நுட்ப நிபுணர்களுக்கும் மொழிபெயர்ப்பாளர்களுக்கும் ஐரோப்பிய பாணிச் சாப்பாடு மூன்று வேளை போட்டாக வேண்டும். இதற்காக அவர்களிடமிருந்து ஒரு நாளைக்குப் பதினொரு ரூபாய் மட்டுமே வசூலிக்கப்பட்டதாம். குழந்தைகள் என்றால் ஐந்தே ரூபாய் தான்!

புதிய குடியிருப்புக்கு இவர்கள் வந்தவுடன், தங்களுக்கு இலவசமாக உணவுப் பண்டங்கள் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அதற்கு ஒப்பந்தத்தில் தெளிவாக எதுவும் இல்லை என்று கையை விரித்தது இலாகா. சம்பந்தப்பட்ட துறைக்கு எழுதினார்கள். (பிப்ரவரி 89 வரை பதில் கிடைத்ததாகத் தெரியவில்லை.)

ஆக, 1. கிட்டத்தட்ட முப்பது மாதங்கள் தாமதமானதில் அரசுக்கு நஷ்டம் 220 லட்சம் ரூபாய். அதாவது, அறுபது பேருக்கு முப்பது மாதத்துக்கு, தலா ரூ. 12,250 வீதம் ஹோட்டல் பில் மட்டும் இரண்டு கோடியே இருபது லட்ச ரூபாய்.

2. இந்த முப்பது மாதங்களில் தொழில் நுட்ப நிபுணர்களையும் மொழிபெயர்ப்பாளர்களையும், அவர்கள் தங்கியிருந்த நகரின் ஓட்டலிலிருந்து தொழிற்சாலைக்குக் கூட்டிக் கொண்டு வந்து கொண்டு போய் விட, மாதம் சுமார் பதினாறாயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது.

3. ஓட்டலில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு, சுமார் 195 ரூபாய் சாப்பாட்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசுக் குடியிருப்புக்கு மாறிய பின் 90 ரூபாயே செலவாயிற்றாம். ஆக, முப்பது மாதங்களுக்கு அறுபது பேருக்குத் தலா நூறு ரூபாய் வீதம் இந்த வகையில் மட்டும் அரசுக்குச் சுமார் பதினைந்து லட்ச ரூபாய் நஷ்டம்.

போக்குவரத்துச் செலவைக் கூட்டாமலே 235 லட்ச ரூபாய் நஷ்டம் ஆகியிருக்கிறது.

ஒப்பந்தம் செய்யப்படும் போதே, வரப்போகிற தொழில்நுட்ப நிபுணர்களையும், அவர்களுடன் வரும் மொழிபெயர்ப்பாளர்களையும் தங்க வைக்க வேண்டிய இடப் பிரச்னை பற்றி முன்கூட்டியே, முன்யோசனையுடன் சிந்தித்துச் செயல்பட்டிருந்தால், அரசுக்குச் சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் நஷ்டம் வந்திருக்குமா?

இதற்குக் காரணம் மெத்தனமும், தாமதமும் மட்டுமே. இல்லை என்றால் டிசம்பர் 83 முதல், செப்டம்பர் 85 வரை இருபத்தோரு மாதங்களுக்கு, இருப்பிடம் கட்ட அனுமதி வழங்காது இருந்ததற்குக் காரணம் என்னவென்று சொல்லுவது?


இதுகுறித்து சி. ஏ. ஜி. ஜூலை பதினோராம் தேதி எழுதிய கடிதத்துக்கு, இதுவரை நிறுவனம் பதில் ஏதும் அனுப்பவில்லை என்று தெரிகிறது!

இன்னொரு சுவாரசியமான செய்தியும் காதில் விழுகிறது.

வெளிநாட்டு நிபுணர்களுக்கு ஹாஸ்டலில் உணவு சப்ளை செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நிறுவனத்தைச் சேர்ந்த பெண்மணி, ஒரு பக்கம் வெளிநாட்டு நிபுணர் குழுவின் தலைவரையும், இன்னொரு பக்கம் தொழிலகத்தின் அதிகாரிகள் இருவரையும் கைக்குள் போட்டுக் கொண்டாராம். இவருடைய பாமெல்லா பாணி நடவடிக்கைகளுக்கு உதவப் பம்பாயிலிருந்தும் சில பெண்கள் தருவிக்கப் பட்டனராம்! இதெல்லாம் ராணுவ செக்யூரிட்டிக்கு ஆபத்தில்லையோ? மேலும், 'நிறுவனத்தின் டிரான்ஸ்ஃபர் கொள்கையை அமல்படுத்துகிறோம்' என்று கூறிக் கொண்டு டாங்குகள் தயாரிப்பில் அனுபவம் இல்லாதவர்களை எல்லாம் இங்கே மாற்றி இருப்பதாகவும் கூறப்படுகிறது. T-72 டாங்குகளின் தரம் எப்படி இருக்கும் என்று இந்தப் பின்னணியில் யோசித்துப் பார்க்க வேண்டும்!

— நமது நிருபர்

ஊங்கள் குழந்தைக்கு ஊட்டுங்கள் காய்கறிகளின் சிறந்த சத்தூட்டத்தை!



முன்பே-பக்குவப்படுத்தப்பட்ட

ஃபாரெக்ஸ்®-வெஜ்



6 மாதம் முதல்

புதிய ஃபாரெக்ஸ்-வெஜ். இது, வைட்டமின் வளம் செறிந்த காய்கறிகளான காரட், தக்காளி மற்றும் பச்சைப் பயற்றின் இயற்கையான ஊட்டச்சத்துக்களைக் கொண்டதாகும்.

இது, நன்றாக, முன்பே - பக்குவப்படுத்தப்பட்டது. ஆகவே இது, குழந்தையின் மென்மையான வயிற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றதாகும்.

ஃபாரெக்ஸ்—சுவையுடன் வளரும் வழி!



இதோ ஃபாரெக்ஸ் வளர்ச்சி வழி: 1. பால் சேர்த்த ஃபாரெக்ஸ் சீரியல் 2. ஃபாரெக்ஸ்-வெஜ் 3. ஃபாரெக்ஸ்-எக்

GX/57/203 TML

கலைஞர் ஆட்சி கலைக்கப்படுமா?

—வாழப்பாடி விளக்குகிறார்

கேள்வி: நீங்கள் தமிழக இ. காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்ட போது இருந்த சூழ்நிலை என்ன? கட்சியைத் தமிழகத்தில் வளர்க்க என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளீர்கள்?

வாழப்பாடி ராமமூர்த்தி: காமராஜ் அவர்கள் இருந்த போது, காங்கிரஸை, மக்கள் இடதுசாரி மனப்பான்மை கொண்ட முற்போக்கான கட்சியாகப் பார்த்தார்கள். ஆனால் அதன் பிறகு காங்கிரஸ், பணக்காரர்கள், தொழிலதிபர்கள், மற்றும் பஸ் முதலாளிகளின் கட்சியாகி விட்டது. மக்களுக்கும் கட்சிக்கும் சம்பந்தம் இல்லாத நிலை ஏற்பட்டு விட்டது. கசப்பான இந்த உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கும் கட்சி என்ற எண்ணத்தை மக்களுக்கு ஏற்படுத்தக் காங்கிரஸ் தவறி விட்டது. தேர்தலில் கூட்டணிகள் ஏற்படுவது சகஜம் தான். ஆனால் தேர்தல் முடிந்த பிறகு அவரவரும் தத்தம் கட்சியை வளர்க்கும் வேலையில் இறங்க வேண்டும். காங்கிரஸ் இந்த விஷயத்தில் தவறி விட்டது என்பது வருந்தத்தக்கது. பல ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள் சரியாக இயங்கவில்லை. ஒரே தலைவர் பல ஆண்டுகளாக நீடித்து வந்ததால் மாவட்டங்களில் மந்த நிலை ஏற்பட்டது. இதனால் கட்சியின் வலிமை குன்றிப் போய் மக்களின் இயக்கமாகப் பரிமளிக்கக் காங்கிரஸ் தவறி விட்டது. மாநிலத் தலைவர்கள் இதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. தற்போது இந்தக் குறைகளைத் தவிர்த்து எதிர்காலத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. பெரும்பாலான மாவட்டத் தலைவர்கள் மாற்றியமைக்கப்பட்டு இருக்கிறார்கள். தொண்டர்கள் தலைவர்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

பல்வேறு தரப்பினரது கருத்தினை அறிந்த பிறகு மேலிடம் நியமிக்கும் தலைவரை 'நியமனத் தலைவர்' என்று கூறுவதே சரியல்ல. தவிர, தமிழகத்தைப் பொறுத்த வரை காங்கிரஸில் தனிப்பட்ட தலைமை என்று உண்டாவதும் கஷ்டம்தான். கூட்டுத் தலைமை மூலம்தான் கட்சியை வளர்க்க முடியும். ஒவ்வொருவரும், மற்றவரது திறமையை மதித்து அங்கீகரிக்க வேண்டும்.

கேள்வி: தமிழக காங்கிரஸில் மூப்பனார் முதற்கொண்டு, அவர் தலைவராக இருந்த போது கூட இருந்து செயல்பட்டு வந்த கட்சித் தலைவர்கள் பிரிந்தே செயல்படுகிறார்களே!

பதில்: ஏதோ ஒருசில தலைவர்கள் கட்சியின் செயல்பாடுகளில் கலந்து கொள்ளாது போவதால் கட்சியின் வளர்ச்சி பாதிக்கப்படப் போவதில்லை. பதின்மூன்று தடவை பிரதமரை வரவழைத்தும் காங்கிரஸ் இங்கு வெற்றி பெறாததற்குக் காரணம் தேர்தலை நடத்திய மாநிலத் தலைமைதானே தவிர கட்சித் தலைவர் அல்ல. அப்படி கட்சி தோல்வியடைந்த பிறகு மற்றொருவரிடம் பொறுப்பை ஒப்படைத்து விலக வேண்டியதுதானே! கட்சித் தலைமை வேறொரு தலைவரை நியமிக்கும் போது, அதுவரை கட்சியில் எல்லாவற்றையும் அனுபவித்தவர்களுக்குக் கோபம் வருகிறது. ஏதோ அவர்கள் வீட்டுச் சொத்தை அபகரித்துப் போய் விட்டார்கள் என்ற மனப்பான்மையுடன் அவர்கள் இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை எல்லோரையும் கலந்து பேசித்தான் விஷயங்களை முடிவு செய்கிறேன். மேலும் ஒரு சில தலைவர்கள் விலகி நிற்பதால் கட்சிக்கு ஒன்றும் பாதகம் அல்ல. அவர்கள் என்னை எதிர்ப்பதாக நான் நினைக்கவில்லை. கட்சியையும், காங்கிரஸ் தலைமையையும் எதிர்ப்பதாகத்தான் நான் கருதுகிறேன். மிகவும் தெளிவாக அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வதெல்லாம் என்னவென்றால் 'உங்களுக்காகக் கட்சி காத்துக் கொண்டிருக்காது; காலப் போக்கில் நீங்கள் தனிமைப்படுத்தப்படுவீர்கள்' என்பதுதான்.

கேள்வி: தேர்தலுக்குத் தேர்தல் கழகங்களின் முதுகில் சவாரி செய்வது காங்கிரஸுக்கு வாடிக்கையாகி விட்டது. எதிர்காலத்தில் எப்படி?

பதில்: தற்போதுள்ள சூழ்நிலையில்

இன்னும் சில வருடத்துக்குக் கூட காங்கிரஸ் தனித்து நிற்கும் தகுதியைத் தமிழகத்தில் பெறுமா என்பது சந்தேகமே! எனக்குப் போலித்தனமாகப் பேசி வழக்கமில்லை. எங்களது முதல் எதிரி தி. மு. க.தான். அதை வீழ்த்துவதுதான் எங்கள் குறிக்கோள். அவர்களை வீழ்த்திய பின் காலப்போக்கில் மற்றவர்களைச் சமாளிப்பது என்பது பெரிய விஷயமல்ல!

கேள்வி: வரும் பாராளுமன்றத் தேர்தலில் தி. மு. க. வுடன் கூட்டணி வருமா? அந்த ரீதியில் டெல்லியில் சிலர் செயல்படுவதாகச் சொல்கிறார்களே!

பதில்: தி. மு. க.வுடன் கூட்டுச் சேரகிறது. ஆனால் கூட்டைப் பற்றி இறுதி முடிவெடுப்பது கட்சித் தலைமைதான். அதன் முடிவுக்கு நான் கட்டுப்படுபவன்.

கேள்வி: கலைஞர் ஆட்சியைப் பற்றி உங்கள் கருத்து?

பதில்: வரும் பாராளுமன்றத் தேர்தலை மனத்தில் வைத்துக் கொண்டு செயல்படுகிறார். பல சமுதாய நலத் திட்டங்களை எம்.ஜி..ஆர். கொண்டு வந்த போது கேலி செய்தவர் — இப்போது அவைகளைத் தாமே செய்கிறார். தி. மு. க. வின் ஆட்சியில் சமுதாயத்தின் எந்தப் பிரிவினர் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்? அரசு ஊழியர்கள் வேண்டுமானால் சந்தோஷமாக இருக்க



வேண்டும் என்று தமிழக காங்கிரஸில் இன்னும் சிலர் விரும்புகிறார்கள் என்பது உண்மைதான். டெல்லியில் பல வருடங்கள் இருந்து. அதனால் பெற்ற செல்வாக்கினைத் தவறாக உபயோகிக்க நினைக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை பாராளுமன்றத் தேர்தலில் தி. மு. க.வுடன் கூட்டணி வராது. பிரதமர் மிகவும் தெளிவாகவே இருக்கிறார். மேலும் அ. இ. அ. தி.மு.க.வுடன் அமையும் கூட்டணிதான் இயற்கையாக இருக்கும் என்பது என் கருத்து. இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸுடன் கூட்டணி வைத்தால்தான், அ.இ.அ.தி.மு.க.வுக்கே புதுப் பலம் வருலாம். அவர்களின் சம்பள உயர்விலும் பல விதக் குளறுபடிகள் உள்ளன. பஸ் கட்டணம் ஏற்ற இருக்கிறார்கள். மின் கட்டணத்தைக் 'கப்சிப்' பென்று ஏற்றி விட்டார்கள். காலாண்டுத் தேர்வு வரப் போகிறது; இன்னும் பாடப் புத்தகங்கள் தயாராகவில்லை. சினிமா அதிபர்களை மகிழ்விக்கத் தியேட்டர் கட்டணங்களை உயர்த்தி விட்டார்கள். வெளிமார்க்கெட்டில் அரிசி விலை ஏறிக் கொண்டே போகிறது. ரேஷன் கடையில், ஒன்று இருந்தால் இன்னொன்று இல்லை.

கேள்வி: மூப்பனார் தி. மு. க. ஆட்சியின் சில திட்டங்களைப் பாராட்டி இருக்



"தலைவரோட மனைவிக்கு ஒரே சமயத்துல ஐந்து குழந்தைகள் பிறந்திருக்காம்!"

"அப்படியா! தலைவர் என்ன சொல்றார்?"

"ரீ — கவுண்டிங் கேட்கிறார்!"

— எஸ். முகம்மது யூசுப்.

"அந்த எம். எல். ஏ. பழங்கால மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதற்காக ஆனாலும் இப்படிப் பண்ணக் கூடாது!"

"ஏன், என்ன பண்ணிட்டார்?"

"அவர் வீட்டின் முன் ஆராய்ச்சி மணி அமைத்திருக்கிறார்!"


— எம். ஆர். எம். நாகப்பன்.



ஸ்வீட் கடை முதலாளி: நான் வீட்டுக்குப் புறப்படும்போது ஸ்வீட் ஸ்டாலில் தட்டில் இருந்த மைசூர் பாகில் இப்ப ஒண்ணைக் கூடக் காணோமே, அத்தனையும் சேல்ஸ் ஆயிடுச்சா?

உதவியாளர்: நீங்க போனதும் தெருவில் ஒரு கலாட்டா! நம்ம தெருவில் கல் அகப்படாததாலே ரௌடிங்க மைசூர் பாகைத் தட்டோடு தூக்கிட்டுப் போயிட்டாங்க!

— சுரம்.



கிறாரே?

பதில்: அவருக்கு எதைப் பற்றியும் குறைத்துப் பேசுவதோ, குறை கூறிப் பேசுவதோ தெரியாது. ஒருவேளை சட்டமன்றக் காங்கிரஸ் தலைவராக இருப்பதால் என்னை விட அவர் அதிகமாக அறிந்திருக்கலாம்!

கேள்வி: உங்களுடன் இணைந்து செயல்படும் அ.இ.அ.தி.மு.க.வின் தலைவி ஜெயலலிதா 'பாராளுமன்றத்துடன் சட்டமன்ற தேர்தலும் வரும்' என்று பேசுகிறாரே! இது பற்றி உங்கள் கருத்து?

பதில்: 1980ல் தி. மு. க. — இ. காங். கூட்டணி இணைந்து பாராளுமன்ற தேர்தலைச் சந்தித்தது; மாபெரும் வெற்றியைப் பெற்றது. பின்னர் எம்.ஜி.ஆர். அரசு கலைக்கப்பட்டது. சட்டமன்ற தேர்தலில் எம்.ஜி.ஆர். வென்றார். அதே போன்று இப்போது நடக்கவுள்ள பாராளுமன்றத் தேர்தலிலும், எங்கள் கூட்டணி (காங்கிரஸ் — அ. தி.மு.க.) பெரும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதன் விளைவாக தி. மு. க. அரசு கவிழ்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. பின்னர் சட்டமன்ற தேர்தல் வரும் அல்லவா! அந்த அடிப்படையில்தான் ஜெயலலிதா பேசியிருப்பார் என்று நம்புகிறேன்.

கேள்வி: ஜெயலலிதாவின் ஆட்சிக் கவிழ்ப்புப் பேச்சுக்கு காங்கிரஸ் ஆதரவு உண்டா?

பதில்: காங்கிரஸைப் பொறுத்தவரையில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மெஜாரிட்டி ஆட்சியைக் கவிழ்க்கிற வேலையில் இறங்காது. அ. தி. மு. க. வின் தலைவர்கள் 'கலைஞர் ஆட்சி கவிழ்க்கப்படும்' என்று பேசுவதற்கு எங்களின் ஆசீர்வாதம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஒன்று. 'தன்னுடைய ஆட்சி மைனாரிடி ஆட்சி' என்ற எண்ணம் கலைஞரிடமே இருக்கிறது. அந்த எண்ணமே பயமாக உருவெடுத்து, அவரது செயல்களைத் தடுமாற வைக்கிறது. ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பல தவறுகள் செய்யப்படுகின்றன. இன்றுள்ள நிலைமையில் கலைஞர் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் அல்லது கலைக்க வேண்டும் என்ற எண்ணம் காங்கிரஸுக்குத் துளியும் இல்லை! கலைஞரது செயல்கள்தாம் அவரது ஆட்சி கவிழுமா; அல்லது கலைக்கப்படுமா என்பதைத் தீர்மானிக்கும். அவரே தமக்குக் குழி தோண்டிக் கொண்டால் அதற்கு நாங்கள் பொறுப்பாக மாட்டோம்.

பேட்டி: **ப்ரியன்**

மேலட்டை வண்ணப்படங்கள்:

சுபா, யோகா

" சுவையான சம்பவங்கள் " —

"நான் துதிக்கும் ராமன்தான் வழி காட்டுகிறார்"



சில வருடங்கள் முன்பு வெளிநாட்டிலிருந்து இந்தியா திரும்பியது எங்கள் குடும்பம். இங்குள்ள சூழ்நிலைக்கேற்ப எங்களைச் சரிசெய்து கொள்ளும் நேரம் அது. என் கணவர் தம் கவலைகளை யாரிடமும், ஏன் என்னிடம் கூடப் பகிர்ந்து கொள்ளத் தயங்குபவர். பொதுவாக எப்பேர்ப்பட்ட பிரச்னையையும் ஓரளவு பேசித் தீர்த்துக் கொள்ளும் சுபாவம் என்னுடையது.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் சனிக்கிழமையை என்னால் மறக்க முடியாது. அன்று பகல் உணவை வேண்டா வெறுப்பாக உட்கொண்டார் என் கணவர். "ஏன் எங்கேயாவது முன்னாடி ஒருபிடி பிடிச்சுட்டு வந்துட்டு இது இரண்டாவது கோர்ஸா?" என்று வேடிக்கையாகக் கேட்டேன். அதை ரசிக்காத என் கணவர் கோபத்துடன் கடுமையாகப் பேசிவிட்டு வெளியே சென்று விட்டார். நான் விக்கித்துப் போனேன்.

இரவு வெகுநேரமாகியும் கணவர் திரும்பி வரவில்லை. பூஜை அறையில் ஸ்ரீராமர் படத்துக்கெதிரில் உட்கார்ந்து, "ஹே ஆஞ்சனேயா — நீயே கதி. கோபித்துச் சென்ற கணவனைத் திரும்பி அழைத்து வாருங்கள்" என்று வேண்டிக் கொண்டேன். வாசலில் "காலிங் பெல்" அடித்தது. கணவரைக் கண்டவுடன் கண்ணீர் மல்கியது. என் கணவர் கோபம் தணிந்தவராய் என்னைப் பார்த்து, "ஒரு சொல்ல முடியாத அவஸ்தையில் இருக்கிறேன்" என்று ஆரம்பித்துத் தமது மனம் திறந்து தம் பொருளாதாரக் கவலையை வெளியிட்டார். இத்தனை வருட தாம்பத்தியத்தில் இதுபோல் என் கணவர் மனம் திறந்து பேசியதில்லை. இன்னும் ஒரு மாதத்துக்குள் 40 ஆயிரத்தை என் கணவர் புரட்ட வேண்டுமாம். எங்கே போவது? ஸ்ரீராமர் தான் அருள்புரிய வேண்டும் என்றும், ஆஞ்சனேயர்தான் வழிகாட்ட வேண்டும் என்றும் எண்ணிய போது மனத்தில் என் கணவரின் ஆப்த நண்பர் ரகுராமனின் ஞாபகம் வந்தது.

மறுநாள் அவர் வீடு சென்று என் கணவரின் இக்கட்டைக் கூறினேன்.

"இதோ பாருங்கோம்மா, யாருக்கில்லே பணக்கஷ்டம்? சரியானபடி முயற்சி செய்து சரிப்படுத்தி விடலாம். உங்க கணவர் வெங்கட் ரொம்ப மானி. எதையும் சொல்ல மாட்டார். இதே மாதிரிதான் ஒரு சமயம் எங்க அப்பாவின் வைத்தியச் செலவுக்குப் பணம் புரட்டின இடத்திலேயே உங்களுக்கும் ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

கடன் வாங்குவது என்றாலே கதிகலங்கும் என் கணவரிடம் எப்படிச் சொல்வது என்று குழம்பிய என்னை, "நான் சொல்வது ஸ்ரீராம் சிட்பண்டைப் பற்றித்தான்" என்றார். ஆத்மார்த்த நட்புடன் கூடிய சூழ்நிலையில் உதவி செய்பவர்கள் அவர்கள் என்றார் அவர்.


"என்ன ஸ்ரீராம் சிட்பண்டா...? என்று ஆச்சரியத்துடன் கூவினேன். நான் துதிக்கும் ராமன்தான் வழிகாட்டுகிறார் என்று மனமார கரம் கூப்பினேன்.


பிறகு என்ன, எனது கணவர் ஸ்ரீராம் சிட்ஸுக்குச் சென்றார். அதன் மவுண்ட்ரோடு கிளை மானேஜருடன் தொடர்பு கொண்டார். எங்களுக்கு மாதம் ரூ. 1000/— வரை சேமிக்கும் வசதியைச் சொன்னோம். அதற்குத் தக்கபடியான சீட்டுக் குரூப்பில் சேர வைத்தார். விரைவில் ஏலத்தில் பணம் எடுக்க முடிந்தது. எங்கள் நெருக்கடிக்கு உதவியும் கிடைத்தது. வீட்டில் அமைதி மீண்டும் நிலவியது. என் கணவரும் தம் நண்பர்களிடையே, ஸ்ரீராம் சிட்ஸ் உதவியைப் பற்றிக் கூறி அவர்களையும் சிபாரிசு செய்வது இப்பொழுது வழக்கமாகி விட்டது.


இப்படிக்கு,

துளசி வெங்கட்ராமன்,

அடையாறு, சென்னை — 600 020.


பாரத் பந்த் ஆதரவு
பாரத் பந்த் எதிர்ப்பு
மக்கள்


இந்த குஷனைப் போட்டுக் குங்க..
போடா வன்முறை
தற்காலிக தீர்வு


ஆட்சிக் கவிழ்ப்பு
அரசியல் நாணயம்



கல்கி

1989 செப்டம்பர் 10
மலர் 48 இதழ் 6
சுக்ல ஆவணி 25



பந்த்: வெற்றி யாருக்கு?

'நாடு தழுவிய அளவில் கதவடைப்பு நடக்கும்போது பன்னிரண்டு உயிர்கள் பலியானது அப்படியொன்றும் பெரிய விஷயமல்ல' என்று கருதியது போல் நாளிதழ்கள், ''பந்த் அமைதியாக நடந்தேறியது'' என்று தலைப்புத் தந்து செய்தி வெளியிடுகின்றன. ஆனால் அந்தப் பன்னிரண்டு பேர்களின் குடும்பங்கள் இன்று ஆட்சியை மட்டுமின்றி எதிர்க்கட்சிகளையும் சபித்துக் கொண்டுதானிருக்கும்.

கதவடைப்பு என்பது காந்திஜி தயாரித்துத் தந்த ஒரு கூரிய ஆயுதம். அதைச் சரியானபடி பயன்படுத்தாமல் போனால், ஆயுதம் ஏந்தியவனையே அது காயப்படுத்தி விடும்! அன்று காந்திஜி கதவடைப்புப் போன்ற ஆயுதங்களை எதேச்சாதிகார அந்நியர் ஆட்சிக்கு எதிராகப் பயன்படுத்தினார். அப்போதும் கூட, 'குறிப்பிட்ட தினத்தில் அனைவரும் உபவாசமிருந்து, எதிரியின் மனமாற்றத்துக்காகவும், நமது ஆத்ம சுத்திக்காகவும் பிரார்த்தனை செய்ய வேண்டும்' என்பார். இப்போது, அத்தகைய நல்ல அம்சங்களையெல்லாம் விட்டுவிட்டார்கள். பலப்பரீட்சையில் இறங்கி, 'பந்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டுவேன்' என்று எதிர்க்கட்சி மார்தட்ட, 'அதை முறித்துக் காட்டுவேன்' என்று தொடை தட்டுகிறது அரசு. ஜனநாயக இந்தியாவுக்குப் பந்த் எதற்கு? அதுவும் இன்னும் சில மாதங்களில் பொதுத்தேர்தல் நடக்க இருக்கும்போது?

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இரண்டுமே, 'வெற்றி எங்கள் பக்கம்' என்கின்றன. இருவர் கூற்றையும் ஏற்பதற்கில்லை. மூடப்பட்ட கடைகள் எல்லாம் பந்த் ஆதரவாக மூடப்பட்டதாகக் கூற முடியாது. 'எதற்கு வீண் வம்பு? பொருட்சேதத்தைத் தவிர்ப்போம்' என்று அஞ்சி மூடப்பட்ட கடைகள், தொழிற்கூடங்கள் ஏராளம். அரசுக் காரியாலயங்களில் முதல் நாள் இரவே எல்லாரையும் தங்க வைத்து, ஆளுக்கு நூறு ரூபாய் வரை செலவு செய்யலாம் என்று அனுமதித்து, விருந்து வைத்து, வீடியோ காட்டி, நாற்காலி தேய்க்க வைத்து விட்டதால், பந்தை அரசு முறியடித்து விட்டதாக ஆகிவிடாது. வி. பி. சிங் சாதுர்யத்துடன் பேசியது போல, அரசு தன் படுதோல்வியை ஒப்புக் கொண்டதாகவே அர்த்தமாகும். பீகாரிலும், உ. பி.யிலும் பந்த் அடைந்த வெற்றி காங்கிரஸுக்குப் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தும் பலத்த அடி.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் முதல்வர்கள், ஒரு தர்ம சங்கடத்துக்கு ஆளானார்கள். கட்சி அளவில் 'பந்'தை வெற்றிகரமாக நடத்திக் காட்டவும் வேண்டும்; ஆட்சி அளவில் அரசுக் காரியாலயங்களைத் திறந்து வைத்திருந்து அமைதி காக்கவும் வேண்டும். இத்தகைய இரண்டுங்கெட்டான் நிலைமையைத் தமிழக முதல்வர் பெருமளவு வெற்றிகரமாகச் சமாளித்தார் என்றே கூற வேண்டும். குறிப்பாக, ரயில்களில் ரிசர்வேஷன்களே அற்ப சொற்பமாகத்தான் உள்ளன என்பதை எடுத்துக்காட்டி, ரயில்களை ரத்து செய்யுமாறு மத்திய அரசை அவர் கேட்டுக் கொண்டது அவருக்கே கைவந்த அரசியல் சாணக்கியம்! மத்திய அரசு இக்கோரிக்கையை ஏற்காதது வேறு விஷயம். ஏற்கும் என்று கருணாநிதியே எதிர்பார்த்திருக்க மாட்டார். கட்சி மறியல் செய்ய, ஆட்சி கைது செய்ய, ரயில்கள் தாமதமாகப் புறப்பட்டாலும், ஓடின. ஆனால் பல்லவன், முதல் நாள் மாலையே ஓடாமலிருந்து, சென்னை வாழ் மக்களைச் சொல்லொணா அவதிக்குள்ளாக்கியது, முதல்வருக்குக் கிடைத்த மைனஸ் மார்க்தான். 'எங்கே கோளாறு? எதனால் ஏற்பட்டது?' என்பது ஆராயப்பட வேண்டும்.

வேறு விதங்களிலும் 'பந்'தினால் பொதுமக்களுக்குப் பல அசௌகரியங்கள் ஏற்பட்டே உள்ளன. அவற்றுள் முக்கியமானது நாட்டுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பு. இந்த நஷ்டத்தைத் தாங்க வேண்டியவர்கள், வரி செலுத்தும் ஒவ்வோர் இந்தியக் குடிமகனும்தான். 'பந்'தை முறியடிக்கிறேன்' என்று ஆரம்பித்து, மத்திய அரசும் எக்கச்சக்கமாகச் செலவிட்டுள்ளது. இந்த வீண் செலவுக்கும் மக்களின் வரிப்பணம்தான் விரயமாகியுள்ளது.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் பந்த் நடத்த இப்போதே காங்கிரஸும் தோழமைக் கட்சிகளும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கின்றன! இது தொடர்கதையானால் நாட்டு மக்கள் மட்டுமின்றி, தேசப் பொருளாதாரமும் பந்தாடப்படும்.

மக்களின் உணர்ச்சி பூர்வமான ஆதரவைப் பெற பந்த் உதவலாம். ஆனால் அறிவு பூர்வமாகச் சிந்திக்கும் யாருமே அதற்கு ஆதரவு தர மாட்டார்கள்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

அர்ஜுனனைப் போலக் கண்ணனும் செய்திருக்கலாமே!

நுணலும் தன் வாயால் கெடும்

●● அக்கா மகள் ரம்யா, தான் ஆடும் நடனம் கண்மணிப் பூங்காவில் ஒளிபரப்பாகப் போவதாகவும் கண்டிப்பாய் நான் பார்க்க வேண்டும் என்றும், 'கட்டளை' இட்டிருந்தாள். அவசர வேலை குறுக்கிட்டபடியால் பார்க்க முடியவில்லை. அடுத்த வாரம் அவளைச் சந்தித்த போது அவள் ஆர்வத்தைக் குலைக்க விரும்பாதவனாய், "ஜோராய் ஆடினாய், அட்டகாசமாய் அபிநயித்தாய்" என்றெல்லாம் அளந்தேன். "அதிலும் அந்தப் பச்சைப் பாவாடை (நாட்டிய நிகழ்ச்சிக்காக அவளுக்குத் தைத்திருந்த புதிய பாவாடையை போன வாரம் பார்த்துத் தொலைத்திருந்தேன்!) உனக்கு எத்தனை பொருத்தமாயிருந்தது தெரியுமா?" என்று ஒரு போடு போட்டேன்.

அவ்வளவுதான்... குழந்தை முகம் வாடியது. "போ மாமா, நீ பொய் சொல்றே... என் புரோக்கிராமை நீ பார்க்கவேயில்லை... நானொண்ணும் பச்சைப் பாவாடை கட்டிக்கலே... உயரம் பத்தலேன்னு டீச்சர் அதை எனக்கு வேண்டாம்னுட்டா... என் ஃபிரண்டோட சிவப்புப் பாவாடையைத்தான் கட்டிண்டேன்." கண்ணீர் பெருகக் கூறிய குழந்தையின் முன், அசட்டுத்தனமும், அவமானமும் போட்டியிடக் குற்றவாளியாய்த் தலை குனிந்தேன்.

— ஜி. சிவா, சென்னை — 45.

குழப்பும் டீ. வி.!

●● 'National programme follows' என்றும் தமிழில் 'தேசிய நிகழ்ச்சிகள் தொடரும்' என்றும் டீ. வி. யில் ஸ்லைடு போட்டார்கள். அதைப் பார்த்தவுடன் என் மகள் வேகமாக எழுந்து வந்து என்னிடம் சொன்னாள். "என்னைப் போய்க் குறை சொன்னீங்களே, டீ. வி. காரங்களுக்கே எதிர்காலம், நிகழ்காலம் வித்தியாசம் தெரியலை, பாருங்க! ஆங்கிலத்தில் follows என்பதற்குத் 'தொடர்கிறது' என்று தானே போடணும்! தொடரும்னு ஏன் போடறாங்க? will follow என்பதற்குத்தான் தொடரும் என்று சொல்ல முடியும்" என்றாள். தினமும் அந்த ஸ்லைடைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கே குழப்பமாகத்தான் இருக்கிறது.

— வி. சிவகுமார், சென்னை — 83.

தடங்கல் மன்னர்!

●● எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் எந்தப் பொருள் வாங்குவதானாலும் வெற்றிகரமாகத் தடங்கல் செய்வார். 'ப்ரிட்ஜ் வாங்கணும்' என்று அவர் மனைவி சொன்னால் 'அப்புறம் அதற்கு ஸ்டாண்டு, டேபிள் டாப், ஸ்டெபிலைசர் எல்லாம் அனாவசியமா வாங்கணும்' என்பார். வாட்டர் ஹீட்டர் கேட்டால், 'அதற்காகப் பவர் லைன் தனியாகப் போடணும், பதினைந்து ஆம்ப்ஸ் ப்ளக் புதுசாப் போடணும்; அதனால் வேண்டாம்' என்பார். டீ. வி.க்கு மட்டும் அவர் என்ன சால்ஜாப்பு சொல்லியும் அவர் மனைவியிடம் நடக்கவில்லை. அரை மனதுடன் ஒப்புக் கொண்டார். மறுநாள் டீ. வி. வீட்டுக்கு வந்தவுடன் மெக்கானிக், "சார், மாடிப்படி எங்கே காட்டுங்க. நாளைக்கு வந்து மாடியில் ஆன்ட்டெனா அடிக்கணும்" என்றார். அவ்வளவுதான் வீட்டுக்காரர் 'லபோ லபோ'ன்னு மனைவியிடம் கத்த ஆரம்பித்து விட்டார். "எக்ஸ்ட்ரா செலவு ஏதும் ஆகாதுன்னு சொன்னியே, இப்பப் பார், இந்த ஆள் மாடிக்குப் படி கட்டணும் என்கிறார். அப்புறம் மாடியில் ரூம் போடு என்பார். இதெல்லாம் அனாவசியம்தானே?" என்று பொறிந்து தள்ளினார். அவர் வீட்டில் மாடிக்குப் போகப் படி இல்லை; ஏணி வைத்துத்தான் போகணும் என்பது மெக்கானிக்குக்குத் தெரியாததால் அவரைத் தவிர நாங்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம்!

— ஐ.ஓ.சி. சிவாஜி, சென்னை — 83.

"எதைத்தான் குப்பையில் போடுவது?"

●● "World this week" பார்த்துக் கொண்டிருந்தோம். ருஷ்யாவில் குப்பைகளைத் திரட்டி மீண்டும் பயனுள்ள பொருள்களாக மாற்றும் செயல்பாட்டினை ஒளிபரப்பிக் கொண்டிருந்தனர். அதைப் பார்த்துக் கொண்டிருந்த என் தங்கை, "அம்மா இந்த அழகான பிளாஸ்டிக் பாட்டிலைக் குப்பையில் போட்டிருக்கிறார்களே, எனக்குக் கொடுத்தால் ஸ்கூலுக்குத் தண்ணீர் எடுத்துக் கொண்டு செல்வேன்" எனவும், என்னுடைய இன்னொரு தங்கை, "எதைத்தான் குப்பையில் போடுவது என்றில்லை. இன்னும் கொஞ்ச நாட்களில் வயதானாலும் தூக்கிக் குப்பையில் போட்டுவிட்டு, அவர்களை இயந்திரத்தில் செலுத்தி இளைஞர்களாக ஆக்கி விடுவார்கள்" என்று சீரியஸாக





கூற எங்களால் சிரிப்பைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

— எஸ். வத்சலா, ஹைதராபாத் — 47.

விளம்பர மோகம்!

●● என் சிநேகிதியின் கணவர் டீ. வி. யில் வரும் உணவுப் பொருள்களின் விளம்பரங்களைப் பார்த்துவிட்டு, "இதையெல்லாம் பார்த்தாலே நாக்கில் நீர் ஊறுகிறது. நீயும் சமைக்கிறாயே! சாப்பிடுகிற மாதிரி இல்லாவிட்டாலும் பார்க்கிற மாதிரியாவது இருக்க வேண்டாமா?" என்று அவளைக் கிண்டல் செய்வார். சில மாதங்களுக்குமுன் பிஸினஸ் இந்தியாவில் விளம்பரங்களுக்காக இதுபோன்ற "உணவுப் பொருள்களை"த் "தயாரிக்க" என்னென்ன வஸ்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று ஒரு பட்டியலே கொடுத்திருந்தார்கள். பலவித பிளாஸ்டிக் பொருள்கள், வண்ணங்களுக்கு பெயிண்ட், ஐஸ்கிரீம் போன்றவற்றுக்கு ஷேவிங் க்ரீம், நறுமணப் புகை போன்றவற்றுக்குப் புகையிலையின் புகை என்று லிஸ்ட் நீண்டிருந்தது. இதைப் படித்த பிறகு, பாவம் என் சிநேகிதியின் கணவர் டீ. வி. யில் விளம்பரங்கள் வந்தாலே அறையை விட்டு வெளியேறி விடுகிறாராம்.

— ஆர். தேவகி, சென்னை — 15.

ஆகா என்ன கரிசனம்!

●● டீ. வி. யில் காண்பிக்கப்படும் சினிமாக்களைப் பற்றி முழுதும் முன்கூட்டியே தெரிந்து கொள்ள, என் நண்பர் ரொம்பத் துடிப்பார். பல விமர்சனங்களையும், கதைக் குறிப்புக்களையும் சிரத்தையாகப் படிப்பார். "எல்லாம் என் மனைவிக்காக..." என்று சொல்வார். பரவாயில்லையே, மனைவி பேரில் இவ்வளவு அக்கறையா?" என்று ஒரு தரம் கேட்டதற்கு, "அதெல்லாம் ஒன்றுமில்லை; வேறு மொழிப் படங்களின் கதைகளை முன்னாலேயே சொல்லி விட்டால், டீ. வி. யிலேயே அவள் லயித்து விடுவாள். அப்புறம் ஐயாவுக்கு முழுச் சுதந்திரம். ஹாய்யாகக் கிளப்புக்குப் போய் விடுவேன்! இரவு ஒன்பது மணிக்குத் திரும்பி வந்தால் போதும்!" என்றாரே பார்க்கலாம்!

— ஜி. நீலகண்டன், பெங்களூர் — 3.

அதில் என்ன கஷ்டம்!


●● 'வயலும் வாழ்வும்' நிகழ்ச்சியில் ஒரு பெண் பயந்த பார்வையுடன், விழித்துக் கொண்டு, பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கிண்டல் செய்தேன். உடனே என் அம்மா, "கிண்டல் செய்வது சுலபம். எங்கே நீ ஓர் ஐந்து நிமிடம் எந்தவிதத் தடுமாற்றமுமின்றி, ஏதாவது பேசிக் காட்டு பார்ப்போம்" என்று கூறினார். நானும் அதற்கென்ன, என்று கூறி வரதராஜன் செய்தி வாசிப்பது போல், அன்று செய்தித்தாளில் வந்த செய்தியை மிகுந்த கவனத்துடன் படித்துக் காட்டினேன். அப்பொழுது என் தங்கை ஜெயா, "அவ்வளவு ஏன் கஷ்டப்பட வேண்டும், இதோ பார், நான் ஷோபனா ரவி போல் செய்தி வாசித்துக் காட்டுகிறேன்," என்று கூறிவிட்டுச் சல்வார் கம்மீஸ் உடையின் துப்பட்டாவை இழுத்துப் போர்த்திக் கொண்டு, அமர்த்தலாக அமர்ந்து கொண்டு, "வணக்கம்! தலைப்புச் செய்திகள். கடந்த பத்து தினங்களாகத் தமிழ் நாட்டில் கடும் மழை பெய்து வருவதால், தமிழ் நாடு வெள்ளக் காடாகியது. இதன் விளைவாக இன்னும் ஐம்பது வருடங்களுக்குத் தண்ணீர்ப் பஞ்சமே இருக்காது என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். மக்களுக்கு அடிப்படைத் தேவையான பொருள்களின் விலைகள் பாதியாகக் குறைந்துள்ளன. மக்களின் வசதியை முன்னிட்டு, நியாய விலைக் கடை ஊழியரே வீடு விடாகச் சென்று தேவையான பொருள்கள் அனைத்தையும் கொடுக்க வேண்டும் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது' என்று அமர்க்களமாகச் செய்தி படிக்க ஆரம்பித்தாள். நாங்கள் எல்லோரும் செய்தியைக் கேட்டு மயங்கிய நிலையில், இருந்தபோது, 'ம்கும்' என்று கனைத்து, அருகிலிருந்த என்னை, செய்தியைத் தொடரும்படி, சைகை காட்டிவிட்டு எழுந்து சென்றாளே பார்க்கலாம்!

— டி. வேணுகோபால், திருநெல்வேலி.

"நீயும் செய்திருக்கலாமே!"

●● 'கண்மணிப் பூங்கா' நிகழ்ச்சியில் 'குரு பக்தி' என்ற நாடகத்தில் நான் கிருஷ்ணராக நடிக்க நேர்ந்தது. போர் செய்ய மனமின்றிக் காண்டீபத்தை எறிந்துவிட்ட அர்ச்சுனனுக்குக் கிருஷ்ணர் கீதையை உபதேசிக்கும் காட்சி. நிகழ்ச்சியை என் குடும்பத்தாருடன் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். என்னையும் அறியாமல் நடிக்கும் போது நான் அடிக்கடி முகத்தைச் சுளித்துக் கொண்டே இருந்த காரணத்தை என் தாய் கேட்ட போது, "எனக்கு வச்சிருந்த கிரீடம் எவ்வளவு கனம் தெரியுமா? அதனுடைய கூர் முனை என் நெற்றியிலே குத்தி ஒரே வலி. அதனால்தான் நான் முகத்தைச் சுளிச்சுட்டேன்" என்று சமாதானம் கூறினேன். அதைக் கேட்டுக் கொண்டு இருந்த என் தம்பி, "ஐய அசடு. கிரீடம் வலிச்சா என்ன! அர்ச்சுனன் வில்லைக் கீழே வச்சது போல, நீயும் உன் கிரீடத்தைக் கீழே வச்சுட்டு, 'அர்ச்சுனா, நீ மனம் மாறி வில்லை எடுத்துப் போர் செய்தால்தான் நானும் இந்தக் கிரீடத்தை அணிவேன்...' அப்படீன்னு ஒரு சொந்த டயலாக் அடிக்க வேண்டியது தானே!" என்ற போது சிரிப்பை அடக்க முயன்று நாங்கள் தோற்றுப் போனோம்.

— வித்யா கிருஷ்ணன், சென்னை — 87.



நான்காம் வகுப்புக்குக் கு.க.பாடம்!

* 'சுதந்திர தினச் சொற்பொழிவுகள்: வெற்றுச் சடங்குகள்!' தலையங்கம் வெகு அருமை. ஜனாதிபதி ஆர்.வி சொன்னதற்கும் விஷயங்கள் நடந்து வருவதற்கும் சம்பந்தமேயில்லை என்கிற உண்மையைக் குத்தலாகச் சுட்டிக்காட்டப் பட்டிருந்த விதம் பாராட்டுக்குரியது!

வைத்தீஸ்வரன் கோவில், லோ. க. உதயம்.

* சுதந்திர தினத்தில் மட்டுமா வெற்றுச் சடங்குகள்? காந்தி பிறந்த மற்றும் நினைவு நாட்களில் பாரதி, நேரு, காமராஜ் போன்ற பெருந்தலைவர்கள் நினைவு நாட்களில் என்று எல்லா நாட்களிலும் மாலை மரியாதை, பஜனை, பேச்சுக்கள்! மறுநாளே அடிதடி ரகளை! தலைவர்களையும் அவர்தம் கொள்கைகளையும் சமாதியிலேயே வைத்து நன்றாகப் பூசி விட்டோம். அதனால்தான் சடங்குகள் மூலம் விளம்பரமும் சாகசமும்!

சென்னை — 92, கே. ராஜகோபாலன்.

* கான்ஸ்டபிள்பிரபாகரனைக் காப்பாற்றத்தான் இன்ஸ்பெக்டர்புலியைச்சுட்டிருக்கிறார். குண்டு தவறிக் கான்ஸ்டபிளைத் தாக்கியிருக்கிறது. இருந்தாலும் வழக்குப் பதிவு செய்திருக்கிறோம் என்கிறாரே டி.ஐ.ஜி!

கடலூர், வானவில் மூர்த்தி.

* புலி—புல்லட்—பிரபாகரன் என்று முதல் பக்கத்தில் பார்த்ததும், என்னவோ ஏதோ என்று படித்தால்.... கல்கிக்குமா இப்படியொரு சஸ்பென்ஸ் ஆசை?

திட்டக்குடி, அ. சரவணராசன்.

* ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் கவலை தரும் காஷ்மீர் பிரச்னை பற்றி, நமது முன்னாள் வெளியுறவுத் துறைச் செயலாளர் கே.பி.எஸ். மேனன் தென்னத் தெளிவாக விளக்கியுள்ளார். இதற்கு இணையாக, ராஜாஜி வாழ்க்கை வரலாறில் 'ஷேக் அப்துல்லாவும், நேருவின் மனச்சாட்சியும்' என்று வந்திருப்பது மிகவும் பொருத்தமாக இருந்தது. கல்கியின் அட்டைப்படம் சிம்ப்ளி சூபர்ப்!

தர்மபுரி —2, வித்யா.

* பொள்ளாச்சி காந்தி மன்ற இளைஞர்கள் ஆபாசப் புத்தகங்களுக்கும், ஆபாசப் படங்களுக்கும் எதிராக எடுக்கும் நடவடிக்கைகள், இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு மக்களிடையே மேலும் ஒரு நற்பெயரை எடுத்துத் தரும். மேலும் இது போன்ற மன்றம் ஊருக்கு ஒன்று இருந்தால் போதும், பெண்களுக்கு ஏற்படும் தீங்கு பெரும்பாலும் குறைந்துவிடும். ஏன் அறவே ஒழிந்து போனாலும் ஒன்றும் ஆச்சர்யம் இல்லை!

லால்குடி, எம். இராஜேந்திரன்.

* சினிமா என்னும் கனவுத் தொழிற்சாலையில் ஜொலிக்கக் கனவுகளுடன் இன்னும் எத்தனை எத்தனை பெண்கள் சீரழிந்து கொண்டிருக்கிறார்களோ? உண்மைக் கதையைப் படித்தபின் மனசு என்னவோ போல் இருந்தது.

சென்னை — 33, வி.எஸ். வாசன்.

* ஆரம்பப் பக்கங்களிலேயே 'கண்ணீர் கசியும் கனவுத் தொழிற்சாலை'யைத் தந்து இதயத்தைக் கனக்கச் செய்து விட்டீர்களே.... கனவுகள் ஆயிரத்தோடு வந்த ஒரு கலைப் பறவை, கருகிப்போன கதை கண்களில் கத்தி செருகுகிறது என்றால், அவள் சாவுக்குப்பின் வந்த (கதாநாயகி) சந்தர்ப்பம் நெஞ்சுக்குள் நெருப்பள்ளிப் போடுகிறது.

திருக்குவளை, கவிஞர் வெற்றிப் பேரொளி.

* "சபதம் செய்யாத பாஞ்சாலிகள்" — சிறுகதையில், 'அந்தக் காலத்துல பாஞ்சாலிக, தன் மேல் கையை வைச்சவன் ரத்தத்துல தலை முடிவேன்'னு சபதம் செஞ்சாங்க... தன் சபதத்தை ஆம்பளெங்க நிறைவேத்தி வைப்பாங்கங்கிற தைரியத்துல! ஆனா இந்தக் காலத்துப் பாஞ்சாலிக, ஒங்களைப் போல (சரவணன்) ஆம்பிளைங்களை நம்பி இன்னா சபதம் செய்ய முடியும்?' என்று பெரியாச்சி கூட்டத்தினரைப் பார்த்துக் கேட்பது கண் முன்னாலேயே நடப்பது போல் இருந்தது!

சீர்காழி, ஜெயலக்ஷ்மி ஷண்முகம்.

* எஸ். பட்டம்மா எழுதிய 'சபதம் செய்யாத பாஞ்சாலிகள்' சிறுகதை படித்தேன். கதையின் தொடக்கம், நடத்திச்செல்லுதல் முடிவு எல்லாம் கச்சிதம். தமிழ் அழகாகக் கையாளப் பட்டுள்ளது. பெரியாச்சியின் ஆணித்தரமான வாதம் அற்புதம். எல்லாவற்றையுமே வேடிக்கை பார்த்துச் சிரித்துவிட்டுச் செல்லும் மனிதர்கள் நன்றாக இடித்துக் காட்டப்படுகிறார்கள். கற்பிழந்து ராசாத்தி வரும் காட்சிக்கு, 'எருமை மிதித்த தாமரை போல' என்ற உவமை மிகவும் பொருத்தம். அற்புதமான கதையை எழுதியவருக்கும் வெளியிட்ட 'கல்கி'க்கும் பாராட்டு.

ஸ்ரீரங்கம், சி. சௌரிராஜன்.

* கல்பனாவின் "கெடு" சிறுகதை முன்பாதி மகிழ்ச்சியும் பின்பாதி நெகிழ்ச்சியுமாகக் கல்லூரி நாட்களை நினைவூட்டியது.

சங்கராபுரம், டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்.

* 'தராக' 4—ம் வகுப்புத் தமிழ்ப் புத்தகத்தைப் படிக்க வில்லையா? அதில் குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் செய்கிற மாதிரி ஒரு பாடம் உள்ளது. இதை எப்படி ஆசிரியர்கள் குழந்தைகளுக்குப் போதிப்பார்கள்? 4—ம் வகுப்புக் குழந்தைகளுக்குக் 'குடும்பக்கட்டுப்பாடு' பற்றிப் பாடம் நடத்தி என்ன பயன் ஏற்படப்போகிறது? அரசுக்கே வெளிச்சம்!

திருச்சி — 21, க. இராசரெத்தினம்.

* ரசாயன மருந்துத் தெளிப்பால் ஏற்படும் பின் விளைவுகளையும், புதுப்புது வியாதிகளையும் சந்திக்காமல் இருக்க ஒரு வழி பிறந்துள்ளது என்ற மகிழ்ச்சியைத் தந்தது, வயல்களில் புழு பூச்சிகளை உறிஞ்சிக் கொல்லும் Bug-Vac கருவியைப் பற்றிய துணுக்குச் செய்தி.

காட்டூர், எஸ். அருள்மொழி.

ஐஸ்கிரீம் திருவிழா



"எட்டு ரூபாய் கொடுத்து விட்டால் போதும். உங்களுக்கு எவ்வளவு ஐஸ்கிரீம் வேணுமோ சாப்பிடலாம்'' என்று சொல்லி விட்டார்கள் அருண் ஐஸ்கிரீம் நிறுவனத் தினர். அப்புறம் என்ன, சென்னை மகா ஜனங்கள் வெளுத்து வாங்கி விட்டார்கள். இடம்: எழும்பூரில் கில்டு ஆஃப் சர்வீஸ் ஹால். இரண்டே கண்டிஷன்களுடன் இந்த மேளா நடந்தது. அவை ஐஸ்கிரீமை வீணாக்கக் கூடாது; வீட்டுக்கு எடுத்துச் செல்லக் கூடாது.

ஹாலின் உள்ளே நுழைய நீளளள...மான கியூ. 'சுமார் 8000 பேர் போல வந்திருப் பார்கள். இன்னும் ஒரு 8000 பேர், ஏமாற் றத்துடன் திரும்பியிருப்பார்கள்' என்றார் அருண் ஐஸ்கிரீமின் மார்க்கெட்டிங் மேனே ஜர் செல்வின் சுந்தர்ராஜ்.

''கடந்த ஆறேழு ஆண்டுகளாய் எங்கள் மனத்தில் இருந்த ஐடியா இது. அதற்கேற்ற படி உற்பத்தித் திறனும் மற்ற வசதிகளும் எங்களுக்கு இப்போதுதான் கிடைத்தது என்பதால் இதுவரை காத்திருக்க வேண் டியதாகி விட்டது. நாலரை டிரக் லோடு ஐஸ்கிரீம் கொண்டு வந்தோம், இந்த மேளா வுக்காக. சுமார் மூணரை டிரக் லோடு ஐஸ்கிரீம் காலி. சராசரியாய்த் தலைக்கு நாற்பது ரூபாய் பெறுமானமுள்ள ஐஸ் கிரீம் சாப்பிட்டிருக்கிறார்கள். மக்கள் இந்த ஐஸ்கிரீம் திருவிழாவுக்கு அளித்த வரவேற்பு எங்களைத் திக்குமுக்காட வைத்துவிட் டது.''



* 'தம்பி இன்னொரு கப் ஐஸ்கிரீம் சாப்பிடறியா?''

சுவையான காட்சிகள்:

o ஒரு பாட்டியும், அவரது பேரக் குழந்தை யும் போட்டி போட்டுக் கொண்டு, ஐஸ்கிரீம் சாப்பிட்டார்கள்.

o மூன்று இளம் பெண்களுக்கிடையே, யார் அதிகம் சாப்பிடுகிறார்கள் என்று போட்டி. வெற்றிபெற்றபெண்ணிடம் 'இந்தா ஜெயித்ததற்குப் பரிசு' என்று மற்ற இரு தோழிகளும் ஐஸ்கிரீம் கப்புகளை நீட்டிய போது, அவற்றையும் திணறியபடியே சாப் பிட்டார்!

o மிக அதிகமாய்ச் சாப்பிட்டவர் ஒரு கல் லூரி மாணவர். சுமார் 95 ரூபாய் மதிப் புள்ள ஐஸ்கிரீம் சாப்பிட்டிருப்பார்.


o ''இன்னும் ஆறு மாசத்துக்கு ஐஸ்கிரீம் வாங்கித் தரமாட்டேன். எவ்வளவு ஆசையோ, அவ்வளவையும் இங்கேயே சாப் பிட்டுக்கோ'' என்று குழந்தையிடம் சொல் லிக் கொண்டிருந்தார் ஓர் இளம் தாய்.

o ஒரு பள்ளிக்கூட மாணவர், தன் பிறந்த நாள் 'டிரீட்'டுக்கு நண்பர்களை இங்கே அழைத்து வந்து விட்டார்.

o செங்கல்பட்டு, அரக்கோணம் இங்கி ருந்தெல்லாம் கூடப் பலர் வந்திருந்தார்கள்.

— மௌஷ்மி.

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



உங்களுக்கும் உங்களது முன்னற்றத் திற்கும் இடையில் இப்பொழுது உள்ள தூரம் ஒரு போஸ்ட் கார்டு தான் என்று நாங்கள் கூறினால் அது சற்று மிகையாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுதான்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறு வதற்கு ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மை ஒரு தடை யாக இருந்திருந்தால்........

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது அதை ஓரளவு புரிந்து கொண் டும், அதற்கு ஆங்கிலத்திலேயே பதில ளிக்க முடியவில்லையே என்ற குறை உங்களிடம் குடி கொண்டிருந்தால்,

பல புத்தகங்களைப் படித்தும் ஆங் கிலத்தில் பேச முடியவில்லையே என்ற சலிப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்,

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற் றத்தை இப்பொழுது அடைய ஒரே ஒரு போஸ்ட்கார்டு போதும்...ஆமாம்!

ஆங்கிலத்தில் இலக்கணப் பிழை யின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும்; தயக்க மின்றி சரளமாகப் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்று போற்றப்படும் விவேகானந்தா கல்வி நிலையத் திற்கு இன்றே அனுப்புங்கள்.

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பற்றியும் மற்ற தகவல் களையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இந்த எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற் கொள்ளலாம்.

"நேர்முகப்பயிற்சியும் உண்டு."

என்ன?.....எங்கே கிளம்பி விட்டீர் கள்? போஸ்ட் கார்டு வாங்கத்தானே?

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி துவங்கிவிட்டது.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி

விவேகானந்தா கல்வி நிலையம்
9, மேட்லி ரோடு,
தி. நகர், சென்னை - 17.

NAGA

வண்ணப் பந்துகளிடையே ஒரு வனிதை

''எஸ். எஸ். எல். ஸி.தான் படிச்சேன். அப்புறம் ஒரு டிராவல் ஏஜென்ஸி கோர்ஸ் படிச்சேன். வயசு இருபத்து மூணுதான் ஆகிறது. ஆனால் டீ. வி., பேப்பர்லே... இருபத்து நாலுன்னு போட்டுட்டாங்க...'' என்றார் செல்வி ஜூடி வாலியா.

ஸ்னூக்கர் என்கிற வண்ணப் பந்தாட்டத்தில் அனைத்திந்திய அளவில் நடைபெற்ற பெண்களுக்கான முதல் தேசிய பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெற்றிவாகை சூடியவர் ஜூடி வாலியா. இவர் கர்நாடகாவில் செட்டிலான பஞ்சாபிப் பெண். இந்த நீலகிரீஸ் கோப்பைப் போட்டியில் பாரதம் முழுவதிலுமிருந்து பதினெட்டுப் பெண்களே பங்கு கொண்டார்கள். கடைசி நேரம் வரை மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ஸீனியர் ஆட்டக்காரரான உஷா கண்டேல்வால் தான் வெற்றி பெறுவார் என்று எல்லோரும் நம்பியிருந்த நிலையில், புதுப் புனலோட்டமாய் வந்து புள்ளிகளை அள்ளிக் கொண்டு வெற்றிவாகை சூடிவிட்டார் ஜூடி.

''மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் கர்நாடக மாநிலப் பெண்களுக்கான பந்தயங்கள் நடைபெற இருந்த போது என் சினேகிதர்கள், என்னைக் கேட்காமலேயே 'ஜூடி ஆடட்டும்' என்று பெயர் கொடுத்துவிட்டார்கள். அப்புறம்தான் அதையொரு சவாலாகவே எடுத்துக் கொண்டு நான் தீவிரமான பயிற்சியிலேயே ஈடுபட்டேன்,'' என்கிறார் ஜூடி.

மாலை ஏழரை மணியளவில் பெங்களூரிலிருக்கும் கத்தோலிக்க கிளப்பிலுள்ள பில்லியர்ட்ஸ் — ஸ்னூக்கர் அரங்கில் நுழைகிற ஒரே பெண் ஜூடிதான்! முழுக்க முழுக்க ஆண்களே திறமை காட்டுகிற விளையாட்டு ஸ்னூக்கர் என்னும் வண்ணப் பந்தாட்டம். கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் பெண்கள் முன்னணியில் உள்ள ஆட்டம் இது என்றாலும் இப்போதுதான் நம் நாட்டில் மெல்ல மெல்லப் பெண்கள் இதில் ஆர்வம் காட்டுகிறார்கள். காரணம் என்ன?

''இயல்பாகப் பெண்களிடையே உள்ள கூச்சம், வெட்க உணர்வு இவற்றால்தான் ஒதுங்கிப் போகிறார்கள். இந்த விளையாட்டைப் பொறுத்தவரை ஆண் — பெண் வேறுபாடு என்பதெல்லாம் அநாவசியம். சொல்லப் போனால் மிகவும் நளினமான (கிரேஸ்ஃபுல்) ஆட்டம்



இது...'' என்கிறார் ஜூடி.

பஞ்சாபிதான் தாய்மொழி என்றாலும் வீட்டிலும் வெளியிலும் பேசுவது ஆங்கிலம் தான். தமிழ் ஓரளவுக்குத் தெரியும்! சமையல் மிக நன்றாகத் தெரியும். அப்பா விமானப் படையில் பணியாற்றியவர். இப்போது மகளின் திறமையைக் கண்டு மகிழ அவர் இல்லை. அம்மாவின் அரவணைப்பில் ஜூடி வாலியாவுக்கு இரண்டு தம்பிகள்; இரண்டு தங்கைகள்.

ஜூடி வாலியாவுக்கு மிகவும் பிடித்தமான ஆட்டக்காரர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்டீவ் டேவிஸ்தானாம். அவருடைய ஆட்ட கேஸெட்டுகளைப் போட்டுப் பார்த்துத் தம்முடைய திறமைக்கு மெருகேற்றிக் கொள்கிறார். இங்கே ஜூடியின் திறமைக்கு ஊக்கமளித்துப் பயிற்சியளித்துள்ளவர்கள் டன்சின் மெக்கன்ஸியும், ஜயராஜும்.

இந்திய பில்லியர்ட்ஸ் ஸ்னூக்கர் சங்கம் முறையான ஊக்கமும் ஆதரவும் தருமானால், ஜூடிவாலியா சர்வதேச அரங்குகளில் கூடச் சுடர்விட முடியும் என்று நம்பலாம்.

பேட்டி: **சுப்ர பாலன்**


வண்ணப்படம்: **யோகா**

ஜோக்கான புதிர்கள்!

1. சாலையில் விபத்து ஒன்று நடந்து, கூட்டம் கூடிவிட்டது. அங்கு வந்த முதியவர் ஒருவரால் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே போய்ப் பார்க்க முடியவில்லை. உடனே சமயோசிதமாய், "விபத்தில் அடிபட்டவன் என் மகன். நான் அவனைப் பார்க்க வேண்டும்; வழி விடுங்கள்'' என்றார். கூட்டம் சிரித்தபடியே வழிவிட்டது. கூட்டம் ஏன் சிரித்தது? சொல்லுங்கள் பார்க்கலாம்!

2. புலி ஒன்றைச் சங்கிலியில் கட்டிச் சாலை வழியே இழுத்துக் கொண்டு வந்த ஒருவனிடம் போலீஸ்காரர், "புலியை ஏன் இங்கே இழுத்துக் கொண்டு வருகிறாய்? மிருகக் காட்சி சாலைக்கு இழுத்துக் கொண்டு போ,'' என்றார். இரண்டு நாட்கள் கழித்துப் போலீஸ்காரர் சினிமாவுக்குப் போன போது, தியேட்டரில் புலியுடன் அந்த ஆசாமி நின்று கொண்டிருந்ததைக் கண்டதும், "என்னய்யா! மிருகக்காட்சி சாலைக்குக் கொண்டு போகாமல் இங்கே கொண்டு வந்திருக்கிறாய்?'' என்று போலீஸ்காரர் கேட்ட போது, அவன் சொன்ன பதிலில் வாயடைத்துப் போனார், போலீஸ்காரர். அந்தப் பதில் என்னவாக இருக்கும்?

3. பல நாட்கள் திட்டமிட்டுக் கள்ள நோட்டு அச்சடித்தவன், பெருமையுடன் நண்பனிடம் அவற்றைக் காட்டிய போது, நண்பன் திடுக்கிட்டுக் கேட்டான்; "என்னடா! பதினெட்டு ரூபாயா அடிச்சிருக்கே?'' என்று. "பரவாயில்லை! இதையும் நான் ஏமாந்தவன் எவன் தலையிலாவது கட்டிவிடுவேன். அதோ அந்தப் பெட்டிக் கடைக்காரக் கிழவனை ஏமாற்றுகிறேன். பார்த்துக் கொண்டே இரு,'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டவன், கடைக்காரரிடம் நோட்டைக் கொடுத்து விட்டு, சில்லறை கேட்க, கடைக்காரரின் பதிலில் மயக்கம் போட்டு விழுந்தான். கடைக்காரக் கிழவனின் பதில் என்னவாக இருக்கும்? சொல்லுங்களேன்!



4. புதிதாய் வேலைக்குச் சேர்ந்த பத்திரிகை நிருபரை, ஒரு வி. ஐ. பி. வீட்டுத் திருமணத்துக்குப் போய்ச் செய்தி சேகரித்து வரச் சொன்னார் ஆசிரியர். திருமணத்துக்குப் போன நிருபர், வெறும் கையுடன் திரும்பி வந்து, "நியூஸே கிடைக்கவில்லை'' என்று ஆரம்பித்துச் சொன்னதைக்கேட்டதும்நிருபருக்கு உடனடியாக டிஸ்மிஸ் ஆர்டர் கிடைத்தது. நிருபர் அப்படி என்ன சொல்லியிருப்பார்?

5. அவசரக் காலத்தில் விமானத்திலிருந்து பாராசூட் மூலம் குதிப்பது எப்படி என்று பயிற்சி நடந்து கொண்டிருந்தது. "ஒரு முறை ஒத்திகை பார்க்கலாமா?'' என்று பயிற்சியாளர் கேட்டுவிட்டு, ஒருவரைக் குதிக்கச் சொன்ன போது, பாராசூட்டை மாட்டிக் கொள்ளாமலேயே அவர் குதிக்கப் போனார். "பாராசூட்டை ஏன் மாட்டிக் கொள்ளவில்லை?'' என்ற பயிற்சியாளரின் கேள்விக்கு வந்த பதில், பயிற்சியாளரைத் தலையில் அடித்துக் கொள்ள வைத்தது. அது என்ன பதிலாய் இருக்கும்?

6. ஒரு நூலகத்தில், ஒருவர், சலசலவெனப் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த நூலகர், "சப்தம் போட்டுப் படிக்காதீர்கள். மற்றவர்களால் படிக்க முடியவில்லை'' என்றார். அதற்கு அவர் சொன்ன பதிலைக் கேட்ட நூலகர், உடனடியாய்க் கழுத்தைப் பிடித்து அவரை வெளியேற்றினார். அவர் அப்படி என்னதான் சொல்லியிருப்பார்?

விடைகள்: 46 — ஆம் பக்கம்......

எ. ஜோதிஎழுதிய "முட்டாள் ஜோக்ஸ்'' என்கிற புத்தகத்திலிருந்து ஜோக்குகளைப் புதிர்களாக்கியது: **மௌஷ்மி.**



மலர் என்பார்,
மதி என்பார்,
மயில் என்பார்.
எப்படி
அழைப்பினும்
கண்ணே,
ஈடில்லை எதுவும்
ஸென்ஸேஷன்ஸ்
ஸாரிகள் மற்றும் டிரெஸ் மெட்டீரியல்ஸ்
மஃபத்லால்
நம்பிக்கைக்குப் பெயர் பெற்றது
ம::பத்லால்
::பேப்ரிக்ஸ்
Location Courtesy: The Taj Mahal Hotel, Bombay.
MF 635 D TAM

இரண்டாவது சூரியன்

6

தீட்டு வைத்து, சுடச் சுட சாதம் பரிமாறி, ரசம் ஊற்றியதும் குழந்தைகள் இரண்டும் வந்து உட்கார்ந்து கொண்டன. சுட்டு வைத்த அப்பளம் போட்டதும் சாப்பிடத் துவங்கின.

பிள்ளை ஏனோ தேவைக்கும் அதிகமாக மௌனமாய் இருக்கிறது போல் பானுமதிக்குப் பட்டது.

''என்னப்பா... என்ன யோசனை?'' — அவன் முன் தலையை வருடியபடி கேட்டாள்.

''நம்ம வீட்ல மட்டும் ஏம்மா இப்படி ஆயிடுச்சு?''

''எதுப்பா?''

''சண்டை, அடிதடி, டைவர்ஸுன்னு...''

''சில சமயம் சில வீடுகள்ல அப்படி ஆயிடும் ராசு. சிலருக்கு அப்பா சின்ன வயசுலயே செத்துடுவாங்க. சிலருக்கு அம்மா காலமாயிடுவாங்க. இதுக்கு ஏன் இப்படி ஆயிடுச்சுன்றத விட இப்படி ஆயிட்டா என்ன செய்யறதுன்னு யோசிக்கணும்.''

''நான் என்னம்மா செய்யணும்?''

''நல்லாப் படிக்கணும். இந்த வீட்டுக்கு நீதான் காவல். உன் தங்கச்சிக்கு நல்ல அண்ணனா இருக்கணும். அம்மாவுக்கு நல்ல புள்ளையா இருக்கணும். இது உன் வீடு ராசு. நீதான் சுமக்கணும்.''

பிள்ளை புரியாமல் விழித்தது.

பெரிய பாரம்தான். இந்த வயசுக்கு இத்தனை வார்த்தைகள் இவனெதிரே இறைப்பது கூடச் சுமைதான். ஓடி விளையாடுகிற பிள்ளையைக் கூப்பிட்டு சிவ பூஜை செய் என்கிற கட்டாயம்தான்.

''ஏம்ப்பா, கஷ்டமா இருக்கா?''

''இல்லேம்மா. நான் தங்கச்சியை நல்லாப் பார்த்துக்குவேன். லீவு முடிஞ்சு பள்ளிக்கூடம் போவேன்.''

''வீட்டுச் சாவி உன்கிட்டே ஒண்ணு இருக்கும். விளையாட்டுக்கு நிக்கக் கூடாது. விட்டதும் ஓடியாந்துடணும். பாப்பாவக் கூட்டிட்டு வந்து வீடு திறந்து, பால் வாங்கி வச்சுடணும். அம்மா நேரே வந்து உங்க ரெண்டு பேருக்கும் காப்பி போட்டுத் தந்ததும் படிக்க உட்காரணும்.''

''வெளியே போற போது...''

''நாம மூணு பேரும் போவோம்.''

''பண்டிகைன்னா...''

''நம்ம மூணு பேரும் கொண்டாடுவோம்.''

''அப்பா இல்லாதது நல்லாத்தாம்மா இருக்கு. இனிமே நான் சத்தம் போட்டுப் பாடம் படிக்கலாம். பாட்டுப் பாடலாம். நான் பாடலாமா... சத்தம் போட்டு?''

''எல்லாரும் பாடலாம்.''

''இப்பமேயா?''

''சாப்டுட்டு.''

தானே பிள்ளே திசை மாறிற்று. ஏதோ ஆரம்பித்து எங்கோ முடிந்தது. வீடு எரிந்து சாம்பலானது தெரிகிறது. நீர் பீய்ச்சி அணைத்துச் சாம்பலாக்கியது தெரிகிறது. 'ஹய்' என் பொம்மை என்று பாதி எரிந்த பொம்மைக்கு சந்தோஷப்பட்டு விடுகிறது. சகலமும் பஸ்பம் என்கிற தாக்குதல் நிகழவில்லை.

பன்னிரண்டு வயசு. இவ்வளவுதான் தெரியும். பதினாறு வயசில் இன்னும் அதிகமாய் மிரளும். இருபது வயசில் ஒழுங்காய்க் கேள்வி கேட்கும். இருபத்தைந்து வயதில் ஓஹோ என்று புரிந்து போகும். இவனுடைய இருபத்தைந்து வயதுக்கு இன்னும் பதின்மூன்று வருடம் போக வேண்டும்.

பெண்ணுக்கு எதுவும் தெரியவில்லை. ரசம் சோற்றைச் சிந்தியபடி பாதித் தூக்கத்



பாலகுமாரன்

தில் சாப்பிடுகிறது. உண்டதும் உறங்கி விடும். கால் பரப்பிப் பாவாடை தாறு மாறாய்க் கிடக்க வாய்க்கடையோரம் எச்சில் வழிந்து, கீற்றுக் கோடாய்க் கண் பிரித்துத் தூங்கும். கனவில் உளறும். இனி இதுகள் இஷ்டத்துக்குத்தான் பேச்சும் பாட்டும். குழந்தைகளோடு குழந்தையாய் இன்னொரு பள்ளிக்கூடமாய் வீடும் இருக்கும்.

பானுமதிக்குச் சட்டென்று ஒரு தனிமை வாட்டிற்று. சமதையாய் யாரும் இல்லையே என்று தோன்றியது. தோழிகள் கூட இல்லை. பள்ளிக்கூட டீச்சர்கள் யாரும் தோழியாய் இல்லை. ப்ளஸ் டு படிக்கிற இரண்டு பெண்கள் உண்டு. கொஞ்சம் நெருக்கமாய்ப் பழகும்.

''ஏன் டீச்சர், டல்லாயிருக்கீங்க. வீட்ல எதுனா ப்ராப்ளமா?'' மெல்லக் காதோரம் கேட்கும். ''உடம்பு சரியில்லைன்னா நாங்க ஒண்ணும் பண்ண முடியாது. மனசு சரியில்லைன்னாச் சொல்லுங்க, நாங்க சரி பண்ணிடுவோம்.''

''எப்படிம்மா?''

''கெட்ட ஜோக்லேர்ந்து அறுவை ஜோக் வரைக்கும் நூத்துக்கணக்குலே ஸ்டாக் வச்சருக்கோம்.

''ஜோக் கேட்கற மூட்ல நான் இல்லை, பெண்களா.''

''கவிதை படிக்கலாமா? எங்களுக்குப் பாடம் போரடிச்சதுன்னு வச்சுக்கங்க. இரண்டு பேரும் ஏதாவது ஒரு கவிதை புக் எடுத்து வச்சுச் சப்தம் போட்டுப் படிப் போம்.

''என்ன புக் இருக்கு?''

''வள்ளலார்.

''ஏய்... வள்ளலாரா படிக்கறீங்க. ரொம்பக் கஷ்டம் அது.''

''புரியலை டீச்சர். ஆனா சுகமா இருக்கு. போன பீரியட் பயோ. டீச்சர் டெஸ்ட்டுக்குப் படிக்கச் சொன்னாங்க. கொஞ்சம் படிச்சோம். அப்புறம் இந்தப் புஸ்தகம் பிரிச்சு இரண்டு பேரும் இதை மனப்பாடம் பண்ணினோம்.

''பாதி இரவில் எழுந்தருளி
பாவியேனை எழுப்பி அருட்
ஜோதி அளித் தென் உள்ளகத்தே
சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ் செய் பேரின்ப
நிதி நான் பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியா தென்போல் இவ்
வுலகம் பெறுதல் வேண்டுவனே.





●● அதிர்ஷ்டத்தின் மேல் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. நாம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உழைக்கிறோமோ, அத்தனைக்கத்தனை இந்த அதிர்ஷ்டம் வேகமாக நம்மை வந்தடைகிறது.

— ஸ்டீபன் லீகாக்.

— புத்தனாம்பட்டி சி. மணி.

''என்ன டீச்சர் இது?''

''கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர். அதான் சொன்னாரு. ஓதிமுடியாதுன்றார். பளிச்சுன்னு எதுவோ தெரிஞ்சிருக்கு. பாதி இரவில் எழுந்தருளிப் பாவியேனை எழுப்பி அருட்ஜோதி அளித்து.. சொல்ல முடியலை. எதையும் முழுக்கச் சொல்ல முடியாது பொண்களா. மனசுல இருக்கறது அத்தனையும் வார்த்தையாகாது. நான் ஒரு ஸ்வீட் சாப்பிடறேன். எப்படி இருந்ததுன்னு கேட்கறீங்க. ரொம்ப நல்லா இருந்ததுன்றேன். ரொம்ப நல்லான்னா.... நீ சாப்பிட்டுப் பாரு. உனக்கே தெரியும்னு தான் சொல்ல முடியும்.''

''அதாவது எக்ஸ்பீரியன்ஸை ஷேர் பண்ணிக்க முடியாது.''

''கரெக்ட்.''

''அதாவது..''

''என் கவலையை உன் கிட்டச் சொல்ல முடியாது. சொன்னாலும் புரியாது. என் வேதனை என் வரைக்கும். உன்கிட்டே சொல்றதுல புண்ணியமில்லை.''

''அப்ப ஏன் டீச்சர் பேசிக்கறோம்?''

''முயற்சிதான்.''

''முயற்சி பண்ணா முடியாதா?''

''நெருப்பு சுட்டுருச்சுன்னு சொல்றேன். எப்படித் தெரியும் அந்த வேதனை? உனக்குச் சுட்டது ஞாபகம் வர ஐயோ ரொம்ப எரியுமேன்னுவே. உனக்கு வலிச்ச அளவுக்கா என் வலி. இல்லை வேறே. உன் அனுபவத்தை வச்சு என்னைப் புரிஞ்சுக்கற. முழுக்க இல்லை. முக்காவாசி. அரை வாசி. ஐயோ பாவம்னு சொல்றே. பலன் என்ன? என் கூடச் சேர்ந்து அழலாம். இன்னும் என்னை அழ வைக்கலாம்.''

''அழுகை வலியைக் குறைக்காதா டீச்சர்?''

''இல்லைம்மா. இன்னும் சோர்வைக் கொடுக்கும்.''

''வலிச்சா என்ன செய்யணும்?''

''தனியாப் போய் உட்கார்ந்து தாங்கணும்.''

பெண்கள் இருவரும் டீச்சரை மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''என்ன... பேச்சையே காணோம்?''

''நாங்கள் தனியாகப் போய் உட்காரப் போறோம்.''

''எதுக்கு?''

''உங்களுக்காக ப்ரே பண்ணப் போறோம்.''

''ஏய்...'' சட்டென்று ஒரு மகிழ்வும், துக்கமும் வயிற்றில் பொங்கிற்று.

''எல்லாருக்கும் கிடைக்கிற சந்தோஷம் உங்களுக்கும் கிடைக்கணும் டீச்சர்.''

நன்றி சொல்லக் கூட முடியவில்லை. விக்கித்துப் போய் விட்டது.

சட்டென்று அந்தப் பெண்களின் விரல்களைக் கோத்துப் பிடித்துக் கொண்டாள்.

''ப்ரேயர் பத்தி எனக்குத் தெரியலை. ஆனா ப்ரேயர் பண்றேங்கற உங்க உணர்ச்சியை என்னால புரிஞ்சுக்க முடியுது. இதுபோதும்.'' — உடம்பு முழுக்கப் புது ரத்தம் பரவியது போலிருந்தது.

என்ன துக்கம் என்று கூட அந்தக் குழந்தைகள் கேட்கவில்லை. பதினைந்து நிமிடத்தில் மனசை லேசாக்கி விட்டார்கள்.

''சாவனிஸம்னா என்ன டீச்சர்?''

''தெரியலையே... ஆதிக்கம்னு சொல்லலாம்.''

''மேல் சாவனிஸம் வளர யார் காரணம்னு நினைக்கறீங்க?''

''பெண்தான் காரணம். அவள் இயல்பு.''

''இயல்புன்னா இயற்கையா?''

''எனக்குப் புரியலை. இருந்தாலும் பேசலாம்.'' பானுமதி தொண்டையைச் செருமிக் கொண்டு பேசத் துவங்கினாள்.

''வெட்கம் இயல்பா பெண்களுக்கு?''

''ஆமா டீச்சர்.''

''இல்லை. கத்துக் கொடுத்தது. மிடி போட்டுக்க வெட்கப்படுவியா?''

''இல்லை.''

''உன் பாட்டி அவங்க பதினாறு வயசுல வெட்கப்பட்டிருப்பாங்க. உன்னை மாதிரி எகிறிக் குதிச்சுப் பாஸ்கட்பால் ஆடியிருக்க மாட்டாங்க.''

''ஏஜுக்கு வரும்போது?''

''அதுவும் சொல்லிக் கொடுத்ததுதான். கேலி பண்ணி நொந்து பேசி, தலையில அடிச்சுக்கிட்டு அனுப்போட திட்டிக் குழப்பி விட்டுட்டாங்க.''

''பெண்ணுக்கு வெட்கம் இயல்பில் லைன்றீங்களா?''

''தோணுது. ஆனா என்ன குறை பெண் கிட்ட. உடம்பு வலு கம்மி. தசைநார்கள்ல பலம் கம்மி. ஸோ, இயற்கை நமக்குக் கொடுத்த பலவீனம், அவங்க பலம் நம்மை இரண்டாந்தர பிரஜையாக்கிடுச்சு. ஆதிக்கத்துக்கு அடிமையா மாத்திடுச்சு.''

''எப்படி எதிர்க்கறது?''

''துறவு, தீக்குளித்தல் மாதிரி. தற்கொலை எதிர்ப்புத்தான். ஆனா சரியான எதிர்ப்பில்லை. அவனுக்கு நம்மைப் புரிய வைக்கணும். அவனுக்கும் பொம்பளைன்னா யாருன்னு புரியலை. புரியாத வளர்க்கப்படறாங்க.''

''புரியும்ன்றீங்க எண்ணிக்காவது?''

''புரியுதே. சதி தப்பு. விதவா விவாகமே சரின்னு அவங்களும் சொல்றாங்களே. ஆனா...''

வெகு விரைவில்
உங்கள் குழந்தையின் தேவைகளும்
உங்கள் செலவுகளும் அதிகரிக்கும்



உங்களுக்கு உதவ யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியாவின் குழந்தைகள் பரிசு வளரும் நிதித்திட்டம்.

உங்கள் குழந்தைச் செல்வத்துக்கு நீங்கள் அளிக்கக்கூடிய சிறந்த பரிசு. யூனிட் டிரஸ்டின் குழந்தைகள் பரிசு வளரும் நிதித்திட்டத்தில்* குறைந்தபட்சமாக ரூ. 500/- முதலீடு செய்யுங்கள். உங்கள் கவலைகளுக்கு விடை கொடுங்கள்.

ஒவ்வொரு வருடமும் உத்தரவாதமான 12.5% டிவிடெண்டு மற்றும் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை உற்சாகமூட்டும் போனஸ் டிவிடெண்டு.

உங்கள் குழந்தைக்கு 21 வயதாகும்பொழுது, நீங்கள் அளித்த பரிசுத் தொகை, உங்கள் குழந்தையின் தேவைகளையும் உங்கள் செலவுகளையும் சமாளிக்க தேவையான நேரத்தில் கணிசமான வளர்ச்சி அடைந்திருக்கும்.

மேலும் விவரங்களுக்கு யூனிட் டிரஸ்டின் அலுவலகங்களையோ, ஏஜெண்டுகளையோ, முக்கிய பிரதிநிதிகளையோ, ஸ்பென்சர் அண்டு கம்பெனி கிளைகளையோ அணுகுங்கள். அல்லது கீழ்க்கண்ட கூப்பனை யூனிட் டிரஸ்ட் அலுவலகத்துக்கு தபால் மூலம் அனுப்புங்கள்.

Please send me a FREE CGGF brochure.

Name ____________________

Address ____________________

____

UNIT TRUST OF INDIA H.O. Bombay
(A Public Sector Financial Institution)

Regional Office :
45, Second Line Beach,
Madras 600 001.
Phone : 587433/580938

Our Chief Representatives in Tamil Nadu
☐ COIMBATORE • **A. Dhanabal**, Ph: 34776 ☐ MADURAI • **M. Ramamoorthi**, Ph : 36661, 43179 ☐ THANJAVUR • **K. Muthusamy**, Ph: 20374 ☐ SALEM • **N.K. Inkarsal**, Ph : 66414, 51520 ☐ TRICHY • **M. Ramalingam**, Ph: 41282 ☐ NORTH ARCOT • **P. Narayanan**, Ph : 21575 (Vellore) ☐ SOUTH ARCOT • **S. Balakrishnan**, Ph : 546, 46 (Cuddalore) ☐ KANYAKUMARI • **S. Subhas Chandra Bose**, Ph : 4449 (Nagercoil) ☐ NILGIRIS • **M. Madhavan Nambiar**, Ph : 6253, 7037 (Coonoor) ☐ PERIYAR • **K. Jyothi Ramalingam**, Ph :74958, 74765 (Erode)

* 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே CGGF பரிசு அளிக்க முடியும். பரிசுத்தொகை மற்றும் போனஸ் குழந்தையின் வயது இவற்றைப் பொறுத்து திட்ட முடிவில் அளிக்கப்படும் தொகை வேறுபடும்.

Sista's – UTI.1188.89.TM B

''என்ன டீச்சர்?''

''முழுக்கப் புரியறது கடைசி வரைக்கும் நடக்கவே நடக்காதோன்னு பயம்மா இருக்கு.''

மூன்று பேரும் மௌனமாய்ப் பள்ளிக் கூட வராந்தாவில் தோட்டம் பார்த்து உட்கார்ந்திருந்தார்கள். அந்த மௌனத்தில் ஒன்றுபட்ட அக்கறையில் ஸ்நேகம் வலுப் பட்டது. ஆனால் அதற்கும் தீங்கு வந்தது.

''ஏன் இந்த இரண்டு பெண்களுடன் நீ அதிகம் பழகுகிறாய். தள்ளி நில். ஆசிரியை அதிகம் பிள்ளைகளுடன் பேசுவது நல்ல தல்ல!'' கட்டளை வந்தது.

என்ன பேசுகிறாய் என்று கேட்கப்பட வேயில்லை. ஏன் பேசுகிறாய் என்றுதான் கேட்டார்கள். கேட்டவளும் பெண். நாலு பெண் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தால் ஐந்தாவது பெண்ணுக்கு எரியும். தன்னைப் பத்தித்தானோ சிரிப்பு என்று பயம் வரும். 'கூடிக் கூடி சிரிக்கறதப் பார். ஒரு பொம் பளைக்கு அப்படிச் சிரிக்க என்ன இருக்கு?'

ஆணை விடப் பெண்கள் பெண்களுக் குப் பயப்பட்டார்கள். ஆண் மறுமணம் செய்வதை தாசி வீட்டுக்குப் போவதை மற்ற ஆண் பெரிதாக்கவில்லை. 'ஒழியறான் விடு' என்று ஒதுங்கினார்கள். 'சரி அவனிஷ்டம்' என்று ஒதுங்கினார்கள். ஆனால், பெண் சிரித்தால் கூடப் பெண் கண்டித்தாள். மறுமணம் செய்தால் நிந்தித் தாள். இரண்டாவது ஆணோடு பேசி னாலே அசிங்கம் என்று வாதாடினார்கள். கற்பு ஆணால் பெண்ணுக்குப் போடப் பட்ட விலங்கு. பெண் அதை ஆபரணமாக் கிக் கொண்டாள். அதில் வைரம் இழைத் தாள். தங்க வளையல்களும் புல்லாக்கும் மூத்து மூக்குத்தியுமாய் மாற்றினாள். என் கிட்ட எத்தனை அழகா விலங்கு ஜொலிக் குது பார் என்று கம்பீரம் காட்டினாள்.

தாலி பெண்ணுக்கு வேலி. வேலிக்குள் பிறகு எப்படி மனுஷி இருப்பாள்? மாடு தான் இருக்கும். மாடு மாட்டை முட்டிற்று. தனிக் கூட்டமாய்ப் புல்மேய்ந்தது. சின்ன அசைவுக்கும் மிரண்டது.

"அம்மா சோறு போறும்மா...'' பையன் கூவ, பானுமதி மனசு கலைந்து நிமிர்ந்தாள்.

''ஏம்பா?''

''இரண்டாந் தடவை வச்சிட்டீங்களே.''

''ஸாரி.எடுத்து என் தட்டுல போட்டுரு.''

''எச்சில் இல்லை?''

''பரவால்லப்பா. கையலம்பிட்டுத் தங்கச் சிக்குப் படுக்கை போடு. சுருள்வத்தி கொளுத்தி வை. கொசு கடிக்குது.''

பையன் தட்டிலிட்ட சாதம் பிசைந்து ரசம் ஊற்றிச் சாப்பிட்டாள். பாத்திரங்கள் ஒழித்துப் போட்டாள்.

பிள்ளை, பெண் முதுகு தட்டித் தூங்கச் செய்து கொண்டிருந்தான். தரை அலம்பி விட்டு நிமிரும் போது பக்கவாட்டில் தகப்ப னைப் போலவே தெரிந்தான். இவன் என்ன செய்யப் போகிறான்? இன்றைக்குப் படுக்கை போட்டுத் தங்கை முதுகைத் தட்டித் தூங்கச் செய்கிறவன் நாளை தன் மனை விக்கும் செய்வானா... செய்யும்படி வளர்க்க வேண்டும். முடியுமா? இல்லை. மெல்ல, மெல்ல வளர வளர ஆணாதிக்க மும், கர்வமும், முரட்டுத்தனமும் வளருமா?

வெட்கம் இயல்பில்லை.

முரட்டுத்தனமும் கர்வமும் இயல் பில்லை. சூழ்நிலை.வளர்ந்த விதம். பாராட் டுக்களை அலட்சியப்படுத்த இவனுக்குச் சொல்லித் தர வேணும். இன்றைக்குப் பேசி யது போலவே என்றைக்கும் இவனோடு இதமாய்ப் பேச வேண்டும். என்னால் முடி யுமா?

''யம்மோவ்... பானுமதியம்மா'' — வாச லில் குரல் கேட்டது.

பையன் எழுந்தான். ''இரும்மா நான் பார்க்கறேன். விரைந்து போய் வாசற் கதவு திறந்தான்.

''யாரு? உனக்கு என்ன வேணும்?'' — அதட்டலாய்க் குரல் கொடுத்தான்.

''ராசு, நிதானமாய்க் கேளு.'' பானுமதி எச்சரித்தாள்.

''காலைல பார்த்தமே.. பூக்காரம்மா, அவங்க.''

''அடே...'' — உள்ளே சந்தோஷம் பர பரத்தது. பரபரத்துத் துடைப்பம் போட்டு விட்டுக் கதவருகே போனாள்.

''என்ன பூக்காரம்மா... வா. உள்ளே வா.''

''எனக்கும் கிடைச்சுடுச்சும்மா. கவுறு அவுத்து ஜட்ஜு டேபிள்ல வச்சுக் கும்பிடு போட்டுட்டே வந்துட்டேன்.''

''பிறகு?''

''எங்க ஆட்ல சண்டை. வெளிய போடின்னுட்டான். ரெண்டு துணியச் சுத்திக்கிட்டுக் கிளம்பிட்டேன்.''

''சாப்பிட்டியா..'' பானுமதி கேட்டதும் அவள் வராந்தாவில் உட்கார்ந்து முகம் பொத்தி அழுதாள்.

(தொடரும்)

''நெஞ்சு வலி'ன்னு டைப்பிஸ்ட் ராம சாமி டாக்டர்கிட்டே போனாரே! டாக் டர் என்ன சொன்னாராம்?''

''டைப்ரைட்டர்'லே சாய்ஞ்சு தூங் கக் கூடாதுன்னுட்டாராம்!''

— எஸ். பிரியதர்சினி.




மில்க் பிக்கிஸ் பிரியர்களுக்கு
ஒளிமயமான வருங்காலம் இருக்கு.
BRITANNIA
Milk Bikis
பிரிட்டானியா மில்க் பிக்கிஸ்
வளரும் குழந்தைகளுக்கு
சுவையான துணை
பிரிட்டானியா

பொய்யின் விலை!

ராஜேஷ்குமா



வாசலில் செருப்புகளை உதறி வீசி யெறிந்து விட்டு, அவன் உள்ளே நுழைந்த வேகத்தைப் பார்த்ததுமே ராஜம் புரிந்து கொண்டு விட்டாள் — கணவன் கடும் கோபத்துடன் வந்திருக்கிறான் என்பதை.

வாசலில் நின்ற சதீஷ் காலில் போட்டிருந்த ஷூவைக் கழட்ட முயன்று கொண்டிருந்தான்.

"என்னங்க சதீஷை திரும்பிக் கூட்டிட்டு வந்துட்டீங்க? ஸ்கூல்ல உட்கார மாட்டேன்னு அடம் புடிச்சானா? அழுதானா...?"

சதீஷை முதல் வகுப்பில் சேர்ப்பதற்காக அழைத்துச் சென்ற கணவன், கோபமாகத் திரும்பியிருப்பதன் காரணம் புரியாத ராஜம் படபடவெனக் கேட்டாள்.

பாஸ்கர் பேசவில்லை.

வெயிலில் வந்ததால் வியர்த்திருந்தான். அவசரமாகச் சட்டையைக் கழற்றிக் கட்டிலில் வீசியவன், துண்டைத் தேடினான். அது அவன் கண்களில் மாட்டாததால் மேலும் கோபமுற்றான்.

"ஸ் ஸ்... ஸ்.. துண்டை எங்கே தொலைச்சே...?"

"அதோ, அங்கேதாங்க கிடக்கு..."

ஓடி வந்து எடுத்துக் கொடுத்தாள். ஃபேனைப் போட்டு விட்டாள். அதுவும் சதி செய்தது — பவர் கட்!

சேரில் உட்கார்ந்து, வழிந்த வியர்வையை அழுந்தத் துடைத்துக் கொண்டான்.

"என்னாச்சுங்க?"

"ஜூன் 30ம் தேதி அஞ்சு வயசு முடிஞ்சவங்களை மட்டும்தான் ஒண்ணாங்கிளா

சிலே சேர்த்துக்குவாங்களாம். சதீஷ் அக்டோபர் 10ஆம் தேதி தானே பொறந்தான். அஞ்சு வயசு முடிய இன்னும் மூணு மாசமிருக்கே...''

''அப்படின்னா எப்ப சேர்த்துக்குவாங்களாம்...?''

''அடுத்த வருஷம்தான் சேர்த்துக்குவாங்களாம். திரும்ப ஒரு வருஷம் நர்சரியிலேயே போடுங்கன்னு சொல்லிட்டார் ஹெட்மாஸ்டர்..''

''ஒரு வருஷம் வேஸ்ட் ஆகிடுமேங்க? யாரையாவது ஆளைப் புடிச்சுச் சிபாரிசு பண்ண முடியுமான்னு பாருங்களேன்..''

''ஹெட்மாஸ்டர் உறுதியாச் சொல்லிட்டார். ஆனா ஒரே ஒரு வழியிருக்கு. யாராவது ஜனங்களுக்குத் தெரிஞ்ச ஒரு வி.ஐ.பி. கிட்டே ஜூன் மாசத்திலேயே பொறந்துட்டான்னு, ஒரு பொய் சர்ட்டிபிகேட் வாங்கிட்டுப் போனாச் சேர்த்துக்குவாங்களாம். ஆனால் இந்த ஊரிலே எந்த முக்கியஸ்தரும் எனக்குப் பழக்கமில்லையே? யாருக்கிட்டேயும் போய்ப் பல்லைக் காட்டி பொய் சர்ட்டிபிகேட் வாங்க என்னால் முடியாது.''

பாஸ்கர் கொஞ்சம் 'ரிசர்வ்ட் டைப்'. நெருங்கிய நண்பர்களிடத்தில் கூட அளந்துதான் பேசுவான். அவனுக்கு எங்கே முக்கியஸ்தர்களைத் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்? அப்படியே தெரிந்திருந்தாலும், பொய்யாக சர்ட்டிபிகேட் வாங்குவதென்பது அவனது கொள்கைக்கு விரோதமான விஷயம்.

''முக்கியஸ்தர்னா யாருங்க...?'' புரியாமல் கேட்டாள் ராஜம்.

''வேற யாரு? எம்.எல்.ஏ., எம்.பி.. கட்சியிலே முக்கியமானவங்க, மேஜிஸ்ட்ரேட்டுங்க.. இந்த மாதிரி யாராவதுதான்...''

ராஜத்தைக் கவலை கவ்விக் கொண்டது.

அவன் அரை நாள்தான் கம்பெனிக்கு லீவு போட்டிருந்தான். அவசரமாகச் சாப்பிட்டு விட்டுக் கிளம்பினான்.

மாலையில் வீடு திரும்பிய பாஸ்கரை, ராஜம் ஆவலோடு எதிர்கொண்டாள்.

''மூணாவது வீட்டில் இருக்கிற லதாவின் மகளுக்கும் இதே பிரச்னைதானாங்க. அவங்க, ரத்தினசாமின்னு 'எக்ஸ் எம்.எல்.ஏ.' இருக்காராமே, அவருக்கிட்டேதான் பெர்த் சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்தாங்களாம். ஐம்பது ரூபா கொடுத்தாக் கண்ணை மூடிக்கிட்டு கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறாராம்! உடனே போய் வாங்கிட்டு வந்துடுங்க...'' வழி கண்டு பிடித்து விட்ட சந்தோஷத்தில், உற்சாகமாகப் பேசினாள்.

''ஓஹோ! அந்த ஆசாமியா..?'' அலட்சியமும் கிண்டலுமாகக் கேட்டான்.

போன ஜனவரியில் எலக்ஷனில் மீண்டும் நின்ற அந்த ரத்தினசாமி வோட்டுக் கேட்க வந்த போது நடந்த வாக்குவாதம் அவன் நினைவுக்கு வந்தது.

'போன முறை நீங்கதான் எம்.எல்.ஏ.யா இருந்திருக்கீங்க. போன தேர்தல் சமயத்திலே நீங்க தொகுதி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியிலே ஒண்ணையாவது நிறைவேத்தினீங்களா சார்...?' நேருக்கு நேராக, சூடாகக் கேட்டான் பாஸ்கர்.

''அது... அது வந்து... சந்தர்ப்பச் சூழ்நிலை...' தடுமாறினார்.

'சார்...! தேர்தல் சமயத்துலே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேத்தாட்டாப் பரவாயில்லை. அதுக்கான முயற்சியையாவது செய்திருக்கணுமே சார்? முடியாதவங்க ஏன் சார் வாக்குறுதிகளை வாரி இறைத்து அப்பாவி மக்களை ஏமாத்துறீங்க..?' பேசுவது தன் கணவன்தானா? என்று ராஜம் வியக்குமளவுக்குப் பேசி விட்டான் அன்று!

''ஐம்பது ரூபாதானாங்க... போய் வாங்கிட்டு வந்திடுங்க..'' மீண்டும் வலியுறுத்தினாள் ராஜம்.

''அதெல்லாம் என்னாலே முடியாது. நீ போய் வேலையைப் பாரு...'' சுயநினைவிற்கு வந்தவன், தூக்கியெறிந்தாற்போல பதில் சொன்னான்.

அவள் முகம் சுருங்கிப் போய், அழுகை முட்டிக் கொண்டு வந்தது. கோடை மழை போல வெடிப்புடனும், விசும்பலுடனும் கண்ணீரைப் பொழிய ஆரம்பித்து விட்டாள்.

''ஏய், ஏய்.. அழ ஆரம்பிச்சுட்டியா...? நிறுத்து, நிறுத்து...

''பின்னே என்னங்க? ஊர் உலகத்திலே ஆம்பிளைங்க எவ்வளவு சமத்தா இருக்காங்க. பேசறதுன்னாலே கூலி கேட்பீங்க. நான் அவுங்கள, இவுங்களக் கேட்டு வந்து ஐடியா சொன்னாலும் கேட்க மாட்டீங்க...'' அழுகையெனும் பின்னணி இசையோடு அவள் பேசினாள்.


''இங்க பாரு ராஜம். பொய் சர்ட்டிபிகேட் வாங்குறது எனக்குப் பிடிக்கலே. அது தேவையும் இல்லே. என்னாலே முடியாது. வேற ஏதாவது இருந்தாப் பேசு...''

''ஆமா! பெரிய அரிச்சந்திரன். பிள்ளையோட படிப்பு ஒரு வருஷம் வீணாகுது. அதைப் புரிஞ்சுக்க மாட்டேங்குறீங்க. நாலு வார்த்தை நயமாப் பேசி, ஒரு காரியத்தைச்

ஆசிரியர்: எத்தனை தடவை திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னாலும் உன் மண்டையிலே ஏறவே மாட்டேங்குதே. ஏன்?

மாணவன்: அதுதான் சார் என்னோட ''ஸ்பெஷாலிடி''

— நகைச்சுவைப் பிரியன்.



சாதிக்க முடியாது உங்களாலே! உங்க கையாலாகாத்தனத்தை மறைக்க ஏதாவது சாக்குச் சொல்லிடுங்க...'' அவனது ரோஷ நரம்புகளை மீட்டி விட்டு விட்டாள். அது குதிக்கவும், கொதிக்கவும் ஆரம்பித்து விட்டது.

''சரி, சரி உன் புலம்பலை நிறுத்தித் தொலை. இப்பவே போய் பொய் சர்ட்டிபிகேட்டை வாங்கிட்டு வந்து தொலைக்கிறேன்! உள்ளே பர்சிலிருந்து அம்பது ரூபா பணத்தை எடு. கொஞ்சம் காப்பி கொடு...'' கோபத்தோடும், வெறுப்போடும் சிடுசிடுத்தான் பாஸ்கர்.

நாலைந்து முறை இந்தப் பக்கம் வந்திருந்தாலும், இன்றைக்குத்தான் அந்த பங்களாவை கவனித்துப் பார்த்தான். அதன் முகப்பிலேயே பணக்காரத்தனம் ஒய்யாரமாகச் சப்பணமிட்டு அமர்ந்திருந்தது.

பெல் படம் போட்ட ஸ்விட்ச்சை அழுக்கினான். காத்திருந்தான்.

''என்ன சார் வேணும்...?'' வேலைக்காரன் மாதிரி இருந்தான்.

''ஐயா இருக்காரா...? ஐயாவைப் பார்க்கணும்...'' — 'ஐயா'வில் பணிவு கூட்டினான்.

''என்ன விஷயம்னு சொல்லுங்க சார்...?''

''ஒரு, பெர்த் சர்ட்டிபிகேட் வாங்கணும்...''

''ஐம்பது ரூபா ஆகும் சார்...''

தலையை ஆட்டினான்.

உள்ளே தொடர்ந்து நுழைந்தான். சினிமாவில் காண்பிப்பது போல பிரமிப்பூட்டும் ஹால். எதிர் எதிரே சோபா செட்டுகள்.

தயங்கியபடி அமர்ந்தான். 'என்னை மறந்திருக்க மாட்டாரோ?'

ஐந்து நிமிட காக்க வைத்தலுக்குப் பிறகு ஒரு பந்தாவான செருமலோடு வந்தார்.

எழுந்து கும்பிட்டான். தலையசைத்து விட்டு உட்கார்ந்தவர், அவனையும் உட்காரச் சொல்லிக் கையசைக்கும் போது முகத்தைக் கவனித்தார்.

சட்டென்று நினைவுக்கு வந்து விட்டது!

'நிறைவேத்த முடியாதவங்க, ஏன் சார் வாக்குறுதிகளை வாரி இறைத்து...'

''நீயா தம்பி...?'' 'நீயா'வில் ஒரு கேலி, ஏளனம், இளக்காரம்...

அவன் பதில் சொல்லத் தோன்றாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன விஷயமா வந்தீங்க?'' ஒருமையை விட்டுப் பன்மைக்கு மாறினார்.

''ஒரு பெர்த் சர்ட்டிபிகேட்...''

''அவ்வளவுதானா? நான் என்னமோ, ஏதோன்னு பயந்துட்டேன்.'' செயற்கையாக பயம் காட்டினார். ''கொண்டாங்க, கொண்டாங்க. எங்கே கையெழுத்துப் போடணும்? சொல்லுங்க?''

அவன் டைப் செய்து கொண்டு வந்திருந்த பேப்பரை நீட்ட, படித்துப் பார்க்காமலே கையெழுத்துப் போட்டார். ''ஸ்கூல் அட்மிஷன் பிரச்னையா...? என்று இவனைக் கேட்டு விட்டு, ''ஏம்பா... இதுலே ஒரு சீல் வைச்சுக் கொண்டு வா...'' என்றார்.

வேலையாள் ரப்பர் ஸ்டாம்பையும், பேடையும் தூக்கிக் கொண்டு ஓடி வந்தான். சீல் வைத்தான்.

'சட்ட மன்ற உறுப்பினர்' என்ற வாசகத்துக்கு முன்னே 'EX' என்று எழுதி, பாஸ்கரிடம் நீட்டினார்.

வாங்கிக் கொண்ட பாஸ்கர், பாக்கெட்டில் இருந்த ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான்.

''வேண்டாம், வைச்சுக்கோங்க தம்பி...'' முகத்தில் ஒரு வித்தியாசமான புன்னகையோடு மறுத்தார்.

ஏன் மறுக்கிறார்? — பாஸ்கருக்குப் புரியவில்லை. 'இன்னா செய்தார்க்கும் அவர் நாண நன்னயம்' செய்ய நினைக்கிறாரோ?

''நான் ஒரு பொய் சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கேன். அதாவது உங்க மகனுக்கு அஞ்சு வயசு முடிஞ்சிடுச்சுன்னு நான் பொய் சொல்லியிருக்கேன். அந்தப் பொய்க்கு விலையா ஐம்பது ரூபாயை வாங்கிக்க நான் விரும்பலை. அதுக்குப் பதிலா உங்கிட்டே வேற ஒண்ணு எதிர்பார்க்கிறேன்...''

கண்களை அகல விரித்து அவரைப் பார்த்தான்.

''பொய் சொல்றது அப்படியொண்ணும் மகாப்பெரிய தப்பு இல்லேங்கிறத நீங்க புரிஞ்சுக்கிட்டீங்கன்னு நினைக்கிறேன். நமக்குஒருநன்மையோ,சுகமோகிடைக்கும்னா எல்லோருமே பொய் சொல்லத் தயாராகிடுறோம், இல்லையா? தேர்தல் வாக்குறுதியும் அப்படித்தானே? எம்.எல்.ஏ. ஆகிட்டா எனக்கு எத்தனையோ சலுகைகளும், உபசாரங்களும் கிடைக்குது. எனக்குக் கிடைக்கப் போற சில வசதிகளுக்காக, தேர்தல் சமயத்திலே 'மக்களுக்கு அதைச் செய்துடுவேன், இதைச் சாதிச்சுடுவேன்'னு பொய் சொன்னேன்! தப்பா? ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் பண்ணலாம்கிறப்போ, ஒரு பத்துப் பதினைஞ்சை மட்டும் சொல்லி, எம்.எல்.ஏ. ஆகக் கூடாதா என்ன? இப்ப நான் சொல்லியிருக்கிற பொய்க்கு விலையா நீங்க அம்பது ரூபாய் தர வேண்டியதில்லை. பதிலா, தேர்தல் சமயத்திலே பொய் சொல்றதிலே தப்பில்லேன்னு ஒத்துக்கிட்டு எனக்கு லேசாத் தலையாட்டினாலே போதும்...'' ப்ளாக் மெயில் செய்யும் வில்லன் மாதிரி நீட்டி முழக்கினார்.

பாஸ்கர் விருட்டென்று எழுந்தான். கையில் இருந்த பெர்த் சர்ட்டிபிகேட்டை சுக்கல் நூறாகக் கிழித்து வீசினான். துண்டுகள் ஃபேன் காற்றில் ஹால் முழுவதும் பறந்தன. வாசலை நோக்கி வேகமாக நடந்தான்.

பொன்னியின் செல்வன்



அத்தியாயம் 25

கோட்டை வாசலில்

மந்திராலோசனை நடந்த இடத்திலிருந்து வெளிவந்த பூதிவிக்கிரமகேசரி, அங்கேயிருந்த குதிரை மேல் தாவி ஏறினார். தஞ்சைக் கோட்டையின் வடக்குவாசலுக்கு விரைந்து சென்றார். அதே சமயத்தில் யானை ஒன்று வடக்கு வாசலை நெருங்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்தார். யானையின் மேல் யானைப்பாகன் ஒருவனும் இரண்டு ஸ்திரீகளும் இருந்தார்கள். யானைப்பாகன் தன் கையில் வைத்திருந்த கொம்பை வாயில் வைத்துச் சிறிது நேரம் முழக்கினான். பின்னர், கிறீச் என்று உச்ச ஸ்தாயியில் ஒலித்த குரலில், கணீர் என்றும், தெளிவாகவும் அவன் கூறியதாவது: —

"ஈழத்துப்பட்ட பராந்தகன் சிறிய வேளாரின் செல்வப் புதல்வி, கொடும்பாளூர்ப் பெரிய வேளார் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரியின் வளர்ப்புக் குமாரி, பழையாறை இளையபிராட்டி குந்தவை தேவியின் அருமைத் தோழியரான வானதி தேவியார் வருகிறார்! பராக்! பராக்! வழி விடுங்கள்!"

கோட்டை வாசலுக்குச் சமீபத்தில் அகழிக் கரையை அடைந்ததும் அவன் மறுபடியும் ஒருமுறை கொம்பை வாயில் வைத்து ஊதினான். அதன் எதிரொலி நிற்பதற்குள்ளே மறுபடியும் அவன் முன் போன்ற கிறீச்சுக் குரலில் கூறியதாவது:—

"கொடும்பாளூர் இளவரசி வானதி தேவியார் இளையபிராட்டியிடமிருந்து சக்கரவர்த்திக்குச் செய்தி கொண்டு வருகிறார். பெரிய பழுவேட்டரையரிடமிருந்து சின்னப் பழுவேட்டரையருக்கு முக்கியமான செய்தி கொண்டு வருகிறார்! கோட்டைக் கதவைத் திறவுங்கள்! பராக்! பராக்! கொடும்பாளூர் இளவரசிக்கும் அவருடைய தோழி பூங்குழலி அம்மைக்கும் உடனே வழி விடுங்கள்! கோட்டைக் கதவைத் திறந்து விடுங்கள்!"

இவ்வாறு யானைப்பாகன் கூவியதைக் கேட்டுச் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி அடைந்த வியப்பு இவ்வளவு என்று சொல்ல முடியாது. அந்த யானைப்பாகன் குரலை எங்கேயோ எப்போதோ கேட்டது போலிருககிறதே? அவன் யார்? யானைப்பாகன் யாராயிருந்தால் என்ன? யானை மேல் இருப்பது வானதிதானா என்பதையல்லவா முதலில் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும்? அவள் கோட்டைக்குள் போகாமல் தடுத்து நிறுத்த வேண்டுமே? வானதியாயிருந்தால் மிக்க நல்லதாய்ப் போயிற்று! இந்தச் சிக்கல்கள் எல்லாம் தீரும் வரையில் குழந்தை நம்மிடத்தில் இருப்பதே நல்லது! ...இவ்வாறு எண்ணிக் கொண்டே சேநாதிபதி குதிரையைத் தட்டி விட்டுக் கொண்டு போய் யானையின் சமீபத்தை அடைந்தார். அவர் பின்னோடு

அமரர் கல்கி

விரைந்து வந்த வீரர்களில் ஒரு வீரன் தீவர்த்தி கொண்டு வந்தான். அதன் வெளிச்சத்தில் யானை மீதிருந்தவர்களைப் பார்த்த போது பெண்கள் இருவரும் சிறிய வேளாரின் புதல்வி வானதியும் பூங்குழலியுந்தான் என்று தெரிய வந்தது.

''குழந்தாய்! வானதி!'' என்று அவர் ஏதோ சொல்வதற்குள் யானைப்பாகன் மறுபடியும் கொம்பு ஊதத் தொடங்கினான். அவனை எப்படி நிறுத்தச் செய்வது?

நல்ல வேளையாக இதற்குள் யானை மேலிருந்த பெண்கள் தங்களை நெருங்கி வந்த குதிரை மேல் இருப்பவர் யார் என்று உற்றுப் பார்த்தார்கள்.

உடனே, வானதி, யானைப் பாகனிடம் ஏதோ சொல்லி அவன் கொம்பு முழக்கத்தை நிறுத்தி விட்டு, ''பெரியப்பா! தாங்கள்தானா? நான் கேள்விப்பட்டது உண்மைதான்!'' என்றாள்.

''ஆம், குழந்தாய்! நான்தான்! ஆனால் இது என்ன விசித்திரம்? செய்தி கொண்டு வருவதற்கு நீதானா அகப்பட்டாய்? இளையபிராட்டிக்கு வேறு யாரும் அகப்படாமலா போய் விட்டார்கள்! அதிலும் இப்பேர்ப்பட்ட நிலைமையில்!'' என்றார் சேநாதிபதி.

''ஆம், பெரியப்பா! இப்பேர்ப்பட்ட நிலைமையாயிருப்பதினாலேதான் என்னைச் செய்தி கொண்டு போக அனுப்பினார். தாங்கள் சைன்யத்துடன் வந்து தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்தது. வேறு யாரையாவது அனுப்பினால் ஒருவேளை தங்கள் படை வீரர்கள் தடுத்து நிறுத்தி விடக்கூடும். தாங்கள் அனுமதித்தாலும் கோட்டைக்குள்ளே இருப்பவர்கள் கதவைத் திறந்து விட மறுத்து விடலாம். என்னை அனுப்பி வைத்தால் இரண்டு காரியத்துக்கும் அனுகூலமாயிருக்கலாம் என்று அனுப்பியுள்ளார்கள். துணைக்குப் பூங்குழலியையும் அனுப்பினார்கள்....''

''ஆமாம், ஆமாம்! இந்த ஓடக்காரப் பெண் வெகு கெட்டிக்காரி. அது முன்னமே எனக்குத் தெரிந்த விஷயந்தான். ஆனால் நீ அப்படி என்ன செய்தி கொண்டு வந்தாய்? இரவுக்கிரவே தூது அனுப்ப வேண்டிய அவ்வளவு அவசரமான செய்தி என்ன?''

''அவசரமான செய்திதான், பெரியப்பா! பொன்னியின் செல்வரைப் பற்றிச் சக்கரவர்த்திக்குச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன்.''

''ஆகா! பொன்னியின் செல்வரைப் பற்றியா? அவரைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?''

''ஏன்? எவ்வளவோ தெரியும். அவர் வீராதி வீரர், சூராதி சூரர், காவேரியில் அமுங்காதவர், கடலில் விழுந்தாலும் முழுகாதவர், அண்டினோரைக் கைவிடாதவர். ஆபத்தில் உதவி செய்தவர்களிடம் நன்றி மறவாதவர், அன்னை தந்தையிடம் பக்தி உள்ளவர், தமக்கையார் சொல்லைத் தட்டாதவர், இராஜ்யத்தில் ஆசையில்லாதவர்....''

''போதும், போதும்! அதையெல்லாம் நான் கேட்கவில்லை. இளவரசர் சௌக்கியமாயிருக்கிறாரா? இப்போது அவர் எங்கேயிருக்கிறார் என்று உனக்குத் தெரியுமா?''

''சௌக்கியமாக இருக்கிறார், பெரியப்பா! இப்போது எங்கேயிருக்கிறார் என்றும் தெரியும். ஆனால் அதைத் தங்களிடம் கூற முடியாது!''

''என்ன? சொல்ல முடியாதா? என்னிடம் கூடவா சொல்ல முடியாது? நீதானா பேசுகிறாய், வானதி?''

''ஆம், பெரியப்பா! நான்தான் பேசுகிறேன். இளவரசர் இருக்குமிடத்தை ஒருவரிடமும் சொல்வதில்லையென்று வாக்களித்திருக்கிறேன்.''

சேநாதிபதி பூதி விக்கிரமகேசரிக்கு ஆக்கிரோஷம் பொங்கி ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.

''பெண்ணே! இளையபிராட்டியிடம் அனுப்பினால் உன்னை நல்ல முறையில் வளர்ப்பாள் என்று நம்பினேன். இவ்வளவு பிடிவாதக்காரியாக வளர்த்து விட்டாளே? போதும், போதும்! நீ பழையாறையில் இருந்தது போதும். கீழே இறங்கு! உன்னைக் கொடும்பாளூருக்கு அனுப்பி விட்டு மறு காரியம் பார்க்கிறேன்'' என்றார்.

''பெரியப்பா! எனக்கும் இந்தத் தஞ்சாவூர் மண்ணை மிதிக்கவே இஷ்டமில்லை. ஆகையினால்தான் யானை மேல் ஏறி உட்கார்ந்திருக்கிறேன். இந்த யானைக்கு அடிக்கடி மதம் பிடித்து விடுகிறது. இன்று காலையில் ஒருவனைத் தூக்கி எறிந்து விட்டது. ஆகையினால், அருகில் ரொம்ப நெருங்கி வராதீர்கள். நான் கொண்டு வந்திருக்கும் செய்திகளைச் சொன்ன பிறகு நானே தங்களிடம் வந்து விடுகிறேன். என்னைக் கொடும்பாளூருக்கு அனுப்புங்கள்; அல்லது என் தந்தையிருக்குமிடத்துக்கே அனுப்பினாலும் அனுப்பி விடுங்கள். இப்போது மட்டும் என்னைத் தடுத்து நிறுத்தாதீர்கள்!'' என்றாள் வானதி.

பூதி விக்கிரமகேசரி சிறிது யோசித்து விட்டு, ''சரி, மகளே! நான் உன்னைத் தடுத்து நிறுத்தாமல் விட்டு விடுகிறேன். கோட்டைக் கதவு திறக்கா விட்டால் என்ன செய்வாய்?'' என்றார்.

''பெரியப்பா! நீங்கள் இவ்வளவு பெரிய படைகளுடன் வந்திருக்கிறீர்களே? எதற்

காக? கோட்டைக் கதவு திறக்கா விட்டால், உங்கள் படைகளை ஏவிக் கதவை உடைத்துத் திறந்து விடச் செய்யுங்கள்!'' என்றாள் வானதி.

பூதிவிக்கிரமகேசரி இதைக் கேட்டுப் பெருமிதம் அடைந்தார். "மகளே! கொடும்பாளூர்க் கோமகள் பேச வேண்டியவாறு பேசினாய். அவசியம் ஏற்பட்டால் அவ்விதமே செய்வேன். ஆனால் அதற்கு அவசியம் ஏற்படாது. இளையபிராட்டியிடமிருந்து சக்கரவர்த்திக்குச் செய்தி கொண்டு வந்திருக்கும் உன்னைத் தடுத்து நிறுத்த இந்தச் சின்னப் பழுவேட்டரையன் யார்? அவ்விதம் அவன் ஒருநாளும் செய்ய மாட்டான். ஆனால் எனக்காகவும் சின்னப் பழுவேட்டரையனிடம் ஒரு செய்தியைச் சொல்! நீ கோட்டைக்குள் இருக்கும் போது உனக்கு ஏதாவது சிறிய தீங்கு நேர்ந்தாலும் அவனுடைய குலத்தைப் பூண்டோடு அழித்து விடுவேன் என்று சொல்! நானும் என்னுடைய துணைவர்களும் சக்கரவர்த்தியை நேரில் பார்த்து அவருடைய விருப்பத்தை அவருடைய வாய்மொழியாகத் தெரிந்து கொள்ள வந்திருக்கிறோம் என்றும் சொல்! நாளைப் பகல் பொழுது போவதற்குள் சக்கரவர்த்தியை நாங்கள் தரிசிக்க அவன் வகை செய்யா விட்டால், கோட்டையைத் தாக்கத் தொடங்கி விடுவோம் என்றும் தெரியப்படுத்து!'' என்றார்.

"அப்படியே ஆகட்டும், பெரியப்பா!'' என்றாள் வானதி.

மறுபடியும் யானைப்பாகன் கொம்பு முழக்கினான்.

"கொடும்பாளூர் இளவரசிக்கு வழி விடுங்கள்! கோட்டைக் கதவைத் திறந்து விடுங்கள்!'' என்று கூவினான்.

அத்தியாயம் 26

வானதியின் பிரவேசம்

கோட்டைக்குள்ளே சின்னப் பழுவேட்டரையர் பெரும் மனக் கலக்கத்துக்கு உள்ளாகியிருந்தார். வீர தீரங்களில் அவர் யாருக்கும் சளைத்தவர் அல்ல. ஆனால் தமையனாருடைய யோசனையைக் கேட்டே எந்தக் காரியமும் செய்து பழக்கப்பட்டவராதலால் இந்த நெருக்கடியான நிலைமையில் சிறகு இழந்த பறவையைப் போல் தவித்தார்.

அன்று காலை முதல் ஒன்றன் பின் ஒன்றாக விபரீதமான செய்திகள் அவர் காதுக்கு எட்டிக் கொண்டிருந்தன.

பெரிய பழுவேட்டரையர் கடம்பூர் சம்புவரையர் மாளிகையிலிருந்து தஞ்சைக்குப் புறப்பட்டு இரண்டு தினங்களுக்கு மேலாயின என்று ஒரு செய்தி கிடைத்தது. புயல் அடித்த அன்று கொள்ளிட நதியைக் கடந்து கொண்டிருந்த படகுகள் பல முழுகிப் போயின என்றும் அவருக்குத் தெரிந்திருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் பெரிய பழுவேட்டரையரின் படகில் இருந்த ஒருவனே வந்து சேர்ந்தான். அவர் வந்த படகும் முழுகிப் போயிற்று என்றும், தான் திணறித் திண்டாடிக் கரை ஏறி வந்து சேர்ந்ததாகவும் கூறினான்.

இளவரசர் அருள்மொழிவர்மர் நாகைப் பட்டினம் சூடாமணி விஹாரத்தில் மறைந்திருந்து வெளிப்பட்டார் என்றும், பெரும் ஜனத்திரளுடன் தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார் என்றும் இன்னொரு ஒற்றன் வந்து கூறினான். இரவு திருவாரூரில் அவர் தங்கியதாகவும், தான் இரவுக்கிரவே பிரயாணம் செய்து வெள்ளக் காடாயிருந்த பிரதேசங்களையெல்லாம் தாண்டி வந்ததாகவும் தெரிவித்தான்.

இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் சம்புவரையர் அனுப்பிய ஆள் ஒருவனே வந்து சேர்ந்தான். திருக்கோவலூர் மலையமான் பெரும் படை திரட்டிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது என்றும், ஆதித்த கரிகாலரின் வெறி அதிகமாகி வருகிறது என்றும், ஆகையால் பெரிய பழுவேட்டரையரை உடனே புறப்பட்டு வரும்படி சம்புவரையர் செய்தி அனுப்பியதாகவும் கூறினான்.

பெரிய பழுவேட்டரையரோ தஞ்சைக்கு இன்னும் வந்து சேரவே இல்லை. அவர் உடனே புறப்பட்டுச் செல்வது எப்படி? யமனும் அருகில் வருவதற்கு அஞ்சக்கூடிய அந்த வீரக் கிழவரை ஒருவேளை கொள்ளிடத்து வெள்ளம் கொள்ளை கொண்டிருக்குமோ? — என்று சின்னப் பழுவேட்டரையர் கலங்கினார்.

இதற்கு அடுத்தபடியாக எல்லாவற்றிலும் பெரிய இடி போன்ற செய்தியைத் தெற்கேயிருந்து ஒற்றர்கள் ஓடி வந்து தெரிவித்தார்கள். தென் திசையிலிருந்து தஞ்சைக்கு வந்த மூன்று பெரிய சாலைகளிலும் சேனா வீரர்கள் சாரிசாரியாக வந்து கொண்டிருப்பதாகவும், கொடும்பாளூர் பூதி விக்கிரம கேசரியும் வருவதாகவும் அவர்கள் கூறினார்கள்.

இதைக் கேட்டவுடனே தான் சின்னப் பழுவேட்டரையர் கோட்டைக் கதவுகளையெல்லாம் சாத்தி விடும்படி உத்தரவு போட்டார். உள்ளிருந்து யாரும் வெளியேறுவதையும் வெளியிலிருந்து உள்ளே வருவதையும் கண்டிப்பாகத் தடை செய்து விட்டார்.

வழக்கம் போல் அன்று கோட்டைக்குள் வந்த வேளக்காரப் படையினரைச் சக்கர



வர்த்தியின் அரண்மனையைச் சுற்றிக் காவலுக்கு அமைத்து விட்டு, தம்முடைய சொந்தப் படை வீரர்களைக் கோட்டைக் காவலுக்கு நியமித்தார்.

இந்த விவரங்களையெல்லாம் சக்கரவர்த்திக்கும் தெரிவித்து விட வேண்டும் என்று எண்ணினார். அதற்கு முன்னால், முதன் மந்திரி அநிருத்தரைக் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். அநிருத்தரிடம் அவருக்கு அவ்வளவாக நம்பிக்கை கிடையாதுதான். என்றாலும், அச் சமயம் அவர் கோட்டைக்கு வெளியில் இல்லாமல் உள்ளேயிருப்பது நல்லது. தம்மை அறியாமல் அவர் எதுவும் செய்ய முடியாதல்லவா? அவரிடம் யோசனை கேட்டுக் கொண்டு காரியங்கள் செய்வதாகப் பாவனை பண்ணுவதும் நல்லது. பின்னால் ஏதாவது தவறாகப் போனால் தம் மீது மட்டும் குற்றம் சுமராமல் இருக்கும்.

சக்கரவர்த்தியிடம் தாமே நேரில் சொல்வதைக் காட்டிலும் அநிருத்தரையும் அழைத்துக் கொண்டு போய்ச் சொல்வது சுலபமாயிருக்கும்.

இளவரசன் அருள்மொழிவர்மனும் அவனுக்குப் பெண் கொடுத்துச் சம்பந்தம் செய்து கொள்ள விரும்பிய பூதிவிக்கிரம கேசரியும் சேர்ந்து சதியாலோசனை செய்து தஞ்சாவூரைக் கைப்பற்றுவதற்காகவே இரு பக்கமிருந்தும் வருவதாகச் சின்னப் பழுவேட்டரையர் நம்பினார். இதைப் பற்றித் தாம் தனிப்படக் கூறினால் சக்கரவர்த்தி நம்புவது கூடக் கடினமாயிருக்கும். முதன் மந்திரி அநிருத்தரும் சேர்ந்து சொன்னால் நம்பியே தீர வேண்டும் அல்லவா?

முதன் மந்திரி அநிருத்தரும் ஓரளவு கலக்கம் அடைந்துதானிருந்தார். இளைய பிராட்டி குந்தவை அன்று காலை தஞ்சையை விட்டுப் போனதையே அவர் அவ்வளவாக விரும்பவில்லை. ஈழத்து ராணியும் பூங்குழலியும் காலையில் காணாமற் போனது அவருடைய உள்ளத்தின் அமைதியை ஓரளவு குலைத்திருந்தது. ''எங்கே போயிருப்பார்கள்? எப்படிப் போயிருப்பார்கள்? எதற்காக?'' என்றெல்லாம் எவ்வளவோ சிந்தித்தும் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. பூதிவிக்கிரமகேசரி சைன்யத்துடன் வருகிறார் என்னும் செய்தி அவருக்குப் பெருங் கலக்கத்தையே உண்டு பண்ணி விட்டது.

ஆனாலும் இதையெல்லாம் உடனே சக்கரவர்த்தியிடம் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று சின்னப் பழுவேட்டரையருக்கு அவர் யோசனை சொன்னார்.

''சக்கரவர்த்தியின் மனக் குழப்பம் இன்று அதிகமாகியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். மகாராணியின் அந்தரங்கச் சேடி வந்து தெரிவித்து விட்டுப் போனாள். இந்த நிலையில் பூதிவிக்கிரமகேசரியைப் பற்றிச் சொன்னால், சக்கரவர்த்தியின் மூளையிலுள்ள இரத்தநாளம் வெடித்து உயிருக்கே ஆபத்து உண்டானாலும் உண்டாகி விடும். ஏற்கெனவே, தஞ்சை நகரத்தில் சக்கரவர்த்தி காலமாகி விட்டார் என்ற வதந்தி பரவியிருக்கிறதாம். உண்மையாகவே அப்படி நேர்ந்து விட்டால் எத்தனை விபரீதம் ஆகும் என்று யோசித்துப் பாருங்கள். சக்கரவர்த்தியை நீங்களே கொன்று விட்டதாக வதந்தி உண்டாகி விடும். உங்கள் விரோதிகளுக்கு மிகவும் சௌகரியமாகப் போய் விடும். ஆகையால், பொறுத்துப் பார்த்து முடிவு செய்யலாம். பூதிவிக்கிரம கேசரியின் உத்தேசம் இன்னதென்று முதலில் தெரிந்து கொள்ளலாம். பெரிய பழுவேட்டரையரைப் பற்றியும் பொன்னியின் செல்வரைப் பற்றியும் அதற்குள் ஏதேனும் நிச்சயமான செய்தி கிடைக்கக்கூடும். அது வரையில் பொறுமையாக இருங்கள்'' என்று முதன் மந்திரி அநிருத்தர் கூறியது காலாந்தக கண்டருக்கும் உசிதமாகவே



தோன்றியது.

"அப்படியானால், சக்கரவர்த்தியிடம் சமயம் பார்த்துச் சொல்ல வேண்டிய காரியத்தைத் தங்களிடமே விட்டு விடுகிறேன். கோட்டைப் பாதுகாப்புக் காரியங்களை நான் கவனிக்கிறேன்" என்று சொல்லி விட்டுச் சின்னப் பழுவேட்டரையர் முதன் மந்திரியிடம் விடை பெற்றுக் கொண்டார்.

அது முதல் கோட்டை மதில் ஓரமாகச் சுற்றி வந்து கோட்டைப் பாதுகாப்புக்கு வேண்டிய முன் ஏற்பாடுகளைச் செய்து வந்தார். பல நாள் முற்றுகைக்கும் கோட்டையை ஆயத்தமாகச் செய்ய வேண்டும்; கொடும்பாளூர்ப் படைகள் கோட்டைக் கதவைத் தகர்த்தும் மதில்மேல் ஏறிக் குதித்தும் கைப்

பற்ற முயன்றால், அந்த முயற்சியைத் தோற்கடிக்கவும் சித்தமாயிருக்க வேண்டும். இதன் பொருட்டு அவருக்கு நம்பிக்கையான வீரர்களை அங்கங்கே நிறுத்தி வைக்க வேண்டும். கோட்டை மதில் எங்கேயாவது பலவீனப்பட்டிருந்தால், அதைச் செப்பனிட்டுப் பலப்படுத்த வேண்டும்.

இந்த ஏற்பாடுகளில் சின்னப் பழுவேட்டரையர் கவனம் செலுத்திக் கொண்டிருந்த போதே, வெளியில் இருந்து செய்திகள் அறிவதற்கு வழி என்ன என்பது பற்றியும் அவருடைய உள்ளம் சிந்தித்துக் கொண்டிருந்தது.

தஞ்சைக் கோட்டைக்கு இரகசியச் சுரங்க வழிகள் இரண்டுதான் உண்டு. ஒன்று பெரிய பழுவேட்டரையரின் மாளிகையிலிருந்து பொக்கிஷ நிலவறை வழியாக வெளியே சென்றது. இந்த வழியைச் சில நாள் யாரும் உபயோகிக்க முடியாது. ஏனென்றால், அந்த வழி வெளியே திறக்க வேண்டிய இடத்தில் வடவாற்றின் வெள்ளம் அலைமோதிக் கொண்டு சென்றது. அந்த வழியை அப்போது திறந்தால் வெள்ளம் நிலவறைக்குள்ளேயே புகுந்துவிடும்.

இன்னொரு சுரங்க வழி முதன் மந்திரி அநிருத்தரின் அரண்மனைக்குள்ளே இருந்து புறப்பட்டது. ஆனால் அதன் வழியாகச் சின்னப் பழுவேட்டரையர் அறியாமல் யாரும் வெளியே போகவோ, உள்ளே வரவோ முடியாது. அந்த வழி கோட்டைச் சுவரைக் கடந்து செல்லும் இடத்தில் சின்னப் பழுவேட்டரையரின் காவல் இருந்தது. இரவு இரண்டாம் ஜாமத்துக்கு மேலே அந்தச் சுரங்க வழியாக வெளியே அந்தரங்கமான ஆட்களை அனுப்ப வேணுமென்று சின்னப் பழுவேட்டரையர் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். கடம்பூருக்கும் பழையாறைக்கும் ஆட்களை அனுப்பிப் பெரிய பழுவேட்டரையரைப் பற்றியும் பொன்னியின் செல்வரைப் பற்றியும் நிச்சயமான தகவல் அறிந்து வரச் செய்ய வேண்டும்.

இம் மாதிரி காலாந்தக கண்டர் முடிவு செய்திருந்த சமயத்திலேதான் ஒரு வீரன் விரைந்து வந்து, வடக்கு வாசலில் ஒரு யானையின் மேல் இரு பெண்கள் வந்திருப்பதைப் பற்றியும், அவர்களுக்காகக் கதவைத் திறக்கும்படி யானைப் பாகன் கூவுவதைப் பற்றியும் தெரிவித்தான். வந்திருக்கும் பெண்களில் ஒருத்தி வானதி என்று தெரிந்ததும் சின்னப் பழுவேட்டரையர் பெரிதும் ஆச்சரியம் அடைந்தார். வானதியின் பெரியப்பன் சைன்யத்துடன் வந்து கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டிருக்கும் போது, அந்தப் பெண் கோட்டைக்குள் தன்னை விடும்படி கேட்பதற்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும்? முதலில் "கண்டிப்பாகக் கதவைத் திறக்க முடியாது" என்று சொல்லிவிட வேண்டுமென்றே எண்ணினார். வடக்குக் கோட்டை வாசலுக்குப் போய்ச் சேருவதற்குள் அவருடைய எண்ணம் மாறி விட்டது.

"கேவலம் ஒரு சிறு பெண்ணுக்குப் பயந்து கோட்டைக் கதவைத் திறக்க மறுப்பதா? இது என் வீர தீரத்துக்கு இழுக்கு ஆகாதா?" என்று எண்ணினார். அப்படி எதற்காகத்தான் அந்தப் பெண் கோட்டைக்குள் வர விரும்புகிறாள் என்பதை அறிந்து கொள்ளவும் அவருக்கு ஆவல் உண்டாயிற்று.

கோட்டை வாசலின் மேல் மாடியில் ஏறி நின்று பார்த்தார். யானை மீது யானைப் பாகனைத் தவிர இரு பெண்கள்தான் இருந்தார்கள் என்பது நன்றாகத் தெரிந்தது. அவர்களில் ஒருத்தி வானதிதான் என்பதையும் தெரிந்து கொண்டார். அச் சமயம் கொடும்பாளூர்ப் பெரிய வேளார் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அந்தச் சம்பாஷணையில் ஒரு பகுதியும் அவர் காதில் விழுந்தது. பெரிய வேளார் வானதியைக் கோட்டைக்குள் போக வேண்டாம் என்று சொல்வதையும் வானதி அதை மறுத்து உள்ளே போவேன் என்று பிடிவாதம் பிடிப்பதையும் அறிந்து கொண்டார். எனவே, வானதிக்குக் கதவைத் திறந்து விடலாம் என்ற எண்ணம் உறுதிப்பட்டது.

பெரிய வேளார் அப்பால் அகன்று சென்றதும், யானை மேலும் சில அடிகள் எடுத்து வைத்து அகழ் ஓரத்தில் வந்து நிற்பதைக் கண்டார்.

யானைப்பாகன் கொம்பை எடுத்து ஊதி விட்டு முன்போலவே, "கொடும்பாளூர் இளவரசிக்குக் கோட்டைக் கதவைத் திறந்து விடுங்கள்! பெரிய பழுவேட்டரையரிடமிருந்து சின்னப் பழுவேட்டரையருக்கும் இளையபிராட்டியிடமிருந்து சக்கரவர்த்திக்கும் செய்தி கொண்டு வரும் வானதி தேவிக்கு உடனே வழி விடுங்கள்!" என்று

○○ பலவீனமான காரணத்திற்காகச் சொற்பொழிவு செய்பவர்கள் மிகக் கடுமையாகத் தாக்கிப் பேசுகிறார்கள். நடக்க முடியாதவர்கள் குதிரை மீது சவாரி செய்வது போல் அது இருக்கிறது.

— சிசெரோ.

— புத்தனாம்பட்டி சி. மணி.



கூவினான்.

இதைக் கேட்டதும் சின்னப் பழுவேட்டரையரின் மனத்தில் கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகமும் தயக்கமும் நீங்கி விட்டன. பெரிய பழுவேட்டரையர் வானதியின் மூலமாகத் தமக்குச் செய்தி அனுப்புவது விசித்திரமானதுதான். ஆனாலும் இதில் ஏதாவது சூழ்ச்சியோ, தந்திரமோ இருக்கக் கூடும். இருந்தால், அதைத் தம்மால் கண்டு பிடிக்க முடியாதா? இந்தச் சிறு பெண் தம்மை ஏமாற்றி விட்டுத் தப்பிப் பிழைக்க முடியுமா? பார்த்துக் கொள்ளலாம்!

யானைப்பாகன் ஊதிய கொம்பின் முழக்கத்துக்குப் பதில் முழக்கம் கோட்டை வாசல் மேல் மாடியிலிருந்து கேட்டது. தீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. அந்த வெளிச்சத்தில் வேல்களின் முனைகள் ஒளி வீசித் திகழ்ந்தன. வளைத்து நாணேற்றப் பட்டிருந்த வில்களில் அம்புகள் பூட்டப் பட்டுப் புறப்படச் சித்தமாயிருந்தன. அவற்றுக்கு மத்தியில் ஒரு மனித உருவம் வெளிப் பட்டு வந்தது.

''கொடும்பாளூர் இளவரசியாருக்குக் கோட்டைக் கதவு திறந்து விடப்படும். யானையையும் யானை மீது உள்ளவர்களையும் தவிர வேறு யாரேனும் பின்தொடர முயன்றால் உடனே யமனுலகம் சேர்வார்கள்!'' என்று அந்த மனித உருவம் இடி முழக்கம் போன்ற குரலில் கர்ஜனை செய்தது.

இதைக் கேட்டதும் பூதி விக்கிரம கேசரியும் அவருடன் வந்த ஆட்களும் இன்னும் சிறிது அப்பால் சென்றார்கள்.

கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டன. அகழியின் பாலம் இறக்கப்பட்டது. யானை பாலத்தின் மேல் நடந்து சென்ற போது, பாலம் அதிர்ந்தது. வானதிக்குச் சிறிது அச்சம் உண்டாயிற்று. ஆனால் ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லை. யானை அகழியின் அக்கரையை அடைந்தது. திறந்திருந்த கதவுகளின் வழியாகக் கோட்டைக்குள் பிரவேசித்தது. மறு நிமிடமே பாலம் மறுபடியும் தூக்கப்பட்டது. கோட்டை வாசற் கதவுகளும் சாத்தப்பட்டன.

வானதி ஏறியிருந்த யானைக்கு அருகில் சின்னப் பழுவேட்டரையரின் யானை வந்து நின்றது.

''இளவரசி! வர வேண்டும்! வர வேண்டும்! தங்கள் பெரிய தந்தை தடுத்தும் கேளாமல் தாங்கள் என் விருந்தாளியாக வர இசைந்தது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்! தங்களுக்கு இங்கே எந்தவிதமான தீங்கேனும் நேருமோ என்று அஞ்ச வேண்டாம்!'' என்று சின்னப் பழுவேட்டரையர் கம்பீரமான குரலில் கூறினார்.

''ஐயா! எனக்கு அத்தகைய அச்சம் சிறிதும் இல்லை. நான் சொல்ல வந்த செய்திகளைச் சொன்ன பிறகு என்னைத் தாங்கள் பாதாளச் சிறையிலே அடைத்தாலும் கவலையில்லை!'' என்றாள் வானதி.

(தொடரும்)

கோடைக்கால மேகங்கள்

வே. சாந்தி

என் பெயர் வத்சலா.

வயது இருபத்தைந்து. மாநிறம்தான் என்றாலும் களையான முகம் என்று மற்றவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். பி. ஏ. முடித்திருக்கிறேன். வீட்டுக்கு ஆள் தேவை என்பதால் எங்கள் வீட்டிலேயே முழுநேர வேலைக்காரி போல் உழைக்கிறேன்.

இரண்டு கைகளையும் கோத்தபடி தலையைக் குனிந்து, தரையில் போடப்பட்டிருந்த பாயில் உட்கார்ந்திருந்தேன். எனக்குப் பக்கத்தில் மாப்பிள்ளையின் அம்மா, மற்றும் இரு சகோதரிகள், ஒரு சிறுமி ஆகியோர் உட்கார்ந்திருந்தார்கள். எதிரில் மாப்பிள்ளையின் அப்பாவும், மாப்பிள்ளையும் சோபாவில் உட்கார்ந்திருந்தார்கள்.

மாப்பிள்ளை பி. காம் முடித்துவிட்டு பேங்க்கில் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் சம்பளத்தில் வேலை செய்கிறார். வீட்டுக்கு ஒரே பிள்ளை. இருக்கின்ற எல்லாச் சொத்துக்களும் இவருக்குத்தான். எந்தவிதப் பிக்கல் பிடுங்கலும் இல்லை. இந்தக் காரணங்களுக்காக அப்பா, அவர்களைப் பெண் (என்னை) பார்க்க வரச் சொல்லியிருந்தார்.

நான் மெல்லப் பார்வையைச் சுழற்றி



னேன். மாப்பிள்ளை என்மேல் வைத்த கண்ணை வாங்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன்.

எனக்கு எதிரே இருந்த அடுக்களையைப் பார்த்தேன். அம்மா கவலையின் மொத்த உருவாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இது ஒவ்வொரு முறை பெண் பார்க்க வரும்போதும் அம்மாவிடம் காணப்படும் வாடிக்கையான முகம்தான்.

பெரியண்ணா வெளியில் சென்றிருந்தான். அவனுக்கு என்னைத் திருமணம் செய்து கொடுப்பதில் அவ்வளவு விருப்பமில்லை. பணத்தைத் தள்ளுங்கள். என்னை விட்டால் வீட்டிற்கு ஒரு நல்ல வேலைக்காரியை அவனால் தேட முடியாது. அண்ணி ராணி மாதிரி உட்கார்ந்த இடத்தில் உண்ண முடியாது. இப்போது அவள் முழுகாமல் இருக்கிறாள். குழந்தை பெற்றால் அவளோடு அவள் குழந்தையையும் சேர்த்துக் கவனித்துக் கொள்ள என்னைப் போல் பொறுப்புள்ள வேலைக்காரியை அவனால் பொறுக்கி எடுக்க முடியாது. அதனால் அவன் வந்தவர்களை, ''வாங்க,'' என்று சொல்லிவிட்டு, வெளியில் புறப்பட்டுச் சென்று விட்டான்.

அண்ணி அவள் அறையை விட்டு வெளியில் எட்டிக் கூடப் பார்க்கவில்லை, எங்கே எல்லாம் தன் தலையில் விடிந்து விடுமோ என்ற பயத்தில்.

சின்ன அண்ணன் மட்டுமே இந்த விஷயத்தில் ஆர்வத்தைக் காட்டினான். அதுவும் சுயநலம்தான். நான் வீட்டை விட்டு வெளியேறினால்தான் அவன் திருமணம் செய்து கொள்ள முடியும்.





"உங்க வீட்டுக்காரர் கோபமா இருக்காரா...? பார்த்தால் அப்படித் தெரியலையே?"

"ஒட்டடை அடிச்சு, ஃபேன் துடைச்சு, மேஜை டிராயர்களைச் சுத்தம் செய்து பழைய பேப்பர்களை எல்லாம் அடுக்கி வைக்கிறாரே...! அவர் கோபமா இருந்தாத்தான் இதை எல்லாம் செய்வார்!"

— பொடுசி.

இல்லையெனில் வயதுப் பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு ஆண் பிள்ளைக்குத் திருமணம் செய்வதா? இப்படித்தான் கேள்வி எழும்.

அப்பாவுக்கு ஆர்வம் என்று சொல்வதைவிட, கடமையை முடித்துவிட வேண்டும் என்ற எண்ணம்தான் மேலோங்கியிருந்தது. அதனால் எந்த நல்ல இடமாயிருந்தாலும் பரவாயில்லை என்பதால் கடந்த ஐந்து வருடங்களாக மாப்பிள்ளை வேட்டையாடிக் கொண்டிருக்கிறார். குத்தகை நிலத்தை நம்பிப் பயனில்லை. நல்ல முறையில் பிள்ளைகளைப் படிக்க வைத்தார். இரண்டு பிள்ளைகளுமே நல்ல சம்பளத்தில் வேலை செய்கிறார்கள். இன்று அவர்களை நம்பி என் திருமணத்தை நடத்த இருக்கிறார்.

பார்வையைத் தழைத்தேன்.

"உன் பேரென்னம்மா?" அந்த அம்மாள் கேட்டாள்.

"வத்சலா."

"என்ன படிச்சிருக்கே?" சிறுமியின் தாய் கேட்டாள்.

"பி. ஏ."

"'டெய்லரிங்' தெரியுமா?"

"தெரியும்."

எல்லாக் கேள்விகளுக்குமே பொறுமையாகப் பதில் சொன்னேன் என்பதைவிட, விரக்தியில் ஏற்பட்ட வெறுப்பில் தலையை ஆட்டினேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

புகுந்த வீடு என்ற அலுவலகம் செல்ல அதிகாரிகள் வீடு தேடி வந்து நடத்தும் நேர்முகத் தேர்வு இது! அந்தத் தேர்வு என் வீட்டில் நடந்து முடிந்தது.

"நாங்க போயி லெட்டர் போடறோம்..." எல்லோரும் எழுந்து சென்றார்கள்.

இதுவரை என்னைப் பார்த்தவர்கள் எல்லோரும் சொல்லிவிட்டுச் சென்ற வார்த்தைகளையே இவர்களும் சொல்ல, சொல்ல முடியாத வேதனை நெஞ்சைத் தைத்தது. கண்ணீர் கண்களுக்குத் திரை போட்டது. முந்தானையால் வாயைப் பொத்திக் கொண்டு, உள்ளே ஓடினேன்.

அம்மா அடுக்களையில் புலம்பிக் கொண்டிருந்தாள். "எந்தெந்தக் கழுதைகளோ என் வாசலை மி தி ச் சி ட் டு ப் போகுதே...? உரிமையுள்ள கழுதை வரட்டும்னு பொறுத்திருக்க மாட்டேங்கிறாங்களே! உறவை அறுத்துப் போட்டுட்டுப் போயிடுவாங்க போலிருக்கே...? அட ஆண்டவா, உனக்குக் கண்ணில்லையா?" — கண்களில். கண்ணீர் பொங்க முந்தானையால் துடைத்துக் கொண்டு சத்தமில்லாமல் அழுது கொண்டிருந்தாள்.

எனக்கு எரிச்சலாகத்தான் இருந்தது. ஆனாலும் அம்மாவின் கண்களில் கண்ணீரைப் பார்த்த பிறகு, ஏனோ எனக்கும் அழுகை வந்தது.

அம்மாவின் ஒரே தம்பியின் மூன்று பிள்ளைகளுள் முதல் பிள்ளை எம். ஏ. முடித்துவிட்டு வேலையில்லாமல் ஊரைச் சுற்றி வருகிறான்.

அப்பாவுக்கு அவனைக் கண்டால் பிடிக்காது என்பதைவிட, என்னைக் கொடுக்க மறுப்பதற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது. சொந்தத்தில் உறவு கொண்டால் பிறக்கின்ற பிள்ளைகள் ஊனமாகப் பிறக்கும் என்று எல்லோரும் சொல்வதை வைத்து, எனக்கு வேறு நல்ல இடமாக முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் இருந்தார்.

அம்மாவிற்கு அந்த அளவிற்கு வருங்காலத்தைப் பற்றிய கவலையில்லை.

எனக்குத் திருமணமே தேவையில்லை என்று என்னால் தைரியமாக இருக்க முடியாது. படித்தவள்தான், உலகம் புரிந்தவள்தான். ஆனால் நான் வளர்க்கப்பட்ட விதமே வேறு. பிற ஆண்களைக் கண்டால் அஞ்சுவேன். நான் படித்தது பெண்கள் கல்லூரி. கல்லூரிக்குச் சென்று வீட்டுக்கு வந்தால், மறுநாள் காலை கல்லூரிக்குச் செல்லும் வரை வெளி உலகம் எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளவும் விரும்ப மாட்டேன். அரட்டை அடிக்கும் சக மாணவியரோடும் சேர மாட்டேன். நான் உண்டு என் வேலையுண்டு என்றே இருப்பேன். இந்த நிலையில் எனக்கெப்படித் தைரியம் வரும்?

அப்பாவின் நிலை வேறு என்னை அச்சப்படுத்திக் கொண்டேயிருந்தது. திடீரென்று ஒரு நாள் நெஞ்சைப் பிடித்துக் கொண்டார். கண்களில் கரகரவென்று கண்ணீர் வழிய,

மூட்டு வலியா?
போக்கிடுங்கள் மூவ் மூலம்.



முழங்கால் மூட்டு வலியா?
பின்புற மூட்டு வலியா?

உங்கள் உடலின் மூட்டுகள், குறிப்பாக முழங்கால்களிலும் பின்புறமும் வயதானாலோ அல்லது கடின செயல்களினாலோ, இவை வலி ஏற்படும் இடங்களாக விளங்குகின்றன. மூட்டுகளில் லூப்ரிகேட்டிங் திரவம் சுரப்பது குறைவதனால், அதில் உராய்வு ஏற்பட்டு, வலிக்கவும் அசௌகரியத்திற்கும் காரணமாகிறது.

ஆழ ஊடுருவிச் செல்வது

மூவில் மிக அடர்த்தியான விரைவில் ஆவியாகிற இயற்கை எண்ணெய் அடங்கியுள்ளது. அது சருமத்தின் ஊடே மூட்டுவலி ஏற்படுத்தும் பாகம்வரை ஆழமாக ஊடுருவிச் செல்கிறது.

விரைந்து செயலாற்றுவது

மூவிலுள்ள இயற்கையான எண்ணெய், அதிக வீரியம் வாய்ந்த நிவாரண சாறுகளைக் கொண்டது — உடனடியாக இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்து, லூப்ரிகேட்டிங் திரவத்தை மீட்டுப் பெற்றுத் தந்து, விரைவாக நிவாரணம் அளிக்கிறது.

நீடித்து செயலாற்றுவது

மூவைத் தடவியதும், இதன் ஒப்பற்ற விதம் ஃபார்முலேட் செய்த 'பேஸ்' இயற்கையான எண்ணெயைத் தொடர்ந்து செலுத்தி, வலிக்கும் இடத்தை நீண்ட நேரம் இளஞ் சூடாகவும், மிருமிருப்பாகவும் விளங்கச் செய்கிறது. இது சருமத்தில் எரிச்சலை உண்டுபண்ணுவதில்லை. வலியற்ற இயக்கத்தை மீண்டும் பெறுகிறீர்கள். நீங்கள் மீண்டும் பழையபடியே ஓடியாடி வேலை செய்யலாம்.

உண்மையாகவே உடனடி நிவாரணம்

மூவ்
மூட்டு வலி நிவாரணி

PARAS PHARMACEUTICALS PVT. LTD.
Jivendra Chambers, Ashram Road, AHMEDABAD 380 014

அருள்வாக்கு



ராஜாங்கத்தில் ஒரு 'மினிஸ்ட்ரி' அமைக்கிற போது ஒருத்தர் பைனான்ஸ், ஒருத்தர் மராமத்து, ஒருத்தர் போலீஸ் என்றெல்லாம் பொறுப்புக் கொடுக்கிறார்கள். எவருக்கும் எந்த இலாகாவும் வஹிக்கிற யோக்கியதை இருக்கலாம். அல்லது ஜனநாயக ஸெட் அப்பிலே எதிலுமே இல்லாவிட்டாலும், எதுவானாலும் தெரிந்த மாதிரி எடுத்துக் கொண்டு ஒரு மாதிரி ஒப்பேற்றி விடலாம்! எப்படியானாலும் அவருக்கு என்று ஓர் இலாகா இருக்கும் போது இன்னொன்றில் ஒரு மந்திரி பிரவேசித்து உத்தரவு போட முடியாது. ஒருத்தரே இன்றைக்கு ஓர் இலாகா மந்திரியாயிருந்துவிட்டு நாளைக்கு வேறு இலாகாவுக்கு மாற்றப்படுகிறார். அல்லது இன்று வரை இரண்டு இலாகாக்களுக்கு மந்திரியாயிருந்துவிட்டு நாளைக்கு ஒன்று அவரிடமிருந்து எடுபட்டுப் போகிறது என்றால், நாளையிலிருந்து எந்த இலாகாவில் மாத்திரந்தான் தனக்குப் பொறுப்போ, அதில்தானே அவர் அதிகாரம் வஹிக்க முடியும்? 'நேற்றைக்கு நான் அந்த போர்ட்போலியோ பார்த்தேனே, அதிலே இன்றைக்குச் சட்டம் போடுவேன்' என்று அவர் பண்ண முடியாதோல்லியோ!

லோக நிர்வாஹம் நடத்துகிற தெய்வ ராஜாங்கத்திலும் இப்படியே தேவதைகள் அவாளவாளுக்குப் பொறுப்புத் தந்துள்ள பலன்களைக் கொடுத்து அநுக்ரஹிப்பதுதான் பொது வழக்கு.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

''ஐயோ, என் பிள்ளைகளை அனாதையா விட்டுட்டுப் போயிடுவேன் போலிருக்கே...'' என்று கதற, அம்மா அவசர அவசரமாக நெஞ்சில் தைலத்தைத் தேய்க்க, ஆசுவாசமடைந்து லேசாக நிமிர்ந்து உட்கார்ந்தார். தொண்டை அடைக்க என்னைப் பார்த்து, ''உனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்துட்டேன்னா நிம்மதியாச் செத்துப் போயிடுவேம்மா... அதுவரைக்கும் எமன் என்னை விட்டு வைச்சிருப்பானோ இல்லையோ...?'' என்று சொல்ல, என்னையும் அறியாமல் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.

அப்பா அம்மா இருக்கும்போதே வேலைக்காரி போல் மதிக்கும் பெரியண்ணா, அப்பா இறந்து விட்டால் அண்ணியின் கீதா உபதேசத்தால் எப்படி மாறுவார் என்று யாருக்குத் தெரியும்?

சின்ன அண்ணாவிற்கு நான் தடையாய் இருக்கிறேன். அப்பா இறந்து விட்டால், அவன் என்னைப் பற்றியா கவலைப்படப் போகிறான்! நிச்சயம் இல்லை. விரைவில் ஒரு திருமணத்தைப் புரிந்து கொண்டு, குடியும் குடித்தனமுமாகச் செட்டில் ஆகிவிடுவான். ஒருவேளை அப்போது நான் இருவீட்டுக்கும் வேலை செய்யலாம்!

அம்மாவின் சொல்லுக்கு அப்பா இருக்கும் போதே மதிப்பில்லை. இறந்து விட்டால் தானா மதிப்பிருக்கப் போகிறது! பாவம், அம்மா!

இவர்கள் மத்தியில் நான் இருப்பதை விட வீட்டை விட்டு வெளியே செல்வதற்கு நான் எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரே வழி திருமணம் ஒன்றுதான்.

மூன்றாம் நாள் வெள்ளிக்கிழமை. நானும் தலைக்குக் குளித்துவிட்டு, அண்ணியின் தலைக்குச் சாம்பிராணிப் புகை காட்டிக் கொண்டிருந்தேன். வாசலில் போஸ்ட்மேன், ''போஸ்ட்'' என்று குரல் கொடுத்துவிட்டுக் கவரை வீசி எறிந்து சென்றார்.

எழுந்து சென்று கவரை எடுத்தேன். மூலையில் மஞ்சள் தடவப்பட்டிருந்தது. எந்த உறவினர் வீட்டுப் பெண் பூப்பெய்தினாளோ என்று நினைத்துக் கொண்டே பிரித்தேன்.

இன்ப அதிர்ச்சி! வெளியே காட்டிக் கொள்ள முடியாமல் மனத்திற்குள்ளேயே பூக்கும் சந்தோஷத்தை இந்தப் பெயர் சொல்லித்தான் அழைக்க வேண்டும்!

அண்ணி எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த அப்பாவிடம் சென்று காட்டினேன். இதுவரையில் இப்படியோர் மலர்ச்சியை அவர் முகத்தில் நான் பார்த்ததில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அன்று இரவு வழக்கத்திற்கு மாறாக அப்பாவோடு பெரியண்ணனும், சின்ன அண்ணனும் பேசிக் கொண்டிருந்தார்கள். பெரி



உன் கஷ்டம் தீர்ந்துடும்!
என்ன முயற்சி பண்ணினே?
ஏன் ஒண்ணும் வரலையா?
வர்றது. ஒண்ணு அமைந்தா ஒண்ணு அமையலை. அவளுக்கும் முப்பது வயசு ஆயிடுச்சு!
அட, அப்படியா? எனக்கு அந்த ரகசியத்தைச் சொல்லேன்.
அதுவே இல்லடா. மங்கையர் மலரை இந்திய அளவிலும், வெளிநாட்டிலும் இருக்கிற தமிழ்ப் பெண்கள் படிக்கிறாங்க. அதனால சீக்கிரமே உன் கஷ்டம் தீர்ந்திடும். கவலைப் படாதே!

40 ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் 'சிறிய' அளவிலேயே இயங்கி வந்திருப்பது ...



... உங்கள் நம்பிக்கையை 'மிகப்பெரிய' அளவில் பெறுவதற்காகத்தான்!

40 ஆண்டுகளுக்கு முன்னர் நாங்கள் மிகவும் எளிமையாகத்தான் தொடங்கினோம். ஆனால் எங்களுக்கு ஒரு உறுதியான கொள்கை' இருந்தது. அது. கவனம்... உறுப்பினர்களைத் தேர்வு செய்வதில் காட்டிய எச்சரிக்கை. ஏனெனில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டுமே நாங்கள் முக்கியமாக நினைக்கவில்லை. அதற்கு நல்ல பலன் இருந்தது. பாடுபட்டுத் தேடிய தங்கள் பணம் எங்களிடம் பாதுகாப்பாக இருக்கும் என்று உறுப்பினர்களுக்கு பூரண நம்பிக்கை வந்தது. அந்த நம்பிக்கை இன்று உறுதியாய் வேரோடித் தழைத்திருக்கிறது. இன்று எங்களைப்பற்றி எங்கள் உறுப்பினர்கள் சொல்லும் ஒரே வார்த்தை... நம்பகம்!

நுட்பமான முறையில், எல்லாத் தகவல்களையும் ஆழ்ந்து விசாரித்த பின்னரே ஒரு புதிய உறுப்பினர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார். இது. உறுப்பினர்கள் தங்கள் பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்க உதவுகிறது.

மற்ற உறுப்பினர்களின் பணத்திற்கு முழுமையான பாதுகாப்போடுதான் ஒவ்வொரு முறையும் ஏலத்தொகை வெளியிடப்படுகிறது. இயற்கையாகவே இந்தத் தொழில் சறுக்கல்கள் நிறைந்தது என்று நாங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறோம். எனவே, நாங்கள் விவேகமற்ற முறையில் விரிவாக்கத்திற்குத் துடிப்பதில்லை.

சிட்பண்டுகளில் முன்னோடியான பாலுஸ்லெரி சிட்பண்ட்ஸ் ஒரு இயக்குநர் குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது. தொழில் துறையின் வளர்ச்சிக்கும் எங்கள் பங்கு சிறிதல்ல.

சமநிலையும் விவேகமும்... அதுதான் பாலுஸ்லெரி.

40 ஆண்டுகள் இடைவிடாத உழைப்பில் மலர்ந்த நம்பிக்கை

BALUSSERY CHIT FUNDS
OVER FOUR DECADES OF SERVICE

ஸ்ரீ பாலுஸ்லெரி பெனிஃபிட் சிட் பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை மற்றும் நிர்வாக அலுவலகம்:
''பாலுஸ்லெரி பில்டிங்ஸ்''
30 சிங்காராச்சாரி தெரு.
திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
கிளைகள்: பம்பாய், பங்களூர், கல்கத்தா, புதுடெல்லி.

யண்ணன் பட்டும் படாமல் பேசிக் கொண்டிருந்தார். சின்ன அண்ணனுக்குத் தடை விலகப் போகிற மகிழ்ச்சி. "செலவாகிறது பற்றிப் பிரச்னை இல்லைப்பா! வத்சுவோட கல்யாணத்தை நல்ல முறையிலே நடத்திடணும்" என்று பேசிக் கொண்டிருந்தான்.

ஆமாம். மூன்று நாட்களுக்கு முன்பு வந்து சென்ற பேங்க் மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்துதான் கடிதம் வந்திருந்தது. நல்ல நாள் பார்த்து எழுதியிருந்தார்கள். நிச்சயம்செய்து கொள்ளலாம் என்று அப்பாவின் அபிப்பிராயத்தையும் கேட்டிருந்தார்கள்.

எனக்கு உள்ளுக்குள்ளேயே மிகவும் மகிழ்ச்சியாய்இருந்தது. என் வேதனைக்கெல்லாம் விடிவு காலம் பிறந்து விட்டது போல் உணர்ந்தேன். இராத்திரிகளில் தூக்கம் போனது. சந்தோஷத்தில் ஏராளக் கனவுகள் கண்டேன்.

நல்ல நாளில் நிச்சயமும் நடந்தது. நடப்பது கனவா, நனவா என்று என்னை நானே கிள்ளிக் கொண்டேன். மேலே மேலே மிதந்தேன்.

அதற்குப் பிறகு அப்பாவுக்கும், சின்ன அண்ணாவுக்கும் ஓயாது வேலை இருந்தது. அம்மாவிற்கும் இப்போது வேலை அதிகமாக இருந்தது. அண்ணியும் குழந்தை பெறுவதற்காக அம்மா வீட்டிற்குச் சென்றிருந்தாள்.

திருமணம் நெருங்கிக் கொண்டிருந்தது. வீட்டில் யாரும் இல்லாத ஒரு நாள் திடுதிப்பென்று மாப்பிள்ளை வந்திருந்தார். எனக்கு கை, கால் ஓடவில்லை. உடம்பெல்லாம் ஒருவித நடுக்கம்.

"எங்கே வீட்டிலே யாரையும் காணோம்?" என்று கேட்டார்.

எல்லோரும் துணிக் கடைக்குப் போயிருப்பதாகச் சொன்னேன்.

"பரவாயில்லை, நான் வேறொரு நாள் வர்றேன்..." என்று சொல்லிவிட்டு, நான் வைத்திருந்த காப்பியைக் குடித்துவிட்டுச் சென்று விட்டார்.

அவருடைய கண்ணியம் எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. மற்ற ஆண்களைப் போல் பெண் தனியாக இருக்கிறாளே, என்ன வேண்டுமானாலும் பேசிச் சிரித்துக் கொள்ளலாம் என்றில்லாமல் வீட்டில் யாரும் இல்லை என்று தெரிந்தவுடன் உடனே புறப்பட்டுச் சென்ற அவருடைய செயல் எனக்கு அவர்மேல் பெருமதிப்பை உண்டாக்கியது. எனக்கு இவர் கணவராகப் போகிறாரே என்று நினைக்கும் போது, பெருமையோடு கொஞ்சம் கர்வமாகவும் இருந்தது!

ஒரு நாள் மதியம் எல்லோரும் சாப்பிட்டு விட்டு வராந்தாவில் அமர்ந்திருந்தோம். கண்ணை இழுத்துக் கொண்டே செல்ல தட்



"என்ன சார்... இந்த வாரம் உங்கள் பத்திரிகையிலே எல்லாம் உப்புச் சப்பு இல்லாத விஷயங்களாகவே போட்டு நிரப்பி இருக்கீங்களே...!"

"அட்டையில் கவனிக்கலையா நீங்க? இந்த வாரம் 'பத்தியச் சிறப்பிதழ்' ஆச்சே!"

— பெ. கலாசாமி.

தட் சத்தம் கேட்டு எழுந்தேன். வீட்டு வாசலில் ஒருவர் நின்றிருந்தார்.

"வெங்கடாஜலம் யாருங்க?"

அப்பா எழுந்து சென்று, "என்ன வேணும்?" என்று கேட்க, "தந்திவந்திருக்கு... இதுல ஒரு கையெழுத்துப் போடுங்க," என்று அப்பாவின் கையெழுத்தை வாங்கிக் கொண்டு, அவர் கையில் தந்தியைக் கொடுத்துச் சென்றார் தந்திச் சேவகர்.

தந்தியைப் பிரித்துப் படித்த அப்பா, நெஞ்சைப் பிடித்துக் கொண்டு, "ஆண்டவா!" என்று நாற்காலியில் சாய்ந்து விட்டார். அம்மா, "என்னங்க? என்னங்க?" என்று முகத்தில் தண்ணீர் தெளித்தாள். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தந்தி என்றதும் எனக்குள் நடுக்கம்தான். இருந்தாலும் என்ன, ஏது என்று தெரியாமல்...

அப்பாவின் கைகளில் இருந்த தந்தியை மெல்ல எடுத்துப் படித்தேன்; அதிர்ந்தேன். இந்த அதிர்ச்சியை எப்படிச் சொல்வது? இடி என்றா? ஆமாம், என்னைப் பொறுத்த வரையில் என் மனத்தில் விழுந்த மிகப் பெரிய அடியும் இடியும் இதுதான்!

அப்படி என்னதான் தந்தியில் இருந்ததென்று கேட்கிறீர்களா?

இதோ இந்த வாசகம்தான்:

"KUMAR EXPIRED"

தந்தி கொடுத்தவர் பெயர் பத்மநாபன். பத்மநாபன் எனது வருங்கால மாமனார். ஆம்; குமார் — எனது வருங்காலக் கணவர் — இறந்து போய்விட்டார்! என் வேதனைகளுக்கெல்லாம் இன்னும் விடிவு காலம் பிறக்கவில்லை.

விரக்திச் சிரிப்பு வந்தது. ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தேன்.

மழை வருமோ என்று எல்லோரையும் பயமுறுத்திக் கொண்டிருந்த மேகம் கடகட என்று கலைந்து போய் விட்டது.

இது கோடைக்கால மேகம். இப்படித்தானிருக்கும். என் வேதனைகளுக்கும் இப்படித்தான்... விடிவு வரும் போல இருக்கும்; ஆனால் விடியாது.

நன்மையும் தீமையும்!

விஞ்ஞான முன்னேற்றங்களால் எல்லாமே சுபிட்சம், நன்மை என்று சொல்கிறவர்கள் இந்தத் தொடரை விட்டு விலகலாம். இயற்கையின் மூர்க்கமான நியதிகளில் ஒன்று, ஒரு முன்னேற்றம், ஒரு நன்மை வந்தால், கூட ஒரு தீமை இருந்தே தீரும் என்பது. அணுசக்தி விஞ்ஞானம் இதற்குச் சம்பிரதாய எடுத்துக்காட்டு. அணுவின் சக்தியையும் படைத்தது. அணுகுண்டையும் படைத்தது. அணுக்கதிர்கள் கான்ஸரை உண்டாக்குகின்றன; கான்ஸரை அழிக்கவும் செய்கின்றன.

அணுமின் நிலையங்கள் மின்சாரத்தைக் கொடுக்கின்றன. சுற்றுப்புறத்தை நாசமாக்குகின்றன. இவ்வாறு ஆண்ட்டிபயாட்டிக், பிளாஸ்டிக், நகர நாகரிகம், டெலிவிஷன் எல்லாவற்றிலும் நன்மையும் தீமையும் சில சமயம் இரண்டறக் கலந்திருக்கும்.

கம்யூனிக்கேஷன் செய்தித் தொடர்பினால் என்ன தீமை ஏற்படும் என்று நீங்கள் யோசிக்கும் போது, சென்ற வார க்விஸ்ஸின் விடையைக் கொடுத்து விடுகிறேன்.

உங்களிடம் இரண்டு ஜாக்கியோ இரண்டு ராஜாவோ இருக்க முடியாது. ஏனெனில் அவ்வாறு இருந்தால், அனிதா ஆனந்த் இருவரில் ஒருவர், நான்கு சீட்டு ஜாக்கியோ நான்கு ராஜாவையோ பார்த்துத் தன்னிடம் இருக்கும் கார்டை யூகித்திருப்பார்கள். இருவரும் தகவல் போதாது என்று சொன்னதால் உங்களிடம் ஒரு ராஜா ஒரு ஜாக்கிதான் இருக்க வேண்டும்.

இன்றைய போக்கிலேயே செய்தித் தொடர்புச் சாதனங்கள் விஸ்தாரமடைந்தால் அடுத்த நூற்றாண்டில் என்ன ஆகும்? ஆரம்பத்தில் நம் எல்லாருக்கும் 'ஆரா'மாக டெலிபோன் கிடைக்கும். அதில் நாம் சிக்கனமாகப் பேசிக் கொள்ளலாம் என்று சொன்னோம். டெலக்ஸ், டெலஃபாக்ஸ் கம்ப்யூட்டர் செய்தித் தொடர்பு எல்லாமே கிடைக்கப் போகின்றன என்றும் சொன்னோம்.

இது ஒரு மிக சமீப சாத்தியக்கூறு. நடக்கும் என்று எதிர்நோக்கச் சாட்சியங்கள் நிறையவே இருக்கின்றன. ஒரு ஜில்லாவைப் பற்றிய திட்ட சமாசாரங்கள் அனைத்தும், அதில் உள்ள குழாய்க் கிணறுகள் எண்ணிக்கை, படித்தவர்கள் எண்ணிக்கை, மழை முதலிய எல்லாவற்றையும் டில்லியில் சேர்த்து வைத்துத் திட்டங்களைத் திறமையாக ஆற்றலுடன் செயல்படுத்தலாம் என்று சொன்னோம்.

ஒரு ஜில்லாவின் எல்லா விவரங்களையும் போல ஒரு தனி மனிதனின் எல்லா விவரங்களையும் சேகரிக்க முடியுமா? அதற்கு இந்தச் சாதனங்கள் உதவுமா?

முடியும். இதே டெக்னாலஜிதான், சென்ற வாரம் சொன்ன நிக்நெட் சாதனத்தைச் சற்றே விரிவுபடுத்தினால், அதன் ஞாபக அடுக்குகளையும் அதன் கம்ப்யூட்டர் வேகத்தையும் சற்று அதிகரித்தால், இந்தியத் துணைக்கண்டத்தின் ஒவ்வொரு குடிமகனைப் பற்றியும் உள்ள முக்கிய விவரங்கள் அனைத்தையும் தலைநகரில் சேகரித்து வைக்க இயலும். சேகரித்து, தேவைப்பட்ட போது அந்த விவரங்களை அதற்கு அதிகாரம் உள்ளவர்களுக்குக் கொடுக்கவும் இயலும்.

இதன் நன்மைகள் யாவை?

நீங்கள் புதுசாகக் கார் வாங்கி, வேகமாகச் சென்று கொண்டிருக்கும் போது, சற்றும் எதிர்பாராத விதத்தில் ஒரு லாரி வந்து அடித்து, குற்றுயிராகத் தப்பிக்கிறீர்கள். உங்களுடன் வந்த பெண் அதிகம் அடிபடாமல் தப்பிக்கிறாள். உங்கள் உயிர் போகும் நிலை. உடனே மருத்துவ உதவி யில்லாவிடில் உங்கள் உயிர் பிரிந்து விடும்.

உங்களைக் காப்பாற்ற முடியும். அந்தப் பெண் காரில் உள்ள டெலிபோனில் ஆம்புலன்ஸுக்கு ஃபோன் செய்தால் உடனே ஆம்புலன்ஸ் வரும். ஆஸ்பத்திரிக்குப் போகும்போதே உங்கள் பையில் உள்ள அடையாள அட்டையில் உள்ள உங்கள் பிரஜா எண்ணிக்கையைச் சொன்னால் அவர்கள் டில்லி டேட்டா பேஸைக் கேட்டு, உங்கள் வயது, ரத்த க்ரூப் அலர்ஜிகள் எல்லாம் தெரிந்து கொண்டு தயாராகக் காத்திருப்பார்கள். உங்களைக் காப்பாற்றி விடலாம். டெக்னாலஜி செய்தித் தொடர்பு என்னும் மகத்தான டெக்னாலஜி உங்களைக் காப்பாற்றி விடும்.

அதே டெக்னாலஜி உங்கள் ரத்த அழுத்தம் மட்டுமில்லாமல் நீங்கள் வாங்கின கடன், நீங்கள் பார்க்கும் வீடியோ படங்கள், நீங்கள் பாஸ் பண்ணிய அல்லது பெயில் ஆன பரீட்சைகள் இவைகளையும் இந்த விவரங்களையும் சேர்த்து வைத்துக் கொடுக்க முடியும். உங்களுக்கு வரும் கடிதங்கள் அனைத்தையும் படிக்க முடியும். ஏனெனில் இவையனைத்தும் எலக்ட்ரானிக் மீடியா வழியாகக்

சுஜாதா

கட்டுப்படுத்தும் நாட்கள் வந்து விட்டன.

இப்போதே! இதனால் நீங்கள் என்ன இழக்கிறீர்கள்? தனிமனித சுதந்திரம் என்பதை.

ஜேம்ஸ் மார்ட்டின் என்கிற கம்ப்யூட்டர் ஆலோசகர் எதிர்காலத்தில் நம் வாழ்க்கையை ஒரு கண்ணாடி ஜாடிக்குள் இருக்கும் தங்க மீனுடன் ஒப்பிடுகிறார். எல்லாருக்கும் எல்லாம் தெரிந்து விடும்!

இது நாளையல்ல, இன்றே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. கம்ப்யூட்டர்கள் உபயோகிக்கும் கம்பெனிகளின் வரவு செலவுக் கணக்குகள் எல்லாம், அவர்களின் வியாபாரத் தந்திரங்கள் எல்லாமே கம்ப்யூட்டர் தெரிந்தவனுக்கு அறியக் கிடைக்கின்றன. கம்பெனிகளுக்கிடையே போட்டி இருக்கும் போது, இந்தத் தகவல்களுக்கெல்லாம் மதிப்பு ஏற்பட்டுத் தகவல் திருட்டு என்பது இப்போதும் மறைமுகமாக நம் அம்பானிகளுக்கும் வாடியாக்களுக்கும் இடையே நடந்து வருகின்றன. அரசாங்கத்திடமும் அதிகப்படியாகத் தகவல் இருப்பது ஆபத்தானதுதான். அதைக் கெட்ட முறையில் பயன்படுத்தும் கவர்ச்சி இருக்கிறது.

ஜார்ஜ் ஆர்வெல் '1984' என்கிற நாவல் எழுதிய போது 1949ல் கம்ப்யூட்டர்களைப் பற்றி அவர் அறிந்திருக்கவில்லை. இருந்தும் அரசினால் முழுதும் கண்காணிக்கப்படும் ஒரு ராட்சச ராஜ்ய சித்தாந்தத்தை அவரால் கற்பனை செய்ய முடிந்தது. இன்றைக்கே ஐரோப்பிய நாடுகளில் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஸோஷியல் செக்யூரிட்டி என்கிற பெயரில் ஓர் எண்ணிக்கை இருக்கிறது. அமெரிக்காவில் ரேடியோ பேஜிங் என்று ஒரு சாதனம் பிரபலமானது. ரொம்ப பிஸியாக இருப்பவர்கள் — சர்ஜன்கள், டாக்டர்கள், அதிகாரிகள் இவர்களுக்கெல்லாம் ஒரு சின்ன 'பீப்பர்' இருக்கும். யாராவது தொடர்பு கொள்ள எங்கிருந்தாலும் அவர்களை பேஜ் பண்ணினால் இடுப்பில் செருகியிருக்கும் பீப்பர் சப்தம் போட, அவர்கள் உடனே அருகாமை டெலிபோனுக்குப்




"நாங்க ஓடிட்டுத் திரும்பி வந்தப்புறம் கூப்பிடறோம்னு சொல்லு!"

போய் ஒரு நம்பரைக் கூப்பிட்டால் மெஸேஜ் கிடைக்கும்.

இதே வசதியை ரஷ்யாவில் கொஞ்சம் விஸ்தாரப்படுத்திக் கட்சியில் முக்கியமான ஆட்களுக்கு ஆளுக்கொரு பேஜிங் ட்ரான்ஸ்மிட்டர் கொடுத்தார்கள். அந்த ட்ரான்ஸ்மிட்டரை அணைக்க முடியாது. அதனால் அந்த ஆள் எங்கே போனாலும் எலக்ட்ரானிக்ஸ் மூலமாக அவனைக் கண்காணிக்க முடியும். உதாரணத்துக்கு அமெரிக்க எம்பஸிக்கோ அல்லது சதிகாரர்கள் வீட்டுக்கோ போனால் உடனே தெரிந்து கொள்ளலாம்.

பனிப் பிரதேசங்களில் வெள்ளைக் கரடிகளின் சஞ்சாரத்தை அறியக் கண்டுபிடித்த சாதனம் இது. தனிமனிதனின் சுதந்திரம் முழுவதையும் இழக்க வழிவகுக்கிறது. இந்த மாதிரி ட்ரான்ஸ்மிட்டர்கள் பட்டாணி சைஸில் பண்ணி விடலாம். பத்து வருஷத்துக்குப் பாட்டரி போட்டு உடம்புக்குள் விதைத்து விடலாம். அதன்பின்... அருகாமை டெலிபோன் கேந்திரத்துக்கு அவன் இருக்கும் விவரம் போய், அது கம்பிகள் மூலமாகத் தலைநகரில் உள்ள ராட்சச கம்ப்யூட்டர்களுக்குப் போய், அதிகாரிகளின் விரல் முனையில் நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் இருப்பிடமும் நகர்

* வீட்டுக்குள் அனைத்து இணைப்புக்களும் ஒருமித்து ஒரே யொரு ஜோடிக் கம்பியில் அனுப்பப்படும்...



ஈ மெய்ல் என்பது...

சரியான விடை: ஈ மெய்ல் என்பது கம்ப்யூட்டர் மூலம் கடிதம் அனுப்புவது. முடிவு தேதிக்குள் இதனை எழுதிய 167 பேர்களில் கம்ப்யூட்டர் புத்தகம் பரிசு பெறக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூவர்:

1. ஏ. சந்திரசேகர், 28/ஏ, கதிராரன் பில்டிங், ஜீவன் நகர், முதல் தெரு, மதுரை — 11.

2. கே. லக்ஷ்மணன், 171, டி. என். ஹெச். பி. காலனி, ஸானடோரியம், சென்னை.

3. செல்வி வந்தனா வேங்கடேசன், 22, வேலு தெரு, மேற்கு மாம்பலம், சென்னை — 33.

வுகளும் தெரிய வரும்!

இந்த வகைச் சாதனங்கள் இன்றே ஆஸ்பத்திரிகளில் சிறிய அளவில் பயன்படுத்துகிறார்கள். இதய நோய்க்காரர்களுக்கு ஹோல்ட்டர் மானிட்டர் என்று ஒரு சாதனத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நாள் பூரா 'இஸிஜி' எடுக்க. அதே போல் கால்கை வலிப்புள்ளவர்களுக்கும் இந்த வகைச் சாதனங்களைப் பயன்படுத்தி அவர்கள் வியாதியின் தாக்கங்களைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்க முடியும்.

இந்த ஐடியாவைக் கொஞ்சம் விஸ்தரித்தால் நாட்டில் உள்ள அத்தனை கார்களும் தானாக அதனதன் நம்பர் ப்ளேட்டுகளைச் செய்தியாக அனுப்பக்கூடிய சாதனங்கள் தயாரிக்க முடியும். இதனால் பலன்கள் ஏராளம். கார் எந்த மாநிலத்துக்குப் போனாலும் அங்கங்கே தங்கும் நாட்களுக்கேற்பச் சுங்கம் வசூலிக்க முடியும். அதே போல் பார்க்கிங் சார்ஜ். அதிவேகத்தில் ஓட்டினால் அபராதம். எல்லாமே முடியும். அதே சமயம் கார் ஓட்டி 'சின்ன' வீட்டுக்குப் போகிறார் என்கிற அந்தரங்கச் செய்தியும் கிடைக்கும்!

இன்றே வங்கிகளில் வந்திருக்கும் கம்ப்யூட்டர் வசதிகளை நாடளவில் விஸ்தரித்தால் ரொம்ப ரொம்பச் சௌகரியம்தான். ரூபாய் நோட்டையே கண்ணால் பார்க்க வேண்டியதில்லை. உங்கள் ஆபீஸ் கம்ப்யூட்டர், பாங்கு கம்ப்யூட்டருக்கு இத்தனை ரூபாய்ப்பா இவனுக்கு இந்த மாசச் சம்பளம் என்று செய்தி சொல்லி விட்டால், அது தானாகக் கணக்கு வரவு வைத்துக் கொள்ள நீங்கள் டிப்பார்ட்மெண்ட் ஸ்டோரில் போய்க் கல்கி, குமுதம், பனியன், சமையல் எண்ணெய் என்று எது வேண்டுமானாலும் ஆர்டர் பண்ண, ஸ்டோர் கம்ப்யூட்டர், வங்கி கம்ப்யூட்டரைத் தொடர்பு கொண்டு, 'பாருப்பா இத்தனை ரூபாய்க்கு வாங்கியிருக்கான்; பில் போடலாமா, பணம் இருக்கிறதா?' என்று கேட்டு, 'இருக்கிறது' என்று வந்ததும் தானாகவே கூட்டிக் கழித்துக் கொள்ள முடியும்!

இதற்கும் சோம்பேறித்தனம் என்றால் வீட்டிலிருக்கும் கம்ப்யூட்டரிலிருந்து ஸ்டோர் கம்ப்யூட்டருக்குச் செய்தி சொல்லி சாமான் பட்டியல் கொடுத்து விட்டால், அதுவே லிஸ்ட் போட்டு வங்கிக் கம்ப்யூட்டருடன் தொடர்பு கொண்டு கணக்கில் கழித்து...


வாசல் கதவு மணியடித்தால் திறக்க வேண்டும். அவ்வளவுதான் உங்கள் வேலை.

அதைக் கூட வீட்டு டெலிபோனை வைத்துக் கொண்டு திறக்கலாம்!

(தொடரும்)

விடைகள்:

1. விபத்தில் அடிபட்டது ஒரு கழுதை.
2. "இல்லீங்க. நீங்க சொன்ன மாதிரியே, அன்னைக்கு 'ஜூ'வுக்கு இழுத்துக் கொண்டு போனேன். நேற்று பீச்சுக்கு. இன்னைக்குச் சினிமாத் தியேட்டருக்கு."
3. "சில்லறை எப்படி வேணும், ஆறு ரூபாயாகவா? ஒன்பது ரூபாயாகவா?"
4. "வி. ஐ. பி. யின் பெண் திடீரென இறந்து போய்விடவே, கல்யாணமே நடக்கவில்லை; எனவே கல்யாண நியூஸ் கிடைக்கவில்லை."
5. "இது ஒத்திகைதானே!"



6. "படிக்க முடியாதவர் ஏன் நூலகத்துக்கு வருகிறார்?"



CLARION/B/T/23/203 TAM



"ஏன் இலகா! நீ யோசனை செய்து விட்டுத்தான் பேசுகிறாயா? மனிதர்கள் என்றால் ஒரு வாக்கு சுத்தம், நாணயம் எல்லாம் வேண்டாமா?'' எனப் பதறிப் போய்க் கேட்டார் நடராஜன்.

''இதோ பாருங்கள். இங்கே யாரும் பஞ்சாயத்துப் பேச உங்களைக் கூப்பிட வில்லை. எல்லாத்தையும் விட நமக்கு முக்கியம் நம்ம பெண்ணோட எதிர்காலம். இப்போது என்ன நடந்து விட்டது என்று குதிக்கிறீர்கள்? கல்யாணப் பத்திரிகை அடித்து விட்டோமா? ஊரைத்தான் அழைத்து விட்டோமா? தாலி ஏறுகிற சமயத்தில் மாப்பிள்ளை, பெண் மாறியிருக் கிறார்கள்.''

''இலகா... அதெல்லாம் எப்பவோ நடக்கிற அபூர்வமான சமாசாரம். இவ்வளவு தூரம் அவர்களுடன் பழகி விட்டு, பேசி விட்டு எந்த முகத்தை வைத் துக் கொண்டு அவர்களிடம் போய் நிற் பது?'' என அழமாட்டாத குறையாகக் கேட்டார் நடராஜன்.

''நீங்கள் தருமபுத்திரராகவே இருங்கள். ஹரிச்சந்திரனுக்கு அடுத்த வாரிசாக

ஊட்டம்

வேண்டுமானாலும் இருங்கள். எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் குறுக்கே ஒன்றும் பேசாமல் வாயை மூடிக் கொண்டு இருந்தால், அதுவே பெரிய உதவி!'' என்றாள் திலகா தீவிரமாக.

நடராஜன் நிலைகொள்ளாமல் தவித்தார். என்ன செய்கிறோம் என்பதைக் கூட உணர முடியாமல் என்ன ஆயிற்று இவளுக்கு?

அவர் மகள் லதா பிறந்த அன்றே, அவளுக்குக் கண்ணன்தான் என்பது முடிவாகி விட்டது. கண்ணனின் தந்தை சாரதியும், நடராஜனும் வீணையும், நாதமும் போல் என்றால், திலகாவும் கண்ணனின் தாய் பூமாவும் கண்ணும், இமையும் போல அத்தனை நெருக்கம்.

எப்போது கண்ணனைப் பார்த்தாலும் திலகா, ''மாப்பிள்ளை'' எனத்தான் கூப்பிடுவாள். ''டேய் மாப்பிள்ளை... ஒழுங்காப் படி. இல்லாவிட்டால் என் பெண்ணைத் தர மாட்டேன்,'' என விளையாட்டாகப் பயமுறுத்துவாள்.

பூமா இன்னும் ஒரு படி மேலே. எந்த ஊரில் இருந்தாலும் — தீபாவளிக்கும், பொங்கலுக்கும் லதாவிற்கு என்று பிரத்தியேகமான பரிசுகள் அனுப்பத் தவற மாட்டாள். எல்லோரும் பெண்களுக்கு நகை, நட்டு சேர்த்து வைத்திருப்பார்கள். ஆனால் பூமா தன் வருங்கால மருமகளுக்கு என்று பார்த்துப் பார்த்து வாங்கி வைத்திருந்தாள்.

பெரியவர்கள் எப்படி உறவு முறை கொண்டாடினாலும் — சில இடங்களில் சம்பந்தப்பட்ட பெண் — பிள்ளை ஊடே ஈடுபாடு வளர்வதில்லை.

ஆனால் இங்கே கண்ணனும் லதாவும் ஒருவரையொருவர் விரும்புவது வெளிப்படையாகவே தெரிந்தது. பக்கம் பக்கமாகக் கடிதங்கள் பரிமாறிக் கொண்டார்கள். கண்ணன் பம்பாயிலிருந்து தன் பெற்றோர்களைப் பார்க்கக் கோயம்புத்தூர் போகும் போதும் சரி, வரும் போதும் சரி — நடராஜன் வீட்டில் ஒரு நாள் தங்காமல் போக மாட்டான்.

இப்போது லதாவிற்கும் படிப்பு முடிந்து விட்டது. கண்ணனுக்கும் நல்ல கம்பெனியில் ஸ்திரமான வேலை கிடைத்து விட்டது.

போன மாதம் பூமாவும், சாரதியும் வந்து, கல்யாணம் பேசி விட்டுப் போயிருந்தார்கள். ஜூன் மாதம் பதினோராம் தேதி முகூர்த்தம் என்று கூடத் தீர்மானித்தாகி விட்டது. மயிலாப்பூரில் ஒரு கல்யாணச் சத்திரத்திற்கு முன்பணமும் கொடுத்தாகி விட்டது.

சம்பிரதாயமாக ஒரு நிச்சயதார்த்தம் தேவையில்லை என இரு பக்கமும் அபிப்பிராயப்பட்டார்கள். எப்போதோ நிச்சயித்து விட்ட சம்பந்தம். முன்பின் தெரியாதவர்களா, பழகாதவர்களா? நிச்சயதார்த்தத்தை முகூர்த்தத்திற்கு முதல் நாள் வைத்துக் கொண்டால் போயிற்று. சொந்தக்காரர்களுக்கு ஒரு அலைச்சல் மிச்சம்.


திலகா தன் பெண் கல்யாணத்திற்கான ஏற்பாடுகளில் முழு மூச்சுடன் ஈடுபட்ட போது அந்தக் கடிதம் வந்தது.

யாரோ சாந்தா கோபாலனாம். திலகாவுடன் சின்ன வயதிலிருந்து படித்தவளாம். உடலும், உயிருமாக இருந்தவர்கள். திருமணமான பிறகு கூட கொஞ்ச நாட்கள் கடிதப் போக்குவரத்துத் தொடர்ந்தது. இப்போது பல வருஷங்களாகத் தொடர்பு விட்டுப் போயிருந்தது. யாரையோ கேட்டு — எப்படியோ சரியான விலாசம் பிடித்துக் கடிதம் போட்டிருந்தாள்.

''...நாங்கள் இப்போது கல்கத்தா வந்திருக்கிறோம். என் பிள்ளை அமெரிக்காவில் பெரிய இஞ்ஜினியராக இருக்கிறான். நாங்கள் அவனுடன்தான் தங்கி இருக்கிறோம். சொந்தமாக ஒரு வீடு கூட வாங்கி விட்டான். இப்போது அவனுக்கு வருஷத்திற்கு ஐம்பதினாயிரம் டாலர் வருகிறது. இப்போது நாங்கள் வந்ததே அவனுக்கு ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்பதற்காகத்தான். உனக்கு ஒரு பெண் இருக்கிறாள் என்று கேள்விப்பட்டேன். என் பிள்ளையின் போட்டோ இத்துடன் வைத்திருக்கிறேன். உன்னை எனக்குத் தெரியும். உன் கணவரை நான் பார்த்திருக்கிறேன். ஆகவே உன் பெண் எப்படி இருப்பாள் என என்னால் ஊகிக்க முடியும். என் பிள்ளை இவ்வளவு படித்தும், இத்தனை சம்பாதித்தும் — எங்கள் பேச்சை மீற மாட்டான். உங்களுக்கு இந்தச் சம்பந்தத்தில் ஈடுபாடு இருந்தால் உடனே எழுதுங்கள். நாங்கள் 'பிளேனில்' புறப்பட்டு வருகிறோம். கல்யாணத்தை 'ஸிம்பிளாக' வைத்துக் கொண்டால் போதுமானது. எனக்கு உன் சம்பந்தம் கிடைத்தால் அது பெரிய அதிர்ஷ்டம். நம் நட்பு பழுத்து உறவாக அமைவது இப்போது உன் கையில் இருக்கிறது...''

கடிதத்தைப் படித்து முடித்த திலகா கேட்ட ஒரே கேள்வி: ''ஐம்பதாயிரம் டாலர்

ஸரோஜி



"அந்தப் பள்ளியிலே உங்க பையனைச் சேர்க்க, ஏன் பயப்படறீங்க?"

"அந்தப் பள்ளிக்கூடம் நான் 'காண்ட்ராக்ட்' எடுத்துக் கட்டியதாச்சே!"

— இடையகோட்டை ஆசாத்.

என்றால் எவ்வளவு?"

"இட்டத்தட்ட எட்டு லட்சம் ரூபாய்!" என்றார் நடராஜன்.

அவ்வளவுதான். திலகா மனம் மாறி விட்டாள்.

பம்பாயில் மாதம் மூவாயிரமோ நாலாயிரமோ சம்பாதிக்கும் கண்ணன் எங்கே? இந்த மது எங்கே? என்னதான் முன்னேறினாலும் இந்தக் கண்ணன் ரிடையராகும் போது பத்தாயிரம் சம்பாதிப்பானோ என்னவோ? இப்போதே மதுவிற்கு வருஷத்திற்கு எட்டு லட்சமா...? அடேயப்பா. ஒரே பிள்ளை வேறு! அவர்களே வலிய விரும்பி வந்து பெண் கேட்கிறார்கள்.

திலகா போரசை பிடித்து மனம் மாறி விட்டாள் என்று சொல்ல முடியாது. ஒரு தாயின் மனம், எதிர்பார்ப்பு — தன் மகள் அமோகமாக வாழ வேண்டும் என்பது. 'அப்படி ஓர் எதிர்பாராத வாய்ப்பு வீட்டுக் கதவைத் தட்டும்போது திறக்காமல் இருப்பது முட்டாள்தனம் இல்லையா?' என்று தான் அவள் நினைத்தாள்.

இதைத்தான் அவள் நடராஜனிடம் வற்புறுத்தினாள்.

நடராஜன் தம் கடைசி அஸ்திரத்தைப் பிரயோகித்தார்.

"ஆமாம். லதாவைக் கேட்டாயோ? என்ன சொல்கிறாள்?"

"அவள் குழந்தை. அவளுக்கென்ன தெரியும்? நாம் சரியானபடி எடுத்துச் சொன்னால், தட்டவா போகிறாள்?"

"அப்படி இல்லை. கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவது அவள். ஒரு வார்த்தை அவளைக் கேட்டு விட்டுத்தான் எல்லாமே."

தானே லதாவைக் கூப்பிட்டு, திலகாவின் யோசனையைச் சொன்னார்.

"லதா வெடித்துச் சிறுவாள். ஒரு பூகம்பத்தையோ, புயலையோ உருவாக்குவாள்" — என எதிர்பார்த்தார் நடராஜன்.

"நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ, அப்படியே நடக்க நான் தயார்" என்றாள் அவள்.

"நான் சொன்னேனே... கேட்டீர்களா? அவள் குழந்தை. என்ன தெரியும்?" எனப் பூரித்துப் போனாள் திலகா.

"இன்னும் என்ன யோசனை? சாந்தா வீட்டுக்காரருக்கு உடனே பதில் எழுதுங்கள்."

"சரி... சரி. சாரதிக்கு என்ன எழுதுவது?"

"காரணமா இல்லை. சகுனம் சரியில்லை என்று எழுதுங்கள். ஒரு பிரபல ஜோசியர் இந்தச் சம்பந்தம் கண்ணனுக்கு நல்லதாக அமையாது என்று சொன்னார் என எழுதுங்கள். பூமா பயந்து போவாள்!"

"திலகா இது சரியில்லை. யாரையோ முதுகில் குத்துவது போல் படுகிறது எனக்கு."

"இதோ பாருங்கள். நாம் என்ன அவர்களுக்கு எழுதியா கொடுத்திருக்கிறோம். கேஸ் போடுவார்களா என்ன? நம் பெண் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். என்ன செய்வார்கள்? கல்யாணத்திற்கு வர மாட்டார்கள். பூமா என்னுடன் பேச மாட்டாள். அவ்வளவுதானே? எல்லாம் நாளாக நாளாகச் சரியாகி விடும்!"

"சரி... சரி.. நாளைக்குக் காலை விவரமாக எழுதலாம்" என எழுந்தார் நடராஜன்.

இரவு நடராஜன் தூங்கவில்லை.

நடராஜன் மறுநாளும் திலகாவுடன் வாதாடித் தோற்றுப் போனார். கல்கத்தாவிற்குப் பதில் எழுதுவதைத்தான் ஒரு நாள் ஒத்திப் போட முடிந்தது. திலகாவின் தீர்மானம் மாறவில்லை.

அதற்கும் மறுநாள் காலை.

திலகா முதலில் பேப்பரையும், பேனாவையும் அவரிடம் கொடுத்தாள். காப்பி கூடப் பின்னர்தான் வந்தது. திலகா அவர் பக்கத்திலேயே உட்கார்ந்து "உம், எழுதுங்கள்!" என்றாள்.

நடராஜன் பட்டும் படாமல் ஒரு பதில் எழுதினார்.

"உங்கள் மனைவி திலகாவிற்கு எழுதிய கடிதம் படித்தேன். மிக்க நன்றி. சம்பந்தம் பேசத்தான் நீங்கள் எங்களைப் பார்க்க வர வேண்டும் என்பதில்லை. இந்த வீட்டுக் கதவுகள் எப்போதும் உங்களை எதிர்நோக்கித் திறந்திருக்கும். மூவரும் வாருங்கள். எங்களுடன் சில நாட்கள் தங்கி எங்களைக் கௌரவப்படுத்துங்கள். மற்ற எல்லா விஷயங்களும் நேரிடையாகப் பேசிக் கொள்ளலாம்."

"இது என்ன? தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல் வழவழா கடிதம்? 'சம்மதம்' என்று ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டியதுதானே?" எனக் கேட்டாள் திலகா.

"சம்மதம் இல்லை என்றும் நான் எழுதவில்லையே" என எழுந்தார் நடராஜன்.

"என்ன புறப்பட்டு விட்டீர்கள்? சாரதிக்கு எழுதவில்லையா?"

"இல்லை. என் மனம் சரியில்லை. நான் அவனை நேரில் பார்த்துக் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்றார் நடராஜன்.

திலகா தன் முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்து. "இன்னும் வேதாளம்

முருங்கை மரத்தில்தான் இருக்கிறது'' என்றாள்!

ஒரு வாரம் — பத்து நாட்கள் ஆயிற்று. கல்கத்தாவிலிருந்து கடிதம் இல்லை. திலகா தவித்துப் போனாள்.

பதினைந்தாம் நாள் ஒரு கடிதம். கோபாலன் சுருக்கமாக எழுதியிருந்தார்.

''மது அவசரமாக அமெரிக்கா திரும்ப வேண்டியுள்ளது. நாங்களும் புறப்படுகிறோம். அடுத்த வருஷம் வரும் போது, கடவுள் சித்தம் இருந்தால், நாம் நிச்சயம் சந்திப்போம்.''

திலகா இடிந்து போனாள். அவள் ஏமாற்றம் நடராஜன் மேல் கோபமாக வெடித்தது.

''பதில் போட வேண்டுமென்றே ஒரு வாரம் இழுத்தடித்தீர்கள். அதனால்தான் நல்ல சம்பந்தம் தட்டிப் போயிற்று!'' எனக் குற்றம் சாட்டினாள்.

''ஆரம்பத்திலேயே 'வேண்டாம், வேண்டாம்!' எனத் துக்கிரித்தனமாகச் சொன்னீர்கள். என்ன ஆயிற்று பார்த்தீர்களா? கோபித்துக் கொண்டு விட்டார்கள்.''

''சரி. என் மேல்தான் தப்பு. இப்போ நான் என்ன ஆயிற்று? நம் லதாவிற்கு வயது ஒன்றும் அதிகமாகவில்லை. அடுத்த வருஷம் வரை காத்துக் கொண்டு இருந்தால் போயிற்று'' என்றார் நடராஜன் இடக்காக.

திலகா உடன் பதில் சொல்லவில்லை. அடுத்த வருஷத்தை யார் கண்டார்கள்? கல்கத்தாக்காரர்கள் காத்திருப்பார்கள் என்பது என்ன நிச்சயம்? எழுதியா கொடுத்திருக்கிறார்கள்?

தன் பிகுவை விட்டுக் கொடுக்காமல், ''இந்தப் பெண்ணிற்குக் கொடுப்பினை இல்லை. கண்ணனுடன்தான் குப்பை கொட்ட வேண்டும் என்று தலையில் எழுதியிருக்கும் போது, நான் என்ன செய்ய முடியும்?'' எனப் பெருமூச்சு விட்டாள்.

லதா — கண்ணன் கல்யாணம் நிச்சயித்தபடி நடந்து முடிந்த மறுநாள்.

லதாவும், கண்ணனும் பம்பாய் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

நடராஜனுக்குத் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது. என்னதான் தெரிந்த, பழகிய இடமானாலும், இத்தனை நாட்கள் வளர்த்த பெண்ணை விட்டுப் பிரிவது என்னமோ போல் இருந்தது.

தன் துக்கத்தை வெளிக்காட்டாமல், கல்யாணச் சத்திரத்தின் மாடியில் தனிமையில் போய் நின்றார்.

மேகங்கள் சூரியனை மறைத்திருந்ததால் வெயில் தெரியவில்லை.

''அப்பா!'' எனக் குரல் கேட்டது.

திரும்பினார். லதா.

''என்னம்மா?''

''உங்களிடம் நான் மன்னிப்புக் கேட்க வேண்டும்.''

''என்னம்மா, பெரிய பெரிய வார்த்தையெல்லாம்...''

''இல்லை அப்பா. அன்று நீங்கள் அந்தக் கல்கத்தா வரனைப் பற்றிக் கேட்ட போது நான் உங்கள் மனத்தை நோகடித்து விட்டேன்.''

''அதனால் என்னம்மா? எல்லாம்தான் நல்லபடியாக முடிந்து விட்டதே!''

''இருக்கலாம். இருந்தாலும், அன்றைக்கு என் நிலைமை அப்படி. என்னால் யார் பக்கமும் பேச முடியவில்லை. உங்கள் யார் மனத்தையும் புண்படுத்த விரும்பவில்லை. அதனால்தான் பட்டும் படாமல்...''

''பரவாயில்லை அம்மா. நீதானே சொன்னாய்.''

''நான் சும்மா சொல்லவில்லை அப்பா! கண்ணனுடன் டெலிபோனில் பேசி எல்லாவற்றையும் சொன்னேன். அவர் நேராகக் கல்கத்தா புறப்பட்டுப் போய் அந்த மதுவிடம் பேசினார். அதற்கப்புறம்தான் அவர்கள் அப்படிப் பதில் எழுதினார்கள்!''

நடராஜன் அயர்ந்து போனார். பார்க்கப் பரம சாது போல் இருக்கும் இந்த லதா, ஒரு வார்த்தை கூடப் பேசாமல், எத்தனை சாமர்த்தியமாகத் தன் காரியத்தைச் சாதித்து விட்டாள்!


''அப்பா, கண்ணன் இதை அவர் அப்பா அம்மாவிடம் கூடச் சொல்லவில்லை. ஏனென்றால் அவர்கள் அம்மாவைப் பற்றித் தப்பாக நினைக்கக் கூடாது பாருங்கள். நீங்களும் சொல்லாதீர்கள். அம்மா, தான் ஏமாந்து விட்டதாக வருத்தப்படுவாள்.''

''புரிகிறது அம்மா'' நிச்சயம் சொல்ல மாட்டேன். நான் தலைநிமிர்ந்து நிற்கச் செய்து விட்டாய் என் ராஜாத்தி!'' என்றார் நடராஜன்.

மேகம் விலகி வானத்தில் சூரியன் ஒளி வீசியது.

அடுத்த இதழில்...

கற்பனை டெல்லியில்;
கலை வடிவம் காஞ்சியில்!




மஹாலயம் (அல்லது மஹாளயம்)




பெரிய இருப்பிடம், கல்யாணாதி சுபங்களுக்கு இருப்பிடம் மஹான்களுக்கு இருப்பிடம் என பல பொருள்கள் உண்டு. அதாவது - மஹான்களான பித்ருக்கள் பூமியில் வந்து 16 நாட்கள் தங்கி, புத்ரன் முதலியவர்களுக்கு சுபத்தைச் செய்யும் காலம் என்று பொருள். ஸூர்யன் கன்யா ராசியில் புகுந்தபோது, ஆஷாடம் முதலான 5 ஆவது அபர பக்ஷத்தில் பித்ருக்கள் பூமிக்குச் செல்ல ஏவப்படுகின்றார்கள். அச்சமயம் நமது பெற்றோர், அவர்களது பெற்றோர்களுடன் கூடி நம்மை நாடி வருகின்றனர். அச்சமயம் மஹாளய அன்னச்ராத்தமாகச் செய்வது உத்தமம். இந்த 16 நாட்களில் செய்ய முடியாதவர் அன்ன ச்ராத்தமானால் அடுத்த பக்ஷத்திலும் செய்யலாம்.

தீபாவளி அமாவாஸ்யைவரை பித்ருக்கள் அன்ன ச்ராத்தத்தை எதிர்பார்க்கிறார்களாம். விதிப்படி ஹோமம் செய்து அன்னம் போட முடியாவிடில் அன்னத்திற்கு ப்ரதிநிதியாக வெள்ளி நாணயத்தை அளித்து (அதாவது ப்ராம்மணர்களை வரித்து, ஆஸனாதிகளையும் தக்ஷிணையும் அளித்து) தர்ப்பணம் செய்வதாம். அதே ஹிரண்ய ச்ராத்தம் எனப்படும். அங்ஙனம் பிரதி தினம் செய்ய முடியாதவர் பித்ரு, மாத்ரு திதி அல்லது மஹாபரணீ, வ்யதீபாதம், மத்யாஷ்டமீ முதலிய புண்யகாலத்தில் ஹிரண்யம் செய்வது பழக்கம். ச்ராத்த ப்ராம்மணர்களைப் போல் அல்லாமல், ஸாதாரண ஸமாராதனை போல் அன்று அன்னமிடுவது வழக்கம். அதுவும் தற்சமயம் பலவிடங்களில் நடப்பதில்லை. தக்ஷிணை அளித்து அனுப்புவதுடன் நிற்கின்றது. வீணான செலவுகளைக் குறைத்துக் கொண்டு மஹாளயத்தை அன்ன ச்ராத்தமாகச் செய்வதே உத்தமம். ஹிரண்யமாகவாவது செய்து அன்னமிட வேண்டும். 16 நாட்களிலும் தர்ப்பணத்தையேனும் விடாமல் செய்து ஒரு நாளாவது ஹிரண்ய ச்ராத்தம் செய்ய வேண்டும். அதனால் ஸகலவிதமான நன்மையும் பெறவேண்டும்.



மஹாளயம் செய்வதால் உண்டாகும் பலன்



1. ப்ரதமையில் ச்ராத்தம் செய்தால் தனலாபமுண்டாகும்.
2. த்விதீயை ச்ராத்தம் ஸந்ததியைத் தரும்.
3. த்ரீதீயா ச்ரார்த்தம் நல்ல வரன் அல்லது நல்ல மருமகளைத் தரும். அல்லது கோரிய வரத்தைத் தரும்.
4. சதுர்த்தி ச்ராத்தம் நமது பகைவர்களை அகற்றும்.
5. பஞ்சமீ ஸம்பத்தை உண்டாக்கும்.
6. ஷஷ்டி கர்த்தாவைப் பிறர் பூஜிக்கும்படிச் செய்யும்.
7. ஸப்தமீ பரலோகத்தில் ஒரு தேவ கோஷ்டிக்குத் தலைவனாகச் செய்யும்..
8. அஷ்டமீ உயர்ந்த புத்தியை அளிக்கும்.
9. நவமீ நல்ல மனைவியைத் தரும். துஷ்ட மனைவியை நல்லவளாகச் செய்யும். அடுத்த பிறவியிலும் நல்ல மனைவியைத் தரும்.
10. தசமீ நம் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்.
11. ஏகாதசீ ஸகல வேத வித்யைகளையும் தரும்.
12. த்வாதசீ ஸ்வர்ணத்தைத் தரும்.
13. த்ரயோதசீ ஸந்ததி, மேதை, பசு, புஷ்டி, ஸம்ருத்தி நீண்ட ஆயுள் முதலியவைகளைத் தரும்.
14. வஸ்த்ரம் அல்லது அக்னி (தற்காலத்தில் தோன்றிய ரமில், மோட்டார் போன்ற விபத்து) இவைகளால் இறந்தவர்களுக்குச் சதுர்த்தசியில்தான் மஹாளய ச்ராத்தம்செய்ய வேண்டும். அதே அவர்களுக்கு இன்பத்தைத் தரும்.
15. அமாவாஸ்யை ச்ராத்தம் ஸகல இஷ்டங்களையுமளிக்கும்.
16. அடுத்த ப்ரதமை தர்ப்பணம் முன் செய்தவைகளில் உள்ள குறைகளை நீக்கிப் பூர்ணமாகச் செய்யும்.

ஆபஸ்தம்ப ஸூத்ர தர்ப்பண விளக்கம்.

என் உயிர்த் தோழன்

அத்தியாயம் 21 சாராயமும் சதியும்!

கொய்யாத் தோப்புக் குப்பத்தில் டில்லி பாபுவின் ஆட்களுக்கும் தருமனின் ஆட்களுக்கும் மோதல் ஏற்பட்டு, அந்தத் தகராறில் தருமனையும் மற்றும் சிலரையும் போலீசார் பிடித்துக் கொண்டு சென்று, லாக்—அப்பில் வைத்த விஷயம் குயில் குப்பத்தை எட்டியது. அதைக் கேட்டதும் பொன்னம்மாளின் ஒப்பாரி ஊரையே கூட்டியது.

"ஐயோ இப்ப நான் இன்னாத்தச் செய்வேன்? என் புள்ளையப் புடிச்சிக்கினு பூட்டானுங்களே. தலை தலையா அடிச்சிக்கினேன்னே கேட்டானா அந்தக் கசமாலம். ஆனா ஊனா யாரண்டையாச்சும் தகராறுக்குப் பூடறானே. இவனை வெச்சி இன்னாத்தச் செய்ய.. ஐயோ நான் யாரு கிட்டச் சொல்லி அழ..."

"தே பொன்னம்மா, இப்ப அய்து மட்டும் இன்னா ஆயிடப் போவுது? நமக்கு இது எல்லாம் இன்னா புச்சா? சரி, தகராறு பண்ணிட்டான்... ஒரு கோவத்துலே, அவ்ள தானே... சர்தான் வுடு. இத்துக்கெல்லாம் அய்துக்னு..."

"அட அய்வாத யக்கா. பங்கியாண்ட வெசாரிச்சதுக்கு, இன்னிக்குச் சாயங்காலமே வெளில வந்துடுவாங்கன்னான்... அயாதே..."

ஆளாளுக்குப் பொன்னம்மாளைத் தேற்ற, ஒருத்தி பொன்னம்மாவை நெருங்கிக் காதில் எதையோ கிசுகிசுத்து விட்டு, அங்கிருந்து கும்பலைக் கூட்டிக் கொண்டு அகன்றாள்.

சூரியன் மேற்கே தன்னை முழுவதுமாய் மறைத்துக் கொண்ட நேரத்தில், இ—3 போலீஸ் ஸ்டேஷனில் தருமனும் அவனது சகாக்கள் மற்றும் டில்லியின் ஆட்களும் இன்ஸ்பெக்டர் நீட்டிய பாரத்தில் கையெழுத்தையும் கைநாட்டையும் அவரவர் கல்வித் தகுதிக்கேற்பப் பதித்து விட்டு, ஸ்டேஷனை விட்டுக் குப்பத்துக்கு வெளியேறிக் கொண்டிருந்தனர்.

தருமன் தன் சகாக்களுடன் 'குயில் குப்பத்தில்' நுழைந்த போது, அதுவரை போலீஸாரின் அதிகப்படியான மரியாதையில் அங்கங்கள் வீங்கியிருந்தவர்கள் வலியை மறக்கவும், தூக்கத்தை அணைக்கவும் தருமனிடம் சொல்லிக் கொண்டு, நேரே சரக்கடிக்கச் சென்றார்கள். தருமன் தனது குடிசையை நோக்கிப் போனான்.

குடிசைக்குச் செல்லும் வழியிலேயே தன், குடிசையிலிருந்து சற்று முன் பொன்னம்மாவின் காதில் கிசுகிசுத்தவள் அவனது குடிசையிலிருந்து வெளியேறுவதை கண்ட தருமன் கனலாக மாறினான். பொன்னம்மா துக்கம் தாளாது விக்கும் போதெல்லாம் அவளது விக்கலை நிறுத்த அவளுக்கு 'தண்ணி' சப்ளை செய்வது இவன்தான். கோபத்தில் நரம்புகள் முறுக்கேறிக் கொள்ள முஷ்டியை இறுக மடித்தவாறே இன்று இரண்டில் ஒன்று முடிவு செய்து விடுவது என்ற வேகத்தில், தருமன் தனது குடிசைக்குள் நுழைந்தான்.

தருமனைக் கண்டதும் பொன்னம்மா, "ஐயே தருமா... வந்துட்டியாடா," என்றவாறே அவசர அவசரமாகத் தன் முன் வைத்திருந்த சாராயம், ஊறுகாய் இத்யாதிகளை மறைக்க, தருமன், "மனசு பேஜாராக்கீதா யக்கா?" என்றான்.

"ஐயே... அத்த ஏண்டா கேக்குறே... நீ அந்தப் பாழாப்போன டில்லியை அடிச்சிட்டுப் போலீஸாண்ட மாட்டிக்கினியாமே? அவனுங்க உன்னை இன்னா பண்ணாங்களோன்ங்கிற பயத்துலேயே செத்துக்கினு இருந்தண்டா..."

"எனக்குத் தெரியும் நீ மனசு கஸ்டப்படுவேன்னு. அத்த மறக்கறதுக்குத்தானே இப்ப சாராயம் அடிக்கறே?"

தருமனின் கேள்வி பொன்னம்மாவின் காதில் சாட்டையாய் இறங்கியது.

"அதில்லடா தருமா. ஸ்டேஷன்ல உன்னைப் போட்டு இன்னா செஞ்சானுங்களோ ஏது செஞ்சானுங்களோன்னு நெனச்சிக்கினே படுத்தாத் தூக்கமே வர மாட்டேங்குது. அத்தாலதான் கொஞ்சமா... அஆம்.. மெய்யாலுமே மனசு பேஜாரா கீறதுனாலதாண்டா தருமா..."

"தே... சொம்மா எத்தையாச்சும் கத்தாத யக்கா. எனக்குத் தெரிஞ்சு நீ விவரம் தெரிஞ்ச நாள்ல இருந்தே குடிச்சிக்கினு கீறே.. அப்போ புடிச்சே உனக்கு மனசு பேஜாரா இருக்குதா? யாரு கைலே தோடு வுடுறே நீ... சர்தான் அத்த வுடு. எனக்கும் ஒரு கிளாசுலே சரக்கை ஊத்து. எனக்கும் மனசு பேஜாராகீது. அத்தாலே ரெண்டு பேரும் சேர்ந்தே அடிப்போம்."

தருமனின் இந்த வார்த்தைகள் பொன்னம்மாவின் இதயத்தில் தீ மூட்டியது. அவள்

பாரதிராஜா

ஆத்திரத்தில் செய்வதறியாது கையில் கிடைத்த விளக்குமாற்றை எடுத்து அவனை வெறி தீரும் வரை விளாசித் தள்ளி விட்டுச் சுவரில் சாய்ந்து அழத் தொடங்கினாள்.

''இன்னாடா கேட்டே என்னைப் பார்த்து? ரெண்டு பேரும் சேர்ந்து சரக்கடிக் கலாமாவா? இதுக்கு நீ என்னை வேற எதனாச்சும் சொல்லி நாலு வார்த்தை கேட்டிருந்தாலும் நான் சந்தோஷப்பட்டிருப் பனேடா...''

''பின்ன இன்னா யக்கா? நீ மறைஞ்சி மறைஞ்சி எனக்குப் பயந்து சரக்கடிக்கற துக்கு, நானும் இத்தக் குடிச்சிப் பழகிட் டேனா, பேசாம ரெண்டு பேரும் சேர்ந்தே சரக்கடிக்கலாமில்லே அத்தான் யக்கா.. சொன்னேன்.''

''டேய் தருமா இத்தப் பழகிட்டு நான் படுற கஷ்டம் பத்தாதா? நீ வேற இத்தப் பழகுணுமாடா? இத்தப் பழகிட்டின்னா அப்பாலே கொடல் வெந்தே செத்துரு வடா...''

''தெரிதில்லே... அப்பாலே நீ இன்னாத் துக்குக் குடிக்கறே?''

''டேய் தருமா, இத்த என்னாலே வுட முடியலயேடா... இத்தக் குடிக்கலேன்னா நான் செத்துடுவண்டா...''

தருமன் பொன்னம்மாவைத் தீர்க்கமா கப் பார்த்தான். பின் ஒரு முடிவுக்கு வந்த வனாய், ''யக்கா இத்தக் குடிச்சு நீ உசிரோட இருக்கறதயுங்காட்டி, இத்தக் குடிக்காம நீ சாவுறதே மேல் யக்கா.''

தருமனின் வார்த்தைகள் பொன்னம்மா வின் தலையில் இடியாய் இறங்கியது. தன் இதயம் வெடித்துச் சிதறுவதைப் போல உணர்ந்தாள். தலைக்கேறியிருந்த போதை யையும் சுத்தமாகக் கீழே இறக்கியது.

அவளால் தருமன் சொன்ன வார்த்தை களைச் சத்தியத்திற்கும் நம்ப முடியவில்லை. அவனைக் கண்டெடுத்து, வளர்த்து, ஆளாக்கி விட்ட இத்தனை வருடத்தில், என்னதான் தன் மீது கோபமாய் இருந்தா லும் தருமன் அவளை எந்த நேரத்திலும்





●● அதிகப் பளுவை எனக்குத் தராதே என்று ஆண்டவனை வேண்டுவதைவிட அதைச் சுமக்க நல்ல வலுவைத் தா என்று ஆண்டவனிடம் வேண்ட வேண்டும்!

— சுவாமி விவேகானந்தர்.

— புனிதவல்லி இளங்கோ.

ஒரு . பேச்சிற்குக் கூடச் 'சாவு' என்று சொல்லி அவள் கேட்டதில்லை. இப்போது அந்த வார்த்தை அவளைப் பாதி சாகடித்திருந்தது- தருமனை நேருக்கு நேர் பார்க்கும் சக்தியை அவள் கண்கள் இழந்திருந்தன. மெல்லத் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு, பொன்னம்மா, ''டேய் தருமா... மெய்யாலுமாடா சொல்றே?'' கெஞ்சலாக வினவினாள். தருமன் எரிச்சலை வார்த்தையில் வடித்தான்.

''அட, சத்தியமாச் சொல்றேன்.''

பொன்னம்மாவால் அதற்கு மேலும் துக்கத்தை அடைத்து வைக்க இயலவில்லை. கண் இமையை உடைத்துக் கொண்டு கண்ணீர் சரசரவென்று அருவியாய்க் கன்னங்களில் இறங்கியது.

அவள் அழுதவாறே தருமனை மெல்ல நெருங்கி, அவனது கையைப் பிடித்தாள். ''தருமா... உன் மேலே சத்தியமாச் சொல்றண்டா... இனி செத்தாலும் சாவனே ஒழிய, இந்த என் கையாலே தொட மாட்டேன்டா...'' என்று சொல்லி விட்டு 'ஓ'வென அழ ஆரம்பித்தாள்.

தருமன் பதறினான். அவசரப்பட்டுத் தான்தான் அக்காவைக் கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டு விட்டோமோ என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டு, அதற்குச் சரியான பதில் தெரியாமல் தன்னையுமறியாது, ''அட அழுவாத யக்கா. யக்கா அழுவாத...'' என்று சொல்லிக் கொண்டே அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு தானும் கதறி அழ ஆரம்பித்தான்.

'**செ**ரீய்யாத் தோப்பு'க் குப்பத்தில் டில்லி ஒரு வாரத்தில் ஓரளவுக்கு நடமாடும் அளவுக்குத் தேறியிருந்தான். உடலை மறைத்திருந்த முக்கால்வாசிக் கட்டுகள் அவிழ்க்கப்பட்டிருந்தன. அவன் ஏகத்துக்கு அவமானப்படுத்தப்பட்டதாய் உணர்ந்தான். தருமனிடம் வாங்கிய அடி, போலீஸாரிடம் தகுந்த மரியாதை கிடைக்காதது... ஆக எல்லாமுமாய்ச் சேர்ந்து, குப்பத்தில் ஒரு சிறு குழந்தை சிரித்தாலும் அது தன்னைக் கிண்டல் செய்து சிரிப்பது போலவே உணர்ந்தான்.

அவன் நெஞ்சில் என்ன விலை கொடுத்தாவது தருமனைப் பழிவாங்கியே தீர வேண்டும் என்ற வஞ்சம் வக்கிரமாய்க் குடியேறியிருந்தது. அதற்கான எல்லா முயற்சியிலும் இறங்கியிருந்தான். தனது சகாக்களிடம் தருமனின் தினசரி நடவடிக்கைகளைக் கவனிக்கச் சொல்லி, ஒரு தனி ஆளையே ஏற்பாடு செய்திருந்தான்.

இது எதைப் பற்றியும் சிறிதும் அறியாத தருமன் வழக்கம் போல் தனது கட்சி நடவடிக்கைகளிலும், தனது தினசரி அலுவலிலும் மூழ்கியிருந்தான்.

தருமனின் அன்றாட நடவடிக்கைகளைக் கவனிக்குமாறு பணிக்கப்பட்டிருந்தவன் கொண்டு வந்து சமர்ப்பித்த விவரங்கள், டில்லி பாபுவிற்கு அவ்வளவு ஏற்றதாகப் படவில்லை. எப்படியும் தருமன் ஏதோ ஒரு பொது இடத்தில் பத்துப் பேர் சூழ்ந்திருக்க அவர்களின் நடுவேதான் இருந்தான். தருமனுக்குத் தகாத பழக்கங்கள் ஏதும் அறவே இல்லாததால் அவன் தனித்து ஓரிடத்திற்குச் செல்வதற்கான அவசியமும் இல்லாதிருந்தது. தனது சகா கொண்டு வந்த விவரங்களை மீண்டும் மெல்ல அசை போட்ட டில்லி பாபுவுக்குச் சட்டென்று பொறியில் தட்டினாற் போல, அந்த விஷயம் உறைத்தது.

''டேய், காலைல எழுந்தவுடனே அவன் இன்னா பண்றான்னு சொன்னே?'' செய்தி கொண்டு வந்திருந்த 'கந்து'விடம் கேட்டான்.

''அண்ணே, காலைலே எயுந்ததும் அவனுக்கு நாயர் கடைப் பையன் டீயும் பன்னும் எடுத்துக்கினு வந்து வெச்சிடறான். அத்தக் குடிச்சிட்டுப் பல்ல வெளக்கிட்டு...''

''டேய் போதும் நிறுத்து. அவன் இன்னான்னா செய்வான்னு வெளக்கமா ஆரம்பிச்சிடாதே. அப்பாலே எல்லாரும் செய்யறதத்தான் அவனும் செய்வான். அது எங்களுக்குத் தெரியும். நீ ஒரு வாரமா அங்க இருந்தியே அந்த ஒரு வாரமும் நாயர் கடைப் பையன் அவனுக்கு டீயும் பன்னும் வாங்கிக்கினு வந்தானாடா?''

''ஆமா அண்ணே. அத்தக் குடிச்சிட்டுத்தான் தருமன் மறு வேலையே பார்க்கப் போறான். நான் அங்க இருந்த ஒரு வாரமும் அவனைக் கரைக்டா நோட்டீஸ் பண்ணேன்னே.''

இதைக் கேட்டதும் டில்லி துள்ளிக் குதித்தான். ''டேய் தருமா தீர்ந்தடா நீ...'' என்று கத்தியவன், தனது வலது கரமான மணிகண்டனை அழைத்து வரக் கந்துவை அனுப்பினான்.

டில்லி பாபுவின் ஆரம்ப காலத்திலிருந்தே அவனுடன் இருந்து வருபவன் மணிகண்டன். டில்லியின் நல்லது, கெட்டது அனைத்திலும் மணிகண்டனுக்கும் சரி பாதிப் பங்குண்டு. விசுவாசமானவன். வேலை என்று அவனை நம்பி டில்லி பாபு ஏதாவது ஒன்


இந்தியாவிலேயே
முதன்முறையாக
நடிகர்களோடு
கார்டூன்கள்
நடிக்கும்
படம்.
ஏவிஎம்மின்
ராஜா
சின்ன
ரோஜா
S.P. முத்துராமன்
குழந்தைகளோடு பார்க்கவேண்டிய
குதூகலச் சித்திரம்
AVM
PRODUCTIONS
M. சரவணன்
M. பாலசுப்ரமணியன்
M.S. குகன்

றைச் செய்யச் சொன்னால், அதை வெற்றிகரமாக முடிக்காது தூங்கப் போக மாட்டான். மொத்தத்தில் டில்லிக்குச் செஞ்சோற்றுக் கடன் தீர்த்து வரும் நவீன கர்ணன். பிஸினஸ் உறவில் டில்லியின் 'வொர்க்கிங் பார்ட்னர்.'

சுற்றிலும் பொன் நிறத்தில் வறுத்த முந்திரி, சீனமுறைப்படி சீராகத் தயாரிக்கப்பட்ட எலும்பே இல்லாத பச்சை மிளகாய் கலந்த கோழியின் பாகங்கள், சிப்ஸ்... நடுநாயகமாய்ச் சாராயப் பாட்டில் என்று அனைத்தையும் சீராக அடுக்கி வைத்து விட்டு அங்கேயே சுவர் ஓரமாக நின்றிருந்த தேவியை டில்லி தன் பார்வையிலேயே அங்கிருந்து அகலச் செய்தான்.

இரண்டு கண்ணாடிக் குவளைகளில் சாராயத்தைக் கீழே சிந்தும் அளவுக்கு நிரப்பினான் மணிகண்டன். பின் ஒரு கிளாஸை எடுத்து டில்லிக்கு நீட்ட, இருவரும் கையில் இருந்த கிளாஸை இடித்துச் செல்லமாகச் சிணுங்க வைத்து 'சியர்ஸ்' சொல்லி முடித்த வேகத்தில், கிளாசிலிருந்த முழுச் சாராயத்தையும் காலி செய்த பிறகே கீழே வைத்தார்கள்.

அந்த அறையில் நிலவிய இறுக்கத்தை மணிகண்டன்தான் முதலில் இளகச் செய்தான். ''அவ்ளோ அர்ஜண்டா இட்டுக்கினு வர ஆள் வுட்டு அனுப்பினியே... இன்னா மேட்டரு டில்லி?''

அவன் கேட்பதற்குக் காத்திருந்தவன் போலவே டில்லி, ''அர்ஜண்ட் மட்டும் இல்ல... நமக்கு மட்டுமே தெரிய வேண்டிய மேட்டரு. அனாவசியமா நாலு பேரு கைல பரவுனா அப்புறம் மேட்டரு கந்தலாயிரும்.''

''மேட்டரு இன்னான்னே சொல்லாம நீ பாட்டுக்குப் பேசிக்கினே போனின்னா எப்படி? எனக்குப் புரியலயே?''

''மணிகண்டா, எவ்வளவு செலவானாலும் சரி... இனியும் அந்த நாயை உசிரோட விட்டு வெச்சோம்னா அது நமக்கு நல்லது இல்லே. அத்தாலே அவனைப் பேசாத தீர்த்துடலாம்னு முடிவு பண்ணிட்டேன். நீ இன்னான்றே?''

''நீ தருமனைத்தானே சொல்றே? அவன் உன்னைக் குயில் குப்பத்தை வுட்டு அடிச்சி அவமானப்படுத்தி வெரட்டுனானே... அப்பவே சொன்னேன். ஆனா, அவன் நல்ல நேரம் நமக்கு வேற மேட்டருங்க வந்து போனதால, அப்படியே அவன் மேட்டரை ஆறப் போட்டுட்டோம். அவனும் அதையும் இதையும் செஞ்சி இன்னிக்கு இன்னாடான்னா கட்சிலெவல்ல எல்லாம் ஒரு ஆளாயிட்டான். அந்தக் குயில் குப்பமே அவனைக் கண்டா சாமியவே கண்ட மாதிரி தூக்கித் தோள்லே வெச்சுகினு ஆடுது. இப்ப அந்தப் பாடு மறுபடியும் நம்ம தொழில்ல கலாயறதோட நிறுத்தாம, உன்னை வேற அடிச்சி நாஸ்தி பண்ணிட்டான். அவனைக் கொல்றதுன்றது ஒன்றும் பெரிய பிஸ்கோத்து வேலை இல்லை. இன்னா அந்த பாடும் சாவனும். நாமனும் யாரும் மாட்டிக்காம கணக்கா கழட்டிக்கணும். இது யோசனை செய்ய வேண்டிய விசயம். காதும் காதும் வெச்சாப்பல கணக்காத் தீர்த்துக் கட்டற மாதிரி எதனாச்சும் ஐடியா கெடச்சா... அவனை ஒரே அடியாப் பொளந்துரலாம். நீ எதனாச்சும் யோசிச்சியா?''

''மணிகண்டா, கொஞ்ச நஞ்சம் இல்லே... நெறியவே யோசிச்சேன். அப்பாலதான் உனக்கு ஆள் வுட்டு அனுப்புனேன். இன்னான்னு கேட்டுக்க. தருமன் கிறாரே அவருக்குக் காலைல எயுந்தவுடனே நாயரு கடை டீயைக் குடிச்சாத்தான் அன்னிக்கிப் பொழுதே விடியுமாம். இது டெய்லி நடக்குற மேட்டரு. காலைல நாயரு கடைல வேலை செய்யற பையனே டீயை எடுத்துகினு வந்து தொரையை எழுப்பிக் குடுத்துட்டுத்தான் போவாராம். இன்னா கேட்டுக்கினியா...''

''டில்லி, இதுக்கு மேலயும் நீ எனக்கு வெவரத்தச் சொல்லி அப்பால அத்த புரிஞ்சுக்கற அளவுக்கு நான் 'டீப் லைட்' இல்ல. இதுக்கு மேலே ஆவ வேண்டியத நான் சொல்றேன் கேட்டுக்க. வர வாரத்துக்குள்ள ஒரு நல்ல நாளாப் பார்த்து நாயரு கடைல இருந்து தருமனுக்கு காலைல போற டீதான் தருமன் வாழ்க்கைலே கடைசியாக் குடிக்கற டீயா இருக்கும். அதுக்கு நான் ஜவாப்தாரி. நீ அனாவசியமா மனசைப் போட்டு அலட்டிக்காத...''

சொல்லிய வேகத்தில் எழுந்து வெளியில் சென்று மணிகண்டன் இருட்டில் கலந்தான்.

மணிகண்டன் சென்ற பின்தான் டில்லிக்கு அவனிடம் கட்சி ஆரம்பிக்கும் விஷயத்தைக் கலந்தாலோசிக்காமல் விட்டது நினைவுக்கு வந்தது. அதை இந்தக் காரியம் வெற்றிகரமாக முடிந்தேறும் நாளில் அவனிடம் மறக்காமல் வெளிப்படுத்த வேண்டும் என்ற நினைவிலேயே படுத்து உறங்கிப் போனான் 'டில்லி பாபு'.

(தொடரும்)


''நீங்க கொடுத்த மெமோவை டெஸ்பாட்ச் ராமசாமி வாங்கிக்கலையாமே?''

''முதல்ல அப்படித்தான் தகராறு பண்ணினார். அப்புறம் மெமோவைக் கவர்லே வெச்சு மேஜைக்கடியில் நீட்டினேன். சந்தோஷமா வாங்கிக்கிட்டார்!''

— ஞா. ஞானமுத்து.



“சுவையான சம்பவங்கள்” —



“சமயத்தில் புரிந்த உதவி.”

என் வாழ்விலும் என் குடும்பத்தார் வாழ்விலும் மறக்க முடியாத நிகழ்ச்சி ''ஸ்ரீராம்'' சீட்டு நிறுவனத்தால் நிகழ்ந்தது.

எங்கள் குடும்பம் நடுத்தர வர்க்கம். நான், என் வயதான பெற்றோர்கள், வயது வந்த இரு சகோதரிகளுடன் கூடிய குடும்பம். சொந்தமாய்ச் சில்லறையில் துணி வியாபாரம் செய்கிறேன். செலவுக்குப் போக அவ்வப்போது சிறுசேமிப்பும் செய்வதுண்டு.

எனது தங்கைக்குத் திருமணம் செய்து வைக்கும் பொறுப்பு என்னுடையது. ஆயிற்று. எனது சேமிப்புத் தொகை தவிர திருமணத்திற்குத் தேவையான மேற்கொண்டு பணத்திற்கு உறவினர்கள், நண்பர்களையும் நாடினேன். வாய்ப் பேச்சு தவிர பண உதவி செய்யவில்லை அவர்கள். இந்த நிலையில் ஸ்ரீராம் நிறுவனத்தினரின் ''விஜயதசமி'' முகாமை முன்னிட்டு விளம்பரத்தைக் கண்டேன். அதில் கண்ட சில செய்திகள் என் மனத்துக்கு மகிழ்ச்சியை அளித்தன.

ஸ்ரீராம் நிறுவனத்தை அடைந்தேன். அதன் அடையாறு கிளை மேலாளருடன் பேசினேன். என்னுடைய பணம் கட்டும் தகுதிக்கு ஏற்றபடி சீட்டில் சேர்ந்தால் எனக்குத் தேவையான பணம் எடுக்கும் வசதி கிடைக்கும் எனக் கூறினார். (பல மாதங்கள் ஆயின) எனது தங்கைக்கும் ஏற்ற வரன் கிடைத்து கல்யாணத் தேதியும் நிச்சயமாயிற்று. கையில் உள்ள பணத்தைத் தவிர மேற்கொண்டு நகைகள் வாங்க ஸ்ரீராம் சீட்டில் ஏலத்தில் பணம் தள்ளி எடுத்தேன். அதைப் பெற 3 பெறுமானமுடைய ஜாமீன்தார்களை ஏற்பாடு செய்யும் பொழுதும் சங்கடம் ஏற்பட்டது. உறவினர்கள், நண்பர்கள் பின்வாங்கினர். அப்பொழுதும் ஸ்ரீராம் நிர்வாகத்தினர் எனது சங்கடத்தில் தக்க முறையில் ஜாமீன்தாரர்களுடன் பேசி ஏற்பாடு செய்து உதவி புரிந்தனர்.

ஆனால் இடையே சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை குறுக்கிட்டது. திங்கட்கிழமை திருமண நாள். கையில் உள்ள ஸ்ரீராம் சிட்ஸ் அளித்த காசோலையை பணமாக மாற்ற வழியில்லை. நகைக் கடைக்கு பணம் அளித்தால்தான் நகை கிடைக்கும். என்ன செய்வது மீண்டும் பிரச்னை. ஸ்ரீராம் நிறுவனத்தினர் என் நிலை கண்டு வருந்தி உடனடியாக நகைக் கடையுடன் தொடர்பு கொண்டு எங்கள் காசோலையைப் பெற்று நகைகள் தருமாறு கேட்டுக் கொண்டனர். அவர்களும் அதற்கிணங்க ஞாயிற்றுக் கிழமையன்று காசோலை பெற்று நகைகளை அளித்தனர்,

தக்க சமயத்தில் ஸ்ரீராம் சிட்ஸ் புரிந்த உதவியினால் என் சகோதரியின் திருமணம் சிறப்பாக நடந்தது. தற்பொழுது அவளுக்குக் குழந்தையும் பிறக்கப் போகிறது. ''எனக்கு குழந்தை பிறந்தவுடன் சேமிப்புக்கு ''ஸ்ரீராமில் சேர வேண்டும்'' என்று நன்றியுணர்வுடன் கூறுகிறாள் என் சகோதரி. நானும் தவறாமல் என் சந்தா தொகையைக் கட்டிக் கொண்டு வருகிறேன்.

இப்படிக்கு,
என்றும் நன்றியுடைய,
ந. உமாபதி,
சாலிக்கிராமம்,
சென்னை — 600 092.



* குடும்பச் சொத்து...

* மொறு மொறு



* அப்துல், திருச்சி.

? ஆந்திர அரசைத் தெலுங்கு தேசம் தனது குடும்பச் சொத்தாக ஆக்கிவிட்டதாக ராஜீவ் குற்றம் சாட்டியுள்ளாரே?

! பாரத தேசத்தையே நேருவின் குடும்பச் சொத்தாக நினைப்பவர்கள், இப்படிப் பேசுவது வேடிக்கைதான்!

* எம். குணசேகரன், வேலாயுதம்பாளையம்.

? 'ஜெயலலிதா எங்களைச் சேர்த்துக் கொள்ளாமல் இருந்திருந்தால் நாங்கள் அகதிகள் போல ஆகியிருப்போம்' என்கிறாரே, காளிமுத்து?

! அவருக்கு வீர ரசம் அலுத்து விட்டது; சோக ரசத்தில் ஆழ்ந்திருக்கிறார். அதுவும் வீரப்பன் சேர்ந்த பிறகு சோகக் கடலில் தான் தத்தளிக்கிறார்!

* மஞ்சுதேவன், கல்கத்தா.

? சுனில் கவாஸ்கர் எழுத்தை பிஷன்சிங் பேதி எழுத்துடன் ஒப்பிடுக.

! முன்னது மொறு மொறு; பின்னது 'நமுக்'!

* இரவி, சாத்தனூர்.

? 'இரு போக சாகுபடிக்கும் தொண்டர்கள் தயாராக இருக்க வேண்டும்' என்கிறாரே ஜெயலலிதா?

! சாகுபடிக்குத் தொண்டர்கள்; அறுவடைக்கு 'ஜெ'! சாவியாகப் போகாமலிருந்தால் சரி. ஏனெனில், ராஜீவுக்கு இப்போது இருக்கும் அபக்கியாதியைப் பார்த்தால் தம்முடன் சேர்த்து 'ஜெ'யையும் அவர் கவிழ்த்து விட்டாலும் வியப்பதற்கில்லை!

* கே. ரமேஷ், சென்னை.

? காஷ்மீர் சட்டசபையில் பத்திரிகைத் தணிக்கை மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது குறித்து...?

! நல்ல வேளையாக அது சட்டமாவது இப்போதைக்கு, நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அது அப்படியே மடிந்துவிட அனுமதிப்பது நல்லது. பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடுவதால், உண்மையை மறைத்து விட முடியாது என்பதுடன், வதந்திகள் விசுவரூபமெடுக்கும் அபாயமும் உண்டு.

* கே. ராஜகோபாலன், சென்னை.

? மகாபாரதம் எடுக்கப்பட்டுள்ள விதம் ஆத்திகர்களுக்கு ஆறுதல் என்பதைவிட, நாத்திகர்களுக்கு அவல் என்கிறேன். உங்கள் கருத்து?

! ஆக, இரண்டு தரப்பினரையும் பார்க்க வைத்திருக்கும் சோப்ராவுக்கு வெற்றிதான். எந்தப் புராணக் கதையிலும் இன்றைய பகுத்தறிவுக்கும் நாகரிக முன்னேற்றத்துக்கும் பொருந்தாத சில விஷயங்கள் இருக்கவே செய்யும். அவற்றை ஒதுக்கி விட்டுச் சிறப்பு அம்சங்களை மட்டும் பார்த்து ரசித்துப் பயனடைய வேண்டும்.

* பொ. கி. மூர்த்தி, மதுரை.

? சமீப காலமாகப் பிரபல இசைவாணர்கள் 'துளசிவனம் கீர்த்தனைகள்' என்று பாடி வருகிறார்களே, யார் அவர்?

! துளசிவனம் கேரள அரசில் பணிபுரியும் ஓர் உயர் அதிகாரி. கர்நாடக இசைக்குக் கிடைத்த வளமான சாகித்ய கர்த்தா.

இருபோகச் சாகுபடிக்கு 'ஜெ' தயாராகச் சொல்கிறாரே?

* ஆர். பிரகாசம், நல்லாலம்.

? வாழ்க்கையில் நிம்மதி, மதிப்பு ஏற்படுவது பணத்தால்தானா?

! பணத்தால் இவற்றை இழந்து தவித்தவர்களும் உண்டு, மிஸ்டர் பிரகாசம்!

* ஏ. எஸ். மாரியப்பா, புதுக்கோட்டை.

? சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 25 லிருந்து 32 ஆக உயர்த்துவதால் நன்மை ஏற்படுமா?

! தேங்கிக் கிடக்கும் வழக்குகளைப் பார்க்கும்போது 32 என்ன, 320 ஆக்கினாலும் போதாது!

* வி. ஏ. ராஜு, சென்னை.

? 'அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணி, இயற்கையான, முறுக்கப்பட்ட மீசை போன்றது' என்று காளிமுத்து கூறுகிறாரே?

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

என் முரளி,
த/பெ. பி. எஸ். நாகராஜன்,
மொரப்பூர் அஞ்சல்,
— 635 305.

! இயற்கையான மீசைக்கு ஏது முறுக்கு? முறுக்கப்பட்ட மீசை என்னும் போதே செயற்கை வந்துவிடுகிறதே! காங்கிரஸ் — அ. தி. மு. க. கூட்டணியும் அப்படிச் செயற்கையானதுதான். அது ரௌடி மீசையாக மாறி விடாமல் கவனித்துக் கொண்டால் சரி.

* தாமல் கண்ணன், பெங்களூர்.

? Ape and Super Ape நள்ளிரவுக் காட்சி பார்த்தீர்களா?

! ஊகும். அன்று காலை அதுபற்றிப் பத்திரிகையில் படித்ததோடு சரி. ஒன்பதரையானால் கொட்டாவி; பத்தடித்தால் 'கொர் கொர்' — நான்!

* கே. ரமேஷ், சென்னை — 28.

? 'ஆட்சியைக் கலைத்தால் மீண்டும் நாங்களே ஆட்சிக்கு வருவோம்' என்ற கருணாநிதியின் ஆவேசப் பேச்சு எதைக் காட்டுகிறது?

! சரித்திரம் திரும்பும் என்ற அவரது எதிர்பார்ப்பையும் மக்களுடைய அனுதாபத்தைப் பெறுவோம் என்ற அவரது நம்பிக்கையையும்.

* என். முரளி, மொரப்பூர்., *

? பாராளுமன்ற சபாநாயகரின் மாட்டுத் தீவன இயந்திர ஊழல் என்ன ஆயிற்று...?

! ஆட்சியில் உள்ளவர்கள் பற்றிய புதிய புதிய ஊழல்கள் அம்பலமாகிக் கொண்டே வருவதால் பழைய ஊழல்கள் மறந்து போகின்றன. ஆனால் மறைந்து விடாது. அந்த ஊழல் அப்படியேதான் இருக்கிறது. ஆயினும் ஒரு நல்ல காரியம் சபாநாயகர் செய்திருப்பதையும் குறிப்பிட வேண்டும். அது, ஸி. ஏ. ஜி. பற்றித் தாறுமாறாக ஏசிய இ. காங்கிரஸ் உறுப்பினர்களின் பேச்சுக்களின் பல பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதுதான். நன்றி: முன்னுதாரணங்களை எடுத்துக் காட்டி இதைச் சாத்தியமாக்கிய செழியனுக்கு.

* எல். மாறன், மேல்பட்டி.

? 'ஒரு வியட்நாம் சிறுமியின் நெஞ்சில் நிறைந்த நினைவுகள்' — தினமணி செய்தியைப் பார்த்தீரா?

! அந்தப் புகைப்படம் சிரஞ்சீவித்துவம் பெற்று விட்டது உண்மை. ஆனால் ஈழச் சிறுமிகளைக் கேட்டுப் பாருங்கள். அதை விடச் சோகமான கதைகள் ஆயிரம் சொல்வார்கள்!

* எல். ராம்பிரபு, கும்பகோணம்.

? சி. பி. ஐ. தலைவர் மோகன் காத்ரேயை அரசு டிஸ்மிஸ் செய்யுமா?

! எங்கே, அதுதான் அவரிடம் பூரண நம்பிக்கை தனக்கு இருப்பதாக மத்திய அரசு அறிவித்து விட்டதே! மேலும் வாடியா கொலை வழக்கில் ஸி. பி. ஐ. சம்பந்தப்பட்டாலும் தாம் அதில் தலையிடப் போவதில்லை என்று காத்ரே நீதிமன்றத்துக்கு உறுதி மொழி வேறு கொடுத்து விட்டார். பிறகென்ன, 'ஜாம் ஜாம்' என்று பதவி வகிக்க வேண்டியதுதான். மகன் செய்கிற காரியங்களில் தமக்குச் சம்பந்தமே இல்லாததுபோல் காட்டிக் கொண்டு அவரைப் புகுந்து விளையாட அனுமதித்துவிட வேண்டியதுதான்!

நீங்கள் கேட்டவை — தராசு

* ஊழல் என்னவாயிற்று?



* முன்னுதாரணம் கூறி...



* ஆவேசப் பேச்சு!



* இரு போகம்...



5

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — VII

ராஜ்மோகன் காந்தி


ஹிந்தி



* லால் பகதூர்: திருப்தி தராத வாக்குறுதி.



* பக்தவத்சலம்: நியாயப்படுத்த முடியாத கடுமை.



* ஜே. பி.. ராஜாஜியின் அன்பும் ஆதரவும்.



* முன்ஷி: ராஜாஜியின் நிலைக்குக் கட்சிக்குள் எதிர்ப்பு.

லால் பகதூர் பதவி ஏற்ற சிறிது காலத்தில், ஸி. ஆரைப் போலவே இந்தியா — பாகிஸ்தான் நல்லுறவில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த ஜெயப்பிரகாஷ் நாராயண், ஒரு நல்லெண்ணத் தூது கோஷ்டிக்குத் தலைமை தாங்கிப் பாகிஸ்தான் சென்றார். அவர் திரும்பி வரும்போது பாக் அதிபர் அயூப்கானின் ஆதரவு பெற்ற ஒரு காஷ்மீர் திட்டத்துடன் வந்தார். பிரச்னைக்கு இத்திட்டத்தில் காணப்பட்ட தீர்வு தமக்குத் தனிப்பட்ட முறையில் பிடித்திருப்பதாகப் பிரதமர் லால் பகதூர் தெரிவித்தார். ஆனால் அதனைத் தம்மால் நடைமுறைப்படுத்த முடியாது என்றும் சொன்னார். "இந்திய அரசியல்வாதிகள் அனைவருமே அதனை எதிர்ப்பார்கள்" என்றார்.

ஜே. பி. யின் முயற்சியைப் பெரிதும் மதித்த ஸி. ஆர்., சிவராவ் மூலமாக அவருக்குத் தமது அன்பையும் மரியாதையையும் தெரிவித்து, 'நம்பிக்கையுடன் இருப்போம்' என்றார். ஜே. பி. நெகிழ்ந்து போனார்.

தத்தமது மனச்சாட்சிக்கு உண்மையாக இருந்த காரணத்தாலேயே ஜே. பி. யும் ராஜாஜியும் பல சந்தர்ப்பங்களில் பல இந்தியர்களைப் பகைத்துக் கொண்டார்கள். இப்போது சுதந்திராக் கட்சியிலேயே காஷ்மீர் — பாகிஸ்தான் பிரச்னை தொடர்பாக ராஜாஜியின் கருத்துக்கு எதிர்ப்புத் தோன்றியது! அடிப்படைக் கொள்கையான இருபது அம்சங்கள் தவிர, மற்ற விஷயங்களில் சுதந்திராக் கட்சி அங்கத்தினர்களுக்குக் கருத்துச் சுதந்திரம் அளித்து, அதனை இருபத்தோராவது கொள்கையாகவும் வகுத்திருந்தது. இந்த இருபத்தோராவது கொள்கையைப் பயன்படுத்திப் பலர், காஷ்மீர் விஷயத்தில் ராஜாஜியின் நிலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். "அப்துல்லாவை விடுதலை செய்தது தவறு" என்று முன்ஷி சொன்னார். மசானியின் கருத்து ராஜாஜியின் எண்ணத்துக்கு ஒத்துப் போயிற்று. ஆனால் வி. பி. மேனன், பி. கே. தேவ், தாஹ்யாபாய் பட்டேல் போன்றவர்கள், ஸி. ஆரின் கருத்தை ஏற்காமல் வருத்தம் தெரிவித்தனர். பட்டேல், "நமது கட்சி இதனால் தனது பிராபல்யத்தை இழந்து வருகிறது" என்று எழுதினார். அவருக்கு ஸி. ஆரின் பதில்:

"அப்துல்லா பற்றி முன்ஷியின் கருத்து முற்றிலும் தவறானது. ஜெயப்பிரகாஷ் சரியான பாதையில் செல்கிறார். ஒன்றுபட்டு இருங்கள்; தைரியமாக இருங்கள்... பல சந்தர்ப்பங்களில் நான் நமது கட்சிக்கு ஒரு பாரமாக ஆகி விடுகிறேன். நீங்கள் எல்லோரும் என்னைத் தூக்கி எறிந்து விட்டு மற்றவர்களுடன் ஒரே கப்பலில் பயணப்பட விரும்பினால் எனக்கு ஆட்சேபணை இல்லை. அதனை வரவேற்கவே செய்வேன்." (23.4.64)

மசானிக்கு எழுதிய கடிதம்:

"மற்றவர்கள் எப்படியோ, நீங்களும் நானுமாவது இப்போது போல் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று எண்ணுகிறேன். காஷ்மீர் பிரச்னையில் நாட்டுக்கு நன்மை எது என்று யோசித்து, அந்தக் கருத்தை நாம் மக்களுக்கு அறிவுரையாக வழங்க வேண்டுமேயல்லாது, பொது மக்களின் எண்ணம் எது என்று பார்த்து, அதன் பின்னால் நின்று, அதற்கேற்ப நமது கருத்தை மாற்றிக் கொள்ளக் கூடாது."

காஷ்மீர் பிரச்னையில் ஸி. ஆரின் கருத்துக்கள் அவரது கட்சியினருக்கு ஒரு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியது போலவே, ஹிந்தி

விஷயத்திலும் அவரது நிலை ஒரு சங்கடத்தை உருவாக்கியது. 1965 தொடக்கத்தில் ஸி. ஆர்., ''விசனிக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சி நோக்கித் தென்னகம் சென்று கொண்டிருக்கிறது'' என்று அறிவித்தார். தேச விரோதமல்லாது வேறு என்ன!

''சீனப்படையெடுப்புக்குப் பிறகு தி.மு.க. தனது பிரிவினை வாதத்தைக் கைவிட்டு விட்டது'' என்பதை ஸி. ஆர். எடுத்துக் காட்டினார். ''ஆனால் இப்போது ஹிந்தியைத் திணித்தால், மறுபடியும் அந்த ஆசையைத் தூண்டிவிட்டதாகும்!''

ஏகாதிபத்திய எதிர்ப்பு

ஜனவரி 26 — இல் நாட்டின் ஆட்சி மொழியாக ஆங்கிலத்தின் இடத்தை ஹிந்தி கைப்பற்றும். அரசியல் சட்டம் இவ்வாறுதான் கூறியது. ஸி. ஆரும் மற்றவர்களும் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததன் விளைவாக நேரு, ''தென்னக மக்களும் கிழக்குப் பகுதி மக்களும் விரும்பும் வரை ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும்'' என்று உறுதி மொழி அளித்திருந்தார். ஆனால் இப்போது அவர் காலமாகிவிட்டார். சட்டம் வேறு ஒன்றைக் கூறுகிறது. சட்டம்தானே யதார்த்தமாக இருக்க முடியும்!

நேருவின் உறுதி மொழி கைவிடப் படுமா? ''கைவிடப் படாது'' என்று சொன்னார் பிரதமர் சாஸ்திரி. ''தென்னகம் விரும்பும் வரை மத்திய அரசுடன் அதன் தொடர்புகள் ஆங்கிலத்திலேயே இருக்கும். எனினும் அந்நிய மொழி கைவிடப்படுகிற ஒரு கால கட்டத்தையும் நான் எதிர்நோக்குகிறேன்'' என்று அவர் கூறினார். வேறு பல செல்வாக்கு மிக்க காங்கிரஸ்காரர்கள், ஹிந்தியை நாடளாவிய ஆட்சி மொழியாக்குவதில் தீவிரம் காட்டினார்கள். உதாரணமாக மொரார்ஜி தேசாய், ''ஆங்கிலம் நீக்கப்படவும் அதனிடத்தில் ஹிந்தி அமரவும் ஒரு தேதி நிர்ணயிக்கப்பட வேண்டும்'' என்றார். லால் பகதூரின் வார்த்தைகள் ஸி. ஆருக்குத் திருப்தி தரவில்லை. மற்ற காங்கிரஸ்காரர்களின் பேச்சோ, அவருக்குக் கவலை அளிக்கவே செய்தது. எனவே, ''அரசியல் சாசனத்தில் 'ஹிந்தி ஆட்சி மொழியாகும்' என்ற ஷரத்தைத் தாற்காலிகமாக நீக்கிவிட வேண்டும்; அதற்கு அரசியல் சாசனத் திருத்தம் கொண்டு வரவேண்டும்'' என்றார். இதனையே தி. மு. க. வும் கோரியது. ஆனால் தி. மு. க. வின் கோரிக்கை சற்றுக் கடுமையான வார்த்தைகளில் அமைந்திருந்தது.

காஷ்மீர் பிரச்னையில் போலவே இப்போதும் ஸி. ஆர். 'தேசபக்தி அற்றவர்' என்பதாகக் குற்றம் சாட்டப்பட்டார். ஹிந்தியை விட ஆங்கிலமே மேல் என்று எண்ணுவது தேசவிரோதம்தானே! அதுவும், இந்தப் பிரச்னையில் பிரிவினைவாதிகளான தி. மு. க. வினருடன் கைகோத்து நிற்பது

சுயராஜ்யாவில் பின் வருமாறு எழுதினார் ஸி. ஆர்:

''ஆங்கிலத்தை எக்காலத்துக்கும் இந்தியாவின் ஆட்சிமொழியாக வைத்துக் கொள்வது என்பது, தமக்கு ஆழ்ந்த அவமானத்தை அளிக்கும் விஷயமாகும் என்று லால்பகதூர் கூறியிருக்கிறார். தெற்கே வசிக்கும் எங்களுக்கு, ஹிந்தியை இந்தியாவின் ஏதேச்சாதிகார மொழியாக ஏற்றுக் கொள்வது என்பது அதைவிட ஆழ்ந்த அவமானத்தை அளிக்கின்ற விஷயமாகும்.'' (2.1.65)

''நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன்: தேச ஒற்றுமைக்கு ஆங்கிலம் தேவை. ஆங்கிலம், நாட்டின் ஆட்சி மொழியாக நீடிக்க எனது இறுதி மூச்சு வரை நான் வாதாடுவேன். எனது நாட்டினிடம் நான் கொண்டிருக்கும் அன்பு காரணமாகவே நான் இவ்வாறு கூறுகிறேன்.'' (27.2.65)

ஜனவரி 26 தேதியிலும், அதையொட்டியும் உணர்ச்சிவசப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் — பெரும்பாலும் மாணவர்கள் — தென்னகத்தின் பல நகரங்களில் தெருக்களை அடைத்து நின்றார்கள். சிலர் தீக்குளித்தார்கள். ''குடியரசு தினத்தன்று கறுப்புக் கொடி காட்டுவது தெய்வ குற்றம்'' என்றார் காமராஜரை அடுத்து தமிழகத்தின் முதல்வராகப் பதவி ஏற்றிருந்த பக்தவத்சலம். நியாயப்படுத்த முடியாத கடுமையுடன் போலீஸ் தாக்கியது. பலர் கொல்லப்பட்டார்கள். பல்லாயிரக்கணக்கானவர்கள் சிறை புகுந்தார்கள்.

(தொடரும்)



புது மாப்பிள்ளை

'இந்தத் துப்புக்கெட்டவனுக்கா என் பெண்ணைக் கட்டி வைப்பேன்?' என்று வெறுப்புக் காட்டினார் ஜெய்சங்கர். 'ஜேம்ஸ் பாண்டியன் 007' ஆகி, புது மாப்பிள்ளை என்று அதே ஜெய்சங்கரைப் பாண்டியராஜன் சொல்ல வைத்தது எப்படி? அதுதான் கதை.

மாமா டி.ஐ.ஜி.யின் பெயரை உபயோகித்துக் கொஞ்ச நஞ்சமான அட்டகாசமா செய்கிறார் பாண்டியராஜன்! படமுடியா இனித் துயரம் படமுடியாதராசே என்று ஜெய்சங்கர் அவரை நெட்டித் தள்ள முட்டியபோதெல்லாம், பரமபதம் அடைந்து விட்ட தன் தாயார் படத்தின் முன்னிலையில், 'அம்மா... பார்த்தியாம்மா உன் புள்ளை நிலைமையை?' என்று பாண்டியராஜன் நெக்கு விட்டு உருகுவதும் ஜெய்சங்கர் இக்கித் இணைறி மனம் திரும்புவதும் வேடிக்கை.

காவல் துறையினரின் கடும் மறிப்புக்கே டேக்கா கொடுத்த ரௌடியாம். அவனை ஒண்டிக்கு ஒண்டியாய் அடித்துச் சாகடித்து விட்டதாய்ப் பாண்டியராஜனுக்கு மானாவாரிப் புகழ் மாலைகள், பணமுடிச்சு! அந்த நிமிஷம் வரை முறை மாமனை அலட்சியம் செய்து வந்த ரஞ்சனி, அவருக்கு மாலை சூட்ட நாணிக் கோணி வந்து, அரைப் பார்வையும் குறுஞ்சிரிப்புமாய் ஆரம்பித்து, அப்புறம் இருவரும் ஒரே குபீர்க் கலகலப்பில் ஒன்றிப் போவது சரஸரசம்தான். பெரும்பாலும் கிராமத்து வட்டாரத்தில் சுழன்று கொண்டிருந்த ரஞ்சனிக்கு மாடர்ன் டிரஸ் படு சிக்கென்று பொருந்துகிறது!

அக்கா மகனுக்குத் தகுதிக்கு மீறிய புகழ் வந்து சேர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்துப் பார்த்துச் சங்கடத்தில் நெளிந்து முகத்தில் வயிற்றெரிச்சலைக் கொட்டும் போதெல்லாம் ஜெய்சங்கர் பரிமளிக்கிறார். 'கொலைக் குற்றவாளி என்று கருதப்பட்ட' அக்காள் மகனைக் கையும் மெய்யுமாய்ப் பிடித்துத் தரும் நோக்கத்துடன்தான் அவர் தன் ஒரே அன்புத் தங்கைக்கு இஷ்டமில்லாத இடத்தில் கல்யாணம் செய்து வைக்க முனைந்தாரா? குழப்பம்.

துப்பறியும் சாம்புத்தனமான கட்டத்தில் ஆரம்பித்த போது, பாண்டியராஜனின் கையாலாகாத்தனமான அசட்டுப் பாத்திர அறிமுகத்துக்கு ஏற்றாற் போல் இருக்கிறதே என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்தால் —

அந்த இன்டர்நேஷனல் ரௌடி செத்தது ஹார்ட் அட்டாக்கால் என்ற போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வெளியானதும்.. அடச் சை! வழக்கமான அசல் மசாலாக் கதாநாயகன் லெவலுக்குப் பூஞ்சைப் பாண்டியராஜனை உயர்த்திக் குளறுபடி பண்ணி விட்டார்கள். பூனை யானையுடன் மோதிச் சாய்ப்பது மாதிரி இவர் சும்மா அந்தர்பல்டிகளும் பாய்ச்சல்களுமாய்க் காட்டி அத்தனை எதிரிகளையும் மல்லாத்துவது கேலிக்கூத்து.

பக்கபலமாய் வரும் வெ. ஆ. மூர்த்திக்குக் கடைசி கட்டப் பெண் வேடமும் குலுக்கும் தளுக்கும் பாந்தமாய்ப் பொருந்துகிறது— கொஞ்சம் நிஜச் சிரிப்பு மூட்டுகிறார்.

சேகரைத் திருப்பத்துக்குப் பலி தந்து வில்லனாக்கி அசிங்கப்படுத்தி விட்டார்கள்.

சும்மா சொல்லக் கூடாது காமெரா ரொம்ப அந்தஸ்தோடு ஒளி காட்டியிருக்கிறது. அதிலும் அந்த ஹார்பர் வட்டாரத்துக்குள் கோணச் சுழற்சி சூப்பர்.

சீரியலில் சிரிப்பைப் புகுத்தி ஓர் இரண்டுங்கெட்டான் தனமானதாய்ப் பண்ணி விட்டார்கள். பாண்டியராஜனின் கிண்டலும் கேலியும் திருட்டுப் பார்வையும் வெகுளித்தனமும் இன்னும் கொஞ்ச நாளைக்குத் தள்ளும்.

— பி. எஸ். எஸ்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.


இப்போது!
இரட்டைப் புத்துணர்ச்சி
ஸின்த்தால் + லைம்
புதிய ஸின்த்தால் லைம் சோப்பிலே டிசிசி உள்ளது. இது உடல் துர்நாற்றத்திற்குக் காரணமான பாக்டீரியாக்களை ஒழிக்கிறது. மற்றும் எலுமிச்சை கூடுதல் புத்துணர்ச்சியை வழங்குகிறது.
ஸின்த்தால்
உங்களுக்கு உடல் தன்னம்பிக்கை தரும் சோப்.
Godrej
CINTHOL
THE LIME-FRESH DEODORANT SOAP
LIME
CINTHOL

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

